24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 | கதிர் 108 | பங்கு 01ஆம் நாள் | வெள்ளிக்கிழமை | 15 மார்ச் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050

## காணாமல் போனோரின் மனைவியர் மீது அரச அதிகாரிகளால் பாலியல் துர்நடத்தை

### அமெரிக்கா குற்றச்சாட்டு

வொஷிங்டன், மார்ச் 15
காணாமல்போன தங்கள் கணவன்மார்கள் குறித்து தகவல்களை கோரிய மனைவிமார் அரச அதிகாரிகளாலும் பாதுகாப்புத் துறை சார்ந்த அதிகாரிகளாலும் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று தகவல் கிடைத்துள்ளது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.
அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள 'கடந்த வருடத்தில் உலக நாடுகளின் மனித உரிமை நிலவரம்' குறித்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கையின் மனித உரிமை நிலவ » 19

## கம்பன் விழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 15
அகில இலங்கைக் கம்பன் கழகம் கடந்த 39 ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறது. கம்பன் கழகத்தின் கம்பன் விழாக்களின் வரிசையில் 2019ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாணக் கம்பன்விழா இன்று ஆரம்பமாகிறது. இன்று முதல் நாளைமறுதினம் வரையில் இந்த விழா நடைபெறவுள்ளது.
இன்று மாலை 4.30 மணிக்கு, நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் தட்சணாமூர்த்தி உதயசங்கர் குழுவினரின் மங்கல இசையுடன் விழா நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கவுள்ளன. (ம)



## 30/1 தீர்மானத்தில் இருந்து விலக வேண்டும் இலங்கை

### பதறுகிறார் மகிந்த

கொழும்பு, மார்ச் 15
ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தில் இருந்து இலங்கை அரசு விலகிச் செல்ல வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் வாய்மொழிமூல கேள்விக்கான பதில் நேரத்தில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
தற்போது நடைபெற்றுவரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் » 19

## ஐ.நா. கூறுகின்றவற்றை அப்படியே ஏற்பதில்லை

### அழுத்தம் திருத்தமான நிலைப்பாடு இது என்கிறார் அயலுறவுத்துறை அமைச்சர்

கொழும்பு, மார்ச் 15
ஐ.நா. ஆணையாளர் கூறுகின்ற சகல விடயங்களையும் அப்படியே ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று தெரிவித்தார் அயலுறவுத் துறை அமைச்சர் திலக் மாரப்பன.
ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்திலிருந்து இலங்கை விலகிச் செல்ல வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் குறிப்பிட்டார். அதற்கு பதிலளித்து உரையாற்றிய போதே திலக் மாரப்பன மேற்கண்டவாறு தெரிவித்தார். » 19



## பல்கலையின் மருத்துவ கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 15
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தின் ஏற்பாட்டில் மருத்துவக் கண்காட்சி பல்கலைக் கழக கிளிநொச்சி வளாகத்தில் ஏப்ரல் மாதம் 2ஆம் மற்றும் 3ஆம் திகதிகளில் இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தின் 40ஆவது ஆண்டு நிறைவையொட்டி 'புத்துயிர்ப்பை நோக் » 19

## 'ஒக். 26' அரசியல் சூழ்ச்சியே ஐ.நாவின் பிடிக்குக் காரணம்

### ஆணையாளரின் அறிக்கையை உதாசீனம் செய்ய வேண்டாம் என சந்திரிகா அம்மையார் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 14
'இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்லே பச்செலெட் வெளியிட்டுள்ள அறிக்கை மிகவும் பாரதூரமான அறிக்கை. இதை இலங்கையில் ஆட்சியில் உள்ள எவரும் உதாசீனம் செய்யக்கூடாது. 2018 ஒக்டோபர் 26 அரசியல் சூழ்ச்சியே இலங்கை மீதான ஐ.நாவின் இறுக்கமான பிடிக்குக் காரணமாகும் இவ்வாறு முன்னாள் அரச தலைவர் சந்திரிகா » 19

see more news in
newuthayan.com

## மன்னார் மனிதப் புதைகுழி குறித்த ஆய்வறிக்கை விதிகளுக்கு முரண்!

### ஐ.நா. சபையில் இடித்துரைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 15
மன்னார் மனிதப் புதைகுழி தொடர்பான கார்பன் ஆய்வறிக்கை பன்னாட்டு விதிமுறைகளுக்குப் புறம்பானது என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இடித்துரைக்கப்பட்டுள்ளது.
ஜெனீவாவில் நடைபெற்றுவரும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் » 19

## குடிதண்ணீர் பிரச்சினைபற்றி எவருக்கும் அக்கறையில்லை!

### இப்படிக் கூறுகிறார் ஆளுநர்

வடக்கில் உள்ள குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க எவரும் எந்தவொரு திட்டத்தையும் முனவைக்கவில்லை என்று தெரிவித்தார் வடமாகாண ஆளுநர் ராகவன்.
(விரிவு பக். 9)

## யாழ். மன்னார் தண்ணீர் பிரச்சினைக்கு தீர்வாகின்றது பாளியாறு நீர்த்தேக்கம்!

### வடமாகாண அபிவிருத்தி அமைச்சு பரிசீலனை

யாழ்ப்பாணம், மார்ச் 15
யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களின் குடிதண்ணீர் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில், பாளியாறு நீர்த்தேக்கத்தை பயன்படுத்தவுள்ளதாக தேசிய கொள்கைகள் பொருளாதார அலுவல்கள் மற்றும் வடமாகாண அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.
வடக்கில் குடிதண்ணீர் பிரச்சி » 19



DFCC சேமிப்பு
ரூ. 2500/= அல்லது அதற்கு மேற்பட்ட அனைத்து சேமிப்புகளுக்கும் இலங்கையின் அதிகூடிய வட்டி.
நீங்களும் இன்றே DFCC வங்கிக் கிளைக்கு வந்து DFCC WINNER சேமிப்புக் கணக்கை ஆரம்பியுங்கள்.
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
24மணிநேர அழைப்பு நிலையம்: 0112 350000
www.dfcc.lk
DFCC வங்கி

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## கன்னிராசி அன்பர்களே!

*கலகலப்பான பேச்சால் கவலையை மறக்கடிக்கும் கன்னி ராசி அன்பர்களே! 13.2.2019 முதல் 31.8.2020 வரை, ராகுவும்-கேதுவும் உங்கள் வாழ்க்கையில் புதுப்பயணத்தை வழங்கப் போகிறார்கள்.*




**ராகு பகவான் அருளும் பலன்கள்**

இதுவரை உங்களின் ராசிக்கு பதினோராம் வீடான லாப வீட்டில் அமர்ந்து கொண்டு பிரபலங்களின் நட்பு, திடீர் பணவரவு, வாகன வசதிகள் என பல வகையிலும் முன்னேற்றம் தந்த ராகு பகவான், இப்போது உங்கள் ராசிக்குப் பத்தாவது வீட்டில் வந்து அமர்கிறார்.

புதிய முயற்சிகளில் வெற்றி பெறவைப்பார். சதா சர்வகாலமும் ஓடி ஓடி உழைத்துக் கொண்டிருந்த நீங்கள், இனி அதற்கான நற்பலனை அடைவீர்கள். குடும்பத்தில் அமைதி தொடரும். கணவன், மனைவிக்குள் அந்நியோன்யம் பிறக்கும். பணவரவு உண்டு.

இந்த ராகு சுயமாக சிந்திக்க வைப்பதுடன், சுயமாக தொழில் செய்யும் வல்லமையையும் கொடுப்பார். உங்களிடமிருந்த பய உணர்வு, தடுமாற்றம் எல்லாம் நீங்கும். குடும்ப வருமானம் உயரும். மூத்த சகோதரருடன் இருந்த கருத்து மோதல்கள் விலகும்.

உங்களின் நல்ல மனசைப் புரிந்து கொண்டு சிலர் உங்களுக்கு உதவுவார்கள். மனைவிவழி உறவினர்களால் ஆதாயம் உண்டு. குலதெய்வக் கோயிலுக்குச் சென்றுவாருங்கள். குழந்தை இல்லாத தம்பதியருக்குக் குழந்தை பாக்கியம் உண்டாகும். வீடு, வாகன வசதி பெருகும். வீண் அலைச்சல்கள் நீங்கும். இனி திட்டமிட்டு எதையும் செய்வீர்கள்.

ராசிக்கு 10ல் ராகு வருவதால் வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். பிரபலங்கள் அறிமுகம் கிடைப்பதுடன் அவர்களால் உதவியும் உண்டு. மகனின் திருமணத்தை ஊரே மெச்சும்படி நடத்தி முடிப்பீர்கள். நண்பர்களுடன் இருந்து வந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும்.

கன்னிப்பெண்களுக்குப் பெற்றோரின் ஆதரவு கிட்டும். தடைப்பட்ட கல்வியைத் தொடரு வார்கள். வேலையில்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். படபடப்பு, அழுத்தம் விலகும். அரசியல்வாதிகள் தலைமையை அனுசரித் துப் போவது நல்லது. அக்கம்பக்கத்து வீட்டாரின் அன்புத்தொல்லைகள் நீங்கும்.

வியாபாரத்தில் புதிய யுக்திகளைக் கையாண்டு பற்றுவரவை உயர்த்துவீர்கள். சந்தை நிலவரம் அறிந்து முதலீடு செய்வீர்கள். பழைய சரக்குகள் விற்றுத் தீரும். வராமலிருந்த பாக்கிகளும் வசூலாகும். கடையை அழகுபடுத்தி அதிக வேலையாள்களைப் பணியில் அமர்த்துவீர்கள். வாடிக்கையாளர்களைக் கவரும் விதமாக புதிய சலுகைகளை அறிவிப்பீர்கள். கூட்டுத்தொழிலில் தன்னிச்சையாக முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். தகுந்த அறிஞர்களிடம் ஆலோசனை செய்து, அவர்களின் அறிவுரைப்படி செயற்படுவதால் முன்னேற்றம் காணலாம். புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவு கிடைக்கும் என்றாலும் உங்களைப் பற்றிய வீண் வதந்திகளும் பழியும் வரக்கூடும். ஆகவே, எந்த விஷயத்திலும் கவனமாகப் பணியாற்றவும்.

சிலருக்கு திடீர் இடமாற்றம் கிடைக்கலாம். அதற்காக வருந்தவேண்டாம். புதிய அனுபவங்களைக் கற்றுக்கொள்வீர்கள். சிலருக்கு, மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். அடிக்கடி விடுப்பில் செல்லாதீர்கள்.

கணினித்துறையினருக்கு வேலை தொடர்பான நெருக்கடிகள் அதிகரிக்கும். எனினும் மனம் தளராமல் பணியாற்றுங்கள் முன்னேற்றம் உண்டு. புதிய வாய்ப்புகள் வந்தாலும் யோசித்து முடிவெடுக்க வேண்டும்.



கலைஞர்களின் திறமைக்குப் பரிசு, பாராட்டுகள் கிட்டும். அவர்கள் வெகுநாள்களாக மிக ஆர்வமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தபெரியநிறுவனத்திலிருந்து புது வாய்ப்பு வந்து கதவைத் தட்டும்!

**கேது பகவான் அருளும் பலன்கள்**

இதுவரையில் உங்கள் ராசிக்கு ஐந்தாம் இடத்தில் அமர்ந்துகொண்டு, முன்கோபத்தால் பிரிவு, உறவினர்கள் மத்தியில் கருத்துவேறுபாடு, பல கசப்பான அனுபவங்கள் ஆகியவற்றை அளித்து வந்தார் கேது. இப்போது ராசிக்கு நான்காம் வீட்டில் அமர்கிறார். ஆகவே, பதற்றத்திலிருந்து விடுபடுவீர்கள். கனிவான பேச்சாலேயே காரியங்களைச் சாதிப்பீர்கள். எந்த விடயத்திலும் தெள்ளத் தெளிவாக முடிவுகள் எடுப்பீர்கள்.

மற்றவர்களுக்கு ஆலோசனை வழங்கும் அளவுக்கு அனுபவ அறிவு கிடைக்கும். வீட்டில்தடைப்பட்டிருந்தசுபகாரியங்கள் இனி நடக்கும். பிள்ளைகளின் பிடிவாத குணம் மாறும். மகனுக்கு அயல்நாட்டில் வேலை கிடைக்கும். உங்களில் சிலர், வீட்டுக்குத் தேவையானதை வாங்குவீர்கள். சொந்தவீடு கனவு நனவாகும்.

வெளிமாநிலப் புண்ணிய தலங்களுக்குச் சென்று வருவீர்கள். அரச அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். ஆனால் ராசிக்கு 4ஆம் வீட்டில் கேது அமர்வதால், முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடும்போது ஒருமுறைக்கு, பலமுறை யோசித்து கையெழுத்திடுவது நல்லது. தாயாருக்கு மருத்துவச் செலவுகள், வந்துபோகும். வீடு கட்டத் தேவைப்படும் பணத்தைக் கையில் வைத்துக் கொண்டு, வீடு கட்டத் தொடங்குவது நல்லது. சட்டத்தரணிகளை வழக்கறிஞரை மாற்றவேண்டி வரும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் மற்றும் பயணச் செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில், உங்களின் அணுகுமுறையை மாற்றிக்கொள்வீர்கள். வேலையாள்களின் ஆதரவு உண்டு. உத்தியோகத்தில் வேலைச் சுமை ஒருபுறம் இருந்தாலும், மறுபுறம் பாராட்டு, பதவி உயர்வுகளும் வாய்க்கும். மொத்தத்தில் இந்த ராகுகேதுப் பெயர்ச்சி, உங்களுக்கு வேலைச்சுமையை தந்தாலும், விடாமுயற்சி, கடின உழைப்பால் உங்களை முன்னேற வைப்பதாக அமையும்.

(தொடரும்)

# பெண்களே எந்த மாதத்தில் நீங்கள் பிறந்தீர்கள்?

**ஜனவரி**

ஜனவரி மாதம் பிறந்த பெண்கள் பேரார்வம் உள்ளவர்களாகவும், இலட்சியங்கள் நிறைய கொண்டவர்களாகவும் இருப்பார்கள். எந்த ஒரு விடயத்தையும் சீரியஸாக எடுத்துக் கொள்வார்கள். இவர்கள் தங்கள் உணர்வை அவ்வளவு விரைவாக வெளிப்படையாக கூற மாட்டார்கள். இவர்களை போன்றே இருக்கும் நபர்களுடன் தான் அதிகம் பழகுவார்கள்.

**பெப்ரவரி**

பெப்ரவரி மாதத்தில் பிறந்த பெண்கள் சற்று 'ரொமான்டிக்காக' இருப்பார்கள். இவர்களிடம் பொறுமை காத்து பழக வேண்டும், அவசரம் காட்ட கூடாது. அனைவராலும் இவர்களை புரிந்துக் கொள்ள முடியாது. இவர்களுடைய 'மூட்' அடிக்கடி மாறும்.

**மார்ச்**

மார்ச் மாதத்தில் பிறந்த பெண்கள் வலிமையான கவர்ச்சி இருக்கும். இவர்கள் எளிதாக அனைவரையும் ஈர்த்துவிடுவார்கள். மிக நேர்மையானவர்களாக, ஆளுமை செலுத்தும் நபர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் அவ்வளவு எளிதாக காதலில் விழுந்துவிட மாட்டார்கள். மார்ச் மாதத்தில் பிறந்த பெண்கள் பழக எளிமையானவர்கள்.

**ஏப்ரல்**

ஏப்ரல் மாதத்தில் பிறந்த பெண்கள் இராஜ தந்திரிகள். அனைவருடனும் மிக எளிதாக பழகி பேசிவிடுவார்கள். சிலர் பொறாமை குணமும் கொண்டிருப்பார்கள். இது அவ்வப்போது வெடிக்கும். தாங்கள் முழுமையாக நம்பும் நபர்களிடம் மட்டுமே தங்கள் மனதை திறந்து காட்டுவார்கள்.

**மே**

மே மதத்தில் பிறந்த பெண்க்ள் மிகவும் உறதியான விடாப்பிடியான குணம் கொண்டவர்கள். இவர்கள் நேர்மையாக பழகுவார்கள். இவர்களுக்கென தனிக் கோட்பாடுகள் இருக்கும். ஈர்ப்பு மிக்க இவர்களுடன் எளிதாகபழகிவிட முடியாது. காதலில்விழுவதும்கடினம். இவர்களை அவ்வளவு எளிதாக மறக்கவும் முடியாது.

**ஜூன்**

ஜுன் மாதத்தில் பிறந்த பெண்கள் ஆர்வமிக்கவர்களாக இருப்பார்கள். இவர்கள் எளிதாக அனைவருடனும் பேசுவார்கள். கற்பனை திறன் அதிகமாக இருக்கும். நீங்கள் நினைக்கும் முன்னரே அதை பேசி முடித்துவிடுவார்கள் இவர்கள். ஒளிவுமறைவு இன்றி நடந்துக் கொள்வார்கள்.

**ஜூலை**

ஜுலை மாதத்தில் பிறந்த பெண்கள் நேர்மை, அறிவு, அழகு, மர்மம் கலந்த கலவை. மோதல்கள் ஏற்படாமல் வாழ விரும்புவார்கள். அனைவரிடமும் கனிவாக நடந்துகொள்வார்கள். இவர்களை ஏமாற்றிவிட்டால், மறந்துவிட வேண்டியது தான் கதி. மீண்டும் இணைய மாட்டார்கள்.

**ஓகஸ்ட்**

ஆகஸ்ட் மாதத்தில் பிறந்த பெண்கள் தனித்துவமானவர்கள். தன்னம்பிக்கை அதிகமாக இருக்கும். நல்ல உள்ளம் கொண்டிருப்பார்கள். இவர்களுடன் மோத நினைக்க வேண்டாம். இவர்கள் உங்களை கண்டிப்பாக வென்றுவிடுவார்கள். இவர்களிடம் நகைச்சுவை உணர்வும் அதிகமாக இருக்கும். இவர்கள் இருக்கும் இடத்தில் இவர்கள் தான் அனைவராலும் ஈர்பபார்.

**செப்ரெம்பர்**

செப்ரெம்பர் மாதத்தில் பிறந்த பெண்கள் அன்பு, கட்டுப்பாடு, அழகின் கலவை. யாரையும் அவ்வளவு எளிதாக மன்னித்துவிட மாட்டார்கள். இவர்களுடன் கவனமாக நடந்துகொள்ள வேண்டும். இவர்களுக்கு குறுகிய கால உறவுகள் பிடிக்காது. ஒருவருடன் பழகினால் அவருடன் நீண்ட நாள் உறவில் இணைந்திருக்க வேண்டும் என்றே எண்ணுவார்.

**ஒக்பரோபர்**

ஒக்ரோபர் மாதத்தில் பிறந்த பெண்களிடம் குணாதிசயங்கள் மிக வலுமையாக இருக்கும். உணர்ச்சிவசப் பட கூடிய பெண்களாக இருப்பார்கள். அனைவரிடமும் வெளிப்படையாக பேச மாட்டார்கள். தங்கள் மீது பொறாமை கொள்ளும் நபர்களையும் வெறுக்க மாட்டார்கள்.

**நவம்பர்**

நவம்பர் மாதத்தில் பிறந்த பெண்கள் மற்றவர்களை விட ஒருப்படி முன்னே இருக்க வேண்டும் என எண்ணுவார்கள்.பொய்களை வேகமாக கண்டுபிடித்துவிடுவார்கள். உண்மையாக இருக்க விரும்பும் இவர்கள், உண்மை மட்டுமே கேட்க விரும்புவார்கள்.

டிசம்பர்

மாதத்தில் பிறந்த பெண்களிடம் பொறுமை பெரிதாக இருக்காது. ஆனால் இவர்கள் லக்கியான நபர்கள். சூழ்நிலைக்கு ஏற்ப நடந்துக் கொண்டு வெற்றிக்கனியை பெற்றுவிடுவார்கள். திறந்த மனதுடன் பேசுவார்கள். இவர்களுக்கானவை இவர்களுக்கு கிடைக்காமல் போகாது.

35 years MEDICARE FOR WOMEN

பெண்கள் தினத்தை முன்னிட்டு விசேட சலுகைகள்!

INTERNATIONAL ACCREDITED CLINIC
GCR
Prashanth Fertility Research Centre
FERTILITY

PFIRC

# பிரசாந்த்

## குழந்தையின்மை சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம்

77, HARRINGTON ROAD, CHETPET, CHENNAI - 600 031, TAMIL NADU, INDIA

குறைந்த கட்டண IVF சிகிச்சை!

26 ஆண்டுகளாக இலங்கைத் தம்பதிகளின் நம்பிக்கையைப் பெற்று குழந்தைக் கனவை நனவாக்கிய, உலகளவில் சிறப்பு அங்கீகாரங்களைப் பெற்ற தமிழக மருத்துவமனை!

பிரசாந்த் மருத்துவமனையின் தலைமை மருத்துவர் டொக்டர் கீதா ஹரிப்ரியா அவர்களை நேரில் சந்திக்க...

முன்பதிவுக்கு:
075 40000 12
075 492 7575

## யாழ்ப்பாணம்

medicare

**15th, 16th, 17th - March 2019,**
**Veerasingam Hall, Stall No. L1**



சர்வதேச முறைமையின் கீழ் குழந்தைப்பேற்றை உறுதிப்படுத்தும் புதிய தொழில்நுட்பங்களுடனான அதிநவீன சிகிச்சைகள்!

**பெண்களுக்கு:**
- PCOD
- எண்டோமெட்ரியோசிஸ் .நாரிழைகள் .குழாய் அடைப்பு
- [ஹிஸ்டராஸ்கோப்பி / 3D லாப்ராஸ்கோப்பி]
- எம்பிரியோஸ்கோப்
- எம்பிரியோ க்ளு
- சைட்டோபிளாஸ்மிக் டிரான்ஸ்பர்
- பிஆர்பி (Platlet rich plasma)
- பிஜிஎஸ் (Pre genetic screening)

**ஆண்களுக்கு:**
- விந்தணு பகுப்பாய்வு.
- டிஎன்ஏ (DNA) கூறாய்வு.
- இம்சி (IMSI)
- அஸூஸ்பெர்மிக்
- 40x மைக்ரோஸ்கோப்

# பிரசாந்த் மருத்துவமனை தகவல் நிலையம்

21, ஃப்ரேசர் அவின்யூ, தெஹிவளை.

infopfrcsl@gmail.com www.pfrcivf.com 011 2 730987

---

# உங்கள் கிணற்று நீர் பருகுவதற்கு உகந்ததா?

## நீரில் உள்ள பிரச்சினைகளின் தீர்வாக நாங்கள்....

12 MONTHS WARRANTY

- இலவச நீர்ப்பரிசோதனை
- இலவச ஆலோசனை
- 24 Hours விற்பனைக்குப் பிந்திய சேவை
- Life Time service warranty





SPECIAL DISCOUNT 5% OFF SPECIAL DISCOUNT

நீங்கள் அருந்தும் நீர்
Yarl Smart Water Filter நீர் ஆக
இருந்தால் நீங்களும் SMART

உங்கள் வீடுகளில் / தொழிற்சாலைகளில்
வேறு நிறுவனங்களினால் பொருத்தப்பட்டடிருக்கும்
நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களையும் எம்மால் சரிபார்த்து தரப்படும்.

# Yarl Smart Water Solution (Pvt) Ltd

**Hotline:- 021 430 0044 , 077 057 3684 , 077 473 9802 , 077 112 6410**

**No.319,K.K.S Road,Jaffna. / Karadippokku Junction,A9 Road,Kilinochchi.**

# 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 24 . 12 . 1988



மறைவு 17 . 02 . 2019

## அமரர் தர்மலிங்கம் கீதாகரன்

(ஆசிரியர்- யா/ கரம்பொன் சிறிய புஷ்பம் மகளிர் மகா வித்தியாலயம், ஊர்காவற்றுறை)

கடந்த 17.02.2019 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எமது புதல்வன் அமரர் தர்மலிங்கம் கீதாகரன் அவர்களின் 31ம் நாள் அந்தியேட்டி கிருத்திய நிகழ்வு 19.03.2019 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். வீட்டுக்கிருத்திய நிகழ்வு 20.03.2019 புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இல.505, ஸ்ரான்லி வீதி, அத்தியடி, யாழ்ப்பாணத்திலுள்ள எமது இல்லத்தில் நடைபெறும். அன்றைய தினம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது புதல்வன் அமரத்துவமடைந்த அன்றும், இறுதிக்கிரியை நிகழ்வின் போதும் நேரில் வந்து ஆறுதல் கூறியோர்களுக்கும், தொலைபேசி மூலமாக ஆறுதல் கூறியோர்களுக்கும், அஞ்சலி பிரசுரங்கள், பதாகைகள் வெளியிட்டு அஞ்சலி செலுத்தியோர்களுக்கும், புலம்பெயர் நாடுகளிலிருந்து தொலைபேசி ஊடாக தமது அனுதாபத்தைத் தெரிவித்தோர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அமரரின் பூதவுடல் இறுதி ஊர்வல நிகழ்வின்போது கலந்துகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், யா/கரம்பொன் சிறிய புஷ்பம் மகளிர் மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், வவுனியா கல்வியியல் கல்லூரி ஆசிரிய மாணவர்கள், வ/ஓமந்தை கோயில் குஞ்சுக்குளம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அமரரின் ஆத்மா சாந்தி நிகழ்விற்கு
**இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாகஏற்றுக்கொண்டு**
**சமூகமளிக்குமாறு தயவுடன் கேட்டுகொள்கின்றோம்.**

**இல.505, ஸ்ரான்லி வீதி,**
**அத்தியடி யாழ்ப்பாணம்.**

குடும்பத்தினர்
(திரு.திருமதி தர்மலிங்கம் வாடாமலர்)
**021 222 8052, 077 542 1434**

## பணியாளர் தேவை

யாழ்.கொக்குவில் பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்குப் பொதி செய்யும் பெண்கள் உடன் தேவை.
**சம்பளம் :- 15,000 முதல் 20,000 வரை எடுக்கலாம்**

**077 447 9815** (IN 9642) (11.17)

## பணிப்பெண் தேவை

வவுனியாவிலுள்ள வயோதிப ஆண்/ பெண் இருவரையும் பராமரிப்பதற்கு 35 - 45 வயதுடைய பணிப்பெண் உடன் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: **077 446 8444**
**077 758 5919**

(CS 00491) (04.17)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம் 10 . 11 . 1936



மறைவு 13 . 02 . 2019

## அமரர் பொன்னுத்துரை சந்திரசேனா

கடந்த 13.02.2019 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (15.03.2019) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும். அந்நிகழ்வில் பங்குகொண்டு அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மான்ஸ் பாடசாலை வீதி,**
**உடுவில்.**
**077 923 5571** (IN 9641)(14.17)

குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவலைகள்



## திருமதி செல்வம்மா (செல்வதி) பரமசிவம்

உதிப்பு **23.07.1934**

உதிர்வு **14.02.2019**

அருகிருந்து அரவணைத்து அன்பு செய்தீர் – எம்மை
ஆறுதலும் தந்தெமக்கு ஆதரவாய் நின்றீர்
மேதினியில் சிறப்புடனே நாமும் வாழ – உம்மை
மெழுகாக உருக்கி நீரும் வாழ்வு தந்தீர்
மேன்மைகொள் இறையவனின் சந்நிதியில்
மேலான நிறை அமைதி கொண்டிடுவீர்

கடந்த 14.02.2019 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (16.03.2019) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். தாங்களும் வருகை தந்து அம்மாவின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
**(இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

முருகமூர்த்தி கோயிலடி,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(IN/9638)(11)

சிவசெல்வம் – பஞ்சேஸ்வரி,
சிவதாஸ் – தபோதினி,
பத்மசேகரம் – சிவா,
சிவசந்தர் – நிர்மலா,
அஞ்சலன் – சிவபிரியா

## சித்திரகுப்தனும் பிரம்மனும்...

பெண்கள் தொடர்ந்து ஆண்டு தோறும் வரலட்சுமி பூஜை செய்து வந்தால், இப்பொழுது இருக்கும் கணவனே , ஏழு ஜென்மத்துக்கும் கணவனாக அவர்களுக்கு கிடைப்பான் , ஆனால் அதில் ஒரு சிக்கல் இருக்கிறது .

என்ன சிக்கல் ..?? பிரம்மா வினவினார்.

பெண்கள் அதே கணவன்தான் வேண்டும் என்கிறார்கள் , ஆனால் ஆண்கள் வேறு பெண்தான் வேண்டும் என்கிறார்கள், அதுதான் சிக்கல் . இருவரையும் திருப்தி செய்ய, என்ன செய்ய வேண்டும் ..??

இடையில் குறுக்கிட்ட நாரதர் சொன்னார் ,பூமியில் எல்லாம் தெரிந்த ஞானி ஒருவர் இருக்கிறார் , அவர் பெயர் சாணக்கியர், அவரைப் பாருங்கள் , இதற்கு தீர்வு கிடைக்கும் என்றார் .சித்திரகுப்தர் , சாணக்கியரை சென்று பார்த்தார் சாணக்கியரும் எவ்வளவோ யோசனை செய்து பார்த்தார் , ஒன்றும் சரிவரவில்லை. கடைசியாக , அந்த கணவன்களிடமே கேட்டு விடுவோம் என்று முடிவு செய்து , அவர்களிடம் பேசினார்கள். கணவன்மார்களில் ஒருவர் ,ஒரு யோசனை சொன்னார் . அதைக்கேட்டு சாணக்கியர் அவரை கட்டிப்பிடித்து வாழ்த்து கூறிவிட்டு இதை விட சிறந்த தீர்வு வேறு எதுவும் இருக்க முடியாது என்று கூறிவிட்டு இதை அந்த பெண்களிடமே கேட்டு விடுங்கள் என்று சொன்னார் . இந்த தீர்வை , சித்திரகுப்தன் அந்த பெண்களிடம் கூறினார் . அதற்கு அந்த பெண்கள் சித்திரகுப்தனை கையெடுத்து கும்பிட்டுவிட்டு எங்களுக்கு அடுத்த ஜென்மமே வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள் .

அப்படி என்னதான் தீர்வு .. அது " ..??

(சித்திரகுப்தன் அந்த பெண்களிடம் , பிரம்மா நீங்கள் கேட்ட அதே கணவன்தான் வேண்டும் என்ற கோரிக்கையை'ஏற்றுக்கொண்டார் , ஆனால் ஒரு நிபந்தனை , ஏழு ஜென்மத்திற்கும் அதே மாமியார்தான் இருப்பார் , அதற்கு உங்களுக்கு சம்மதமா என்றார்)


### நாகபூஷணி திருமண சேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும்.

257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

021 222 9306/077 138 7596

### தேவை

யாழ்ப்பாண மாவட்டம் உஷன் பகுதியில் தென்னந்தோட்டத்தில் (Farm) தங்கி வேலைசெய்யக்கூடிய ஆரோக்கியமான வேலையாள் தேவை. கவர்ச்சகரமான சம்பளம் வழுங்கப்படும்.

077 592 5371, 021 205 2080

### கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Honda Civic கார் விற்பனைக்கு Silver Colour, Auto, Low mileage

தொடர்பு - 070 383 8833


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு 16 . 02 . 1934



இறப்பு 15 . 02 . 2019

வல்வெட்டித்துறை

### கோணநாயகம் செல்வவிநாயகம்

கடந்த 15.02.2019 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் கோணநாயகம் செல்வவிநாயகம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (16.03.2019) சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி ஊறணி புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து மு.ப 11.30 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சாந்தம்
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.
077 978 9579

## அந்தியேட்டி அழைப்பு



கடந்த 14.02.2019 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் இளையதம்பி மெய்யழகன் (செல்வம்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (16.03.2019) சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் வதிரி தட்டுகளரிப் பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து 11.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண கிரியையிலும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

புனிதம், வதிரி, கரவெட்டி.

குடும்பத்தினர்.
D.M. வேதாபரணம்

## மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 11 . 1946



இறப்பு 14 . 03 . 2019

### மனுவல் பத்திநாதர்

பலாலி தொட்டுவையைப் பிறப்பிடமாகவும், இல. 26, பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மனுவல் பத்திநாதர் 14.03.2019 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவல் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தேவசகாயம் - திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மரியமலரின் அன்புக் கணவரும், ராஜினி, சறோஜினி, றஞ்சினி (இத்தாலி), வினோத், சுதர்சினி, வினோதினி, நீசாளினி, டயானா ஆகியோரின் அன்புத் தந்தையும், நல்லம்மா (இந்தியா), பற்றிமா (மன்னார்), பிலுப்பையா ஆகியோரின் அன்புச் சகோதரனும், குமார் (சவுதி அரேபியா), அன்றூ (இத்தாலி), காமினி, எல்மோ, நிஷாந்தன், ராதன், சாள்ஸ் ஆகியோரின் அன்பு மாமனும், கரிஸ், டெசானா, நியான்சன், அன்றியா, செபேரா, எபிரோன், கைடன், கற்றியன், மெசிரோ ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி இன்று (15.03.2019)வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் புனித கொஞ்சேந்திமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.26,பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 615 8585, 077 656 9666

## 31ஆம் நினைவுநாள் அழைப்பு

உதிப்பு 10 . 09 . 1943



உதிர்வு 14 . 02 . 2019

திருமதி

### செல்லம்மா கிருஷ்ணகோபால்

கடந்த 14.02.2019 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (16.03.2019) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அம்மாவின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)

முதலாம் மைல் வீதி,
கிராம்புவில், சாவகச்சேரி.

(C 9647/15/18)


குடும்பத்தினர்.
077 671 6149


E.S Printers

357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com


## மரண அறிவித்தல்

### ஞானப்பிரகாசம் மிக்கேல்பிள்ளை (கண்டு)



மண்ணில் 13.06.1942 — விண்ணில் 09.03.2019

மாதனை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் மிக்கேல்பிள்ளை 09.03.2019 சனிக்கிழமை இலங்கையில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம்'- அன்னைமரியே தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விசேந்தி மேரிபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், மிக்கேல்பிள்ளை சென்மராக்கியின் (ராக்கி) அன்புக் கணவரும், மைக்சுசினின் (ஜர்லின்) அன்புத் தந்தையும், யேசேப் (கனடா), காலஞ்சென்றவர்களான மனுவேல்பிள்ளை சவரிமுத்து, மேரி றெஜீனா, மேரி திரேசா, லூர்த்அம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற ஜெயமேரிமலர் மற்றும் குருசுதாஸ், றோஸ், எலற்ரிசீயா (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், ஹரி, லாறா சாரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (15.03.2019) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்லை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காலானை, பத்தமேனி,
அச்சுவேலி.

(CS/24002)(11.17)

தகவல்:
குடும்பத்தினர்.

075 674 8906

## மரண அறிவித்தல்

### நாகமுத்து அரியரத்தினம் (சாரதி)



பிறப்பு 20.08.1936 — இறப்பு 14.03.2019

இல.39, செம்மணி வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து அரியரத்தினம் நேற்று (14.03.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - கனகமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், சீதாவின் அன்புக் கணவரும், கமலஹாசன், ஜெனித்தா, சுஜாத்தா, அமலராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அரியமலர் மற்றும் ரஞ்சிதமலர், தேவமலர், சந்திரமலர், அரசரத்தினம், செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கில்பேட்குணம் (பிரதம கணக்காளர் - மாவட்டச்செயலகம் - யாழ்ப்பாணம்), நிரஞ்சனா, அல்பிரட், சுமித்திரா ஆகியோரின் அன்பு மாமனும், ஜெறோபேட், ஜெனுஷியா, ஜெனிபர், யாழவன், மாதுளன், முகிலன், ஜெறோமி, ஜெனோவா, ஜனார்த்தனன், விதுர்ஷா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம், பாலசிங்கம், கந்தையா மற்றும் சுகிர்தராசன், மேரி யோசபின், செல்வமலர், புவனேஸ்வரி, மனோகரன், சந்திரன், சிறி, ரவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (15.03.2019) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பரி.யாக்கோபு ஆலய மயானத்துக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

39, செம்மணி வீதி,
நல்லூர்.

(cs.24008) (13.17)

தகவல் : ஜே. கில்பேட்குணம்
(பிரதம கணக்காளர் மாவட்ட செயலகம்- யாழ்ப்பாணம்)

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்
## பகிரங்க ஏலவிற்பனை

வலிகாமம் கிழக்கு பிரதேசசபைக்குரிய பின்வரும் பாவித்த பொருட்கள், விறகுகள், என்பன பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

காலம் :- 25.03.2019 திங்கட்கிழமை முற்பகல் 10.00மணி
இடம் :- தலைமை அலுவலகம்

**பொருட்கள் விபரம்**

இலத்திரனியல் பொருள்கள், உலோகப் பொருள்கள், மரத்தளபாடங்கள், உருக்கு அலுமாரி என்பன

**நிபந்தனைகள்**

01. ஏலதாரராக கலந்து கொள்பவர் ரூபா 100.00 மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக செலுத்தப்படல் வேண்டும்.
02. சித்தியடைந்த ஏலதாரர் அன்றைய தினமே ஒப்புக்கொண்ட ஏலத்தொகையின் முழுத் தொகையையும் செலுத்தி பொருள்களை அலுவலகத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.
03. மேலதிக விபரங்களை அலுவலக நாள்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**யு.ஜெலீபன்,**
**செயலாளர்,**
**வலிகாமம் கிழக்குபிரதேசசபை, புத்தூர்.**
**2019.03.15**


## சுதா மருத்துவமனை
கருத்தரிப்பு & மகளிர் நல மையம்

## குழந்தைப் பேறு இன்மையால் கவலைப்படுபவரா நீங்கள் ?

குழந்தைக்கான உங்கள் கனவை நனவாக்கிக் கொள்ளுங்கள்
இந்தியாவின் சுதா மருத்துவமனையின் செயற்கை கருவூட்டல் தொடர்பான 30 வருட அனுபவம் கொண்ட வெற்றி வாய்பை அதிகமாக தரும் தலைமை மருத்துவர். குழந்தை இன்மை சிகிச்சை நிபுணர் வைத்திய நிபுணர் பெண் வைத்தியர் **யாழ்ப்பாணம்** வருகிறார்

## இம்மாதம் 15ஆம் 16ஆம் 17ம் திகதிகளில்




**யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்**
**MEDI CARE** 2019இல் காலை 10 மணி முதல் மாலை 4 மணிவரை
சுதா மருத்துவமனை கூடத்தில் வைத்தியரை சந்தித்து இலவச ஆலோசனையை பெறலாம்

Rubbins Hospital (Pvt) Ltd
மருத்துவமனையில் (நெல்லியடி) மாலை 5 மணி முதல் 10 மணிவரை இலவசமாக முன்பதிவு செய்து, வைத்தியரை சந்திக்கலாம் தொடர்புகளுக்கு

**076 739 3911 / 071 2915157** www.sudhahospitals.com


## ஆரவ் நடிக்கும் ராஜா பீமா படக்குழுவின் முக்கிய அறிவிப்பு

பிக்பாஸ் நிகழ்ச்சியின் மூலம் பிரபலமான ஆரவ் நாயகனாக நடிக்கும் `ராஜ பீமா' படத்தின் படப்பிடிப்பு முழுவதுவமாக முடிந்து விட்டதாக படக்குழு அறிவித்துள்ளது.

பிக்பாஸ் நிகழ்ச்சிக்கு பின் ஆரவ் நாய கனாக நடிக்கும் நடிக்கும் படம் `ராஜ பீமா'. நரேஷ் சம்பத் இயக்கும் இந்த படத்தில் ஆரவ் ஜோடியாக ஆஷிமா நர்வால் நடிக்கிறார். கே.எஸ். ரவிக்குமார் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். ஓவியா ஒரு சிறப்பு தோற்றத்தில் நடித்திருக்கிறார். படத்தில் யானைக்கு முக்கிய கதாபாத்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. மனிதவிலங்குமுரணை பேசும் படமாக உருவாகியிருக்கி றது.

படத்தின் போஸ்ட் புரொடக்‌ஷன் பணிகள் விறுவிறுப்பாக நடந்து வரும் நிலையில், படத்தை கோடை விடுமுறையில் திரைக்கு கொண்டுவர திட்டமிட்டுள்ளனர்.

## கிருஷ்ணா அடகு சேவை
**பதிவு இல. J/DS/BR/472**

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் **2018 ஆம்** ஆண்டு **31.08.2018** இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் **2019 ஆம்** ஆண்டு **ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி (15.04.2019)** இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியா விட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ள வும். புதுப்பிக்கத் தவறின் **15.04.2019** ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர் களுக்கு அறியத்தருகின்றோம்.

**(2018 ஆம் ஆண்டு 06 ஆம் மாதம் முதலாம் திகதி முதல் 2018 ஆம் ஆண்டு 08 ஆம் மாதம் 31 ஆம் திகதிக்கு இடைப்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்)**

**உரிமையாளர் :- A.S.Surendran**

| | |
|---|---|
| **இல.370,** | **இல.09,** |
| **கே.கே.எஸ்.வீதி,** | **கன்னாதிட்டி வீதி,** |
| **யாழ்ப்பாணம்.** | **யாழ்ப்பாணம்.** |
| **021 490 0311** | **021 222 5046** |

(IN/9624)(11,17)

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி
## விலைமனு கேள்விக்கான அழைப்பு
## கண்காட்சி தொடர்பான பெறுகை -2019

01. பிராந்திய பெறுகை குழு தகுதியான. தகைமை வாய்ந்தவர்களிடம் கீழ்வரும் விடயங்களுக்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றது.
02. பெறுகை செய்யப்படவுள்ள விபரம் வருமாறு.

| இல | விபரம் | அளவு |
|---|---|---|
| 01 | கண்காட்சிக்கான அச்சிடல் மூலப்பொருட்கள்<br>1. பதாதைகள் (banners & Posters for publicity)<br>2. துண்டுப்பிரசுரங்கள் / கையேடுகள் (Leaflets A4/ Handbills)<br>3. திறப்பு விழா அழைப்பிதழ்கள் (Invitations for inauguration)<br>4. பெயர்ப் பலகைகள் (Name tags) | தேவைக்கேற்ப வேண்டப்படும் |
| 02 | துணை நிலையங்களுக்கான பகிர்வு (**Partition for Sub stall**)<br>உட்புற அமைப்பக்கள் 10X10 பரிமாணங்களைக் கொண்ட 250 துணைப்பகுதிகள் அமைக்க வேண்டும். கூரைகள் தேவையில்லை. | 250 |
| 03 | மின்சாரம் மற்றும் ஒலிபெருக்கி வசதிகள்<br>வெளிப்புறத்திற்கான மற்றும் துணைப்பகுதிகளுக்கான மின்குமிழ்கள் மற்றும் பிளக் வசதிகள். ஒலிபெருக்கி வசதிகள் | 250 |
| 4 | கூடாரங்கள் அமைத்தல் வாடகைக்கு<br>பாடசாலை மாணவர்களின் ஓய்வு எடுக்கக் கூடிய வகையில் அமைக்கப்பட வேண்டும் | 15 |
| 5 | வாடகை அடிப்படையில் தொலைக்காட்சி மற்றும் பல்லூடகக்கருவி வசதிகள். (3 நாட்கள்) | 50 |
| 6 | வாடகை அடிப்படையில் கதிரைகள் மேசைகள் மற்றும் துணை நிலையங்களுக்கான மின்விசிறிகள் | |
| 7 | நீர் வழங்கள் மற்றும் கழிவகற்றல் சேவைகள் | |

03. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. கிளிநொச்சியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் (0212285932).
04. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application For Bid Documents" என்ற படிவத்தினை அலுவலக நாள்களில் 15.03.2019 தொடக்கம் 25.03.2019 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
05. விலைக்கேள்விகள் 26.03.2019 திகதி முப 10.30மணிக்கு முன்பதாக பதிவு தபாலிலோ அல்லது நேரடியாகவோ அலுவலக கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பித்தல் வேண்டும். 26.03.2019 அன்று பெறுகைகள் யாவும் 10.30மணிக்கு திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**கிளிநொச்சி.**

(14,17)


## மாசற்ற நீரே குறைவற்ற செல்வம்

**"நீரினால் ஏற்படும் தொற்று நோய்களுக்கும் நீரிலுள்ள கடினமான தாது உப்புக்களால் ஏற்படும் சிறுநீரக கல், பித்தபைகல், சிறுநீரக அழற்சி போன்ற நோய்களை தவிர்ப்பதற்கு வடிகட்டிய நீரினை பருகுவது வைத்தியர்களால் பரிந்துரைக்கப்படுகின்றது."**



மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் அங்கிகரிக்கப்பட்ட எமது நிறுவனமானது வடமாகாணத்தில் சகல விதமான நீர் சார்ந்த பிரச்சினைகளுக்கு உயர்தர தீர்வினை வழங்கி வருகின்றது. இதன் நிமித்தம் இலங்கை சுகாதார அமைச்சினால் இன்று தொடக்கம்,

**காலம் : 15th,16th,17th March 2019**
**இடம்: வீரசிங்கம் மண்டபம்(யாழ்ப்பாணம்)**
காட்சி அறை - A36

நடாத்தப்படும் தேசிய சுகாதார நல கண்காட்சியில் பங்குபற்றி மக்களுக்கு நீர்/ நீர் சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க தயாரக இருக்கின்றது.

இலகுதவணை கொடுப்பனவு முறை

Special Discount 2000/=
12 MONTHS WARRANTY



**Everpure Hi-Tec (Pvt) Ltd.**

**Hotline:+94 75 331 3310** No.341, K.K.S Road, Jaffna.

# 22 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
24 . 06 . 1942



மறைவு
17 . 03 . 1997

## அமரர் செல்லையா சீவரத்தினம்

திதி - வளர்பிறை நவமி

அன்புக்குரிய அப்பாவே!
ஆலமரமாய் எங்களை தாங்கி
விழுதுகளாய் நாம் வாழச்செய்தீர்
அன்பையும் பண்பையும் எம்முள்
வளர்த்து எம்மூச்சினிலே வாழுகின்றீர்

உங்கள் பாதங்களில் பணிந்து
பாசமுடன் நினைவு கூரும்
குடும்பத்தினர்.

விளாத்தியடி வீதி,
உரும்பிராய் வடக்கு.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கமலர் நவரட்ணம்




திருநெல்வேலி ஆடியபாதம் றோட்டைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி பத்திரகாளி அம்மன் மற்றும் முருகன் வீதி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கமலர் நவரட்ணம் நேற்று (14.03.2019) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் நவரட்ணத்தின் அன்பு மனைவியும் ராஜ மனோகரன், மனோறஞ்சன், ஜெயப்பிரகாஷ் ஆகியோரின் அன்புத்தாயாரும் மதுவின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 918 5724, 077 358 3060



### கந்தையா தங்கவேல்

(ஓய்வுபெற்ற பரிசாரகர்)

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையாதங்கவேல்(ஓய்வுபெற்றபரிசாரகர்)நேற்று(14.03.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும் கனகம்மாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற ஆச்சிமுத்து, ஐயாத்துரை, சுப்பிரமணியம், சரஸ்வதி, பரமலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மற்றும் நாகேந்திரத்தின் மைத்துனரும் முகுந்தன், பவகுகன் மற்றும் காலஞ்சென்ற பகீரதன் ஆகியோரின் தந்தையாரும் திருஷிகாவின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2019) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

# புத்திமான் பலவான்



காட்டில் நரி ஒன்று வாழ்ந்து வந்தது. அதற்குக் கர்வமும் உலகிலேயே மிகச் சிறந்த அறிவாளி தான்தான் என்ற தலைக்கனமும் இருந்தது.
ஒருநாள் உணவு தேடிக் காட்டுக்குள் அலைந்து கொண்டிருந்தது. அன்று சோதனையாக எந்த இரையும் கிடைக்க வில்லை.
சோர்ந்துபோய் ஓரிடத்தில் அமர்ந்தது. அப்போது சற்றுத் தொலைவில் ஆமை ஒன்று இருப்பதைப் பார்த்து, உடனே துள்ளி எழுந்தது. ஆமையை நோக்கி ஓடியது.
ஆஹா. ஆண்டவா எனக்கான இன்றைய உணவைத் தந்து விட்டாய் என்று கடவுளுக்கு நன்றியைச் சொல்லிவிட்டு ஆமையைப் பிடித்தது. ஆமை ஆபத்தை உணர்ந்துகொண்டது. தன் தலையை ஓட்டுக்குள் இழுத்துக் கொண்டது.
நரி ஆமையைத் தின்னப் பலவழிகளிலும் முயற்சி செய்தது. எந்தப் பயனும் இல்லை. கையில் கிடைத்



தும் சாப்பிட முடியவில்லையே என்று ஆதங்கப்பட்டது. ஆமை ஓட்டை உடைத்தாவது தின்றுவிட வேண்டும் என்ற எண்ணத்தில் ஆமையைத் தூக்கிக்கொண்டு ஒரு பாறைக்கு ஓடியது. ஆமையைப் பாறையில் ஓங்கிப் போட்டது. ஆமை ஓடு உடையவில்லை. பலமுறை பாறைகளில் தூக்கிப் போட்டுப் பார்த்தும் உடைக்க முடியவில்லை. தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்து விட்டது. திடீரென ஒரு யோசனை நரியின் மூளைக்கு பளீரென்று ஒளிர்ந்தது.

"ஆமையே உன்னைத் தின்னாமல் விடமாட்டேன். நெருப்பு மூட்டி அதில் உன்னைத் தூக்கிப் போடுவோன். சுட்டுத் தின்பேன்" என்று பலமாகக் கத்தியது. ஆமை சுதாரித்துக் கொண்டது.
ஆஹா! மாட்டிக் கொண்டோமே என்று நினைத்துத் தலையைச் சிறிது வெளியே நீட்டியது. "நரியே நீ என்னைப் பாறையில் தூக்கிப் போட்டு உடை அல்லது என்னை நெருப்பில் தூக்கிப்போட்டு சுட்டுத் தின்னு. என்ன வேண்டுமானாலும் செய். ஆனால் ஒன்றை மட்டும் செய்து விடாதே" என்று கெஞ்சுவதுபோல் நடித்தது.
"என்ன செய்யக்கூடாது" பரபரப்புடன் கேட்டது நரி.
"நீ அதைச் செய்தால் நான் மூச்சு முட்டி இறந்து விடுவேன். ஐயோ நினைத்தாலே பயமாக இருக்கிறது" எனத் தன்முகத்தில் அச்ச உணர்வைக் காட்டியது. "சொல்லு சொல்லு" அது என்ன என்று சொல்லு நரி குஷியானது.
"தண்ணீர் எனக்கு ஜென்மப் பகைவன். அதனால் என்னைக் குளத்திலோ ஏரியிலோ மட்டும் எறிந்து விடாதே. நான் மூச்சு முட்டி இறந்து மிதப்பேன். ஐயோ நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கு. அதை மட்டும் செய்துவிடாதே" என்றது ஆமை.
நரி மறு பேச்சுப் பேசவில்லை. ஆமையைத் தூக்கிக்கொண்டு குளத்தை நோக்கி ஓடியது. குளத்துக்குள் விட்டெறிந்தது. நெடுநேரம் வரையில் கரையிலேயே உட்கார்ந்திருந்தது. ஆமை செத்து மிதக்கவில்லை.
"நான் ஏமாந்து விட்டேனோ என்று நரி நினைத்த விநாடியில் ஆமை தண்ணீருக்கு மேலே எட்டிப் பார்த்தது.
"அதிலென்ன சந்தேகம்! நீ ஏமாளி மட்டுமல்ல முட்டாளும்கூட" என்று சொல்லிவிட்டு மீண்டும் தண்ணீருக்குள் சென்று விட்டது.

# சொர்க்கத்துப் பறவையும் சொர்க்கத்துப் பூவும்

உலகில் எண்ணிலடங்காத பறவைஇனங்கள்காணப்படுகின்றன. இவை எல்லாம் ஒன்றுக்கொன்று விறு விறுப்பான பல சுவாரசியங்க ளைத் தம்மகத்தே கொண்டு வாழ்கின்றன. அத்தகைய ஒரு விசித்திரப் பறவை இனம் தான் 'பேட் ஒவ் பேறட்சி' (bird of peradrse) என அழைக்கப்படும் சுவர்க்கத்துப் பறவையாகும்.
இவை உலகத்தில் 30 வகை வரை யில் இவை உள்ளன. இவற்றில் ஆஸ்திரேலியாவுக்கு அண்மையிலான பப்புவா நியூகினி தீவிலும் ஹவாய்த் தீவைச் சூழவும் 29 வகையானவை வாழுகின்றன. சொர்க்கத்துப் பறவை இனங்களின் பெயர்கள் வித்தியாசமானவை. அவை பெருவால், எழிற்புள், கருஞ்சொண்டு, கூரவகி, குறுவாற் பாரடி கல்லா, கூந்தல் மனுக் கோடியா, நாடாவால் எனப் பல்வேறு வகைகளைக் கொண்டவை. இந்தப் பறவைகளின் கண்கள் செந்நிறமானவை. இவை தம் தோற்றத்திலும் இயல்புத் தன்மையிலும் பல நிறங்களைக் காட்டி நிற்கின்றன. பச்சை, நீலம், கருஊதா, கடும் சிவப்பு, கபிலம், பச்சை, நீலப்பச்சை, வெள்ளை, கறுப்பு என பல நிறங்களில் காணப்படுகின்றன. இந்தப்பறவை இனம் 23சென்ரிமீற்றர் நீளம் முதல் 45 சென்ரிமீற்றர் நீளம் வரை வளரக் கூடியன. அதிக நிறையையும் தன் உடல் நீளத்திலும் பார்க்க மூன்று மடங்குக்கும் அதிக வால் நீளத்தைக்கொண்டது நாடாவால் எழிற்புள் பறவையாகும். இந்தப் பறவைகளின் ஒலி, ஊது கொம்பு எழுப்பும் ஒலிக்குச் சமனாகும் என்கின்றனர் ஆய்வாளர்கள். பெண் பறவையை விடவும் ஆண் பறவை பெரியதாகவும் வாட்டசாட்டமாகவும் காட்சி யளிக்கும். இயற்கையியலாளர்களின் ஆய்வுப்படி கல்வி யின்போது ஆண் பறவை தன்னு டைய பல வண்ண கவர்ச்சியான இறகுத் தொகுதிகளையும் வியா பித்துக்கொண்டு பெண் பறவைகளைத் தன்பக்கம் ஈர்க்கின்றது என்கின்றனர். இந்தப் பறவை இனத்தில் ஒன்று சன்டிலா கோ விலங்கின காட்சியகத்தில் மாத்திரம் காணப்படுகிறது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எனவே இதுபோன்ற அரிய இன பறவைகளைப் பாதுகாப்பது உலகின் தேவையாகும். இந்தப் பறவையின் பெய ரைக்கொண்ட வண்ணமயமான மலரும் காணப்படு கின்றது. இது 'பறடைஸ் வ்புசர்' (paradise fbusar) எனப்படும். இந்தப்பூ வாழைக்கும்பத்தின் ஓர் உறுப்பினராகக் கருதப்படுறது. தென் அமெரிக்கா வில் செறிவாகவும் ஏனைய சில அயல் வலய நாடுகளிலும் ஓரளவும் காணப்படுகிறது.


கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு வடமாகாணம்

## பகிரங்க ஏல விற்பனை

எமது அமைச்சினால் பயன்படுத்தப்பட்ட பின்வரும் பொருள்கள் கல்வி அமைச்சு வளாகத்தில் எதிர்வரும் 18.03.2019 திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு ஏல விற்பனை செய்யப்படும்.

| | |
|---|---|
| 01. Computer set | 04. மின்சார உபகரணங்கள் |
| 02. Printers | 05. பாவித்த வாகன உதிரிப்பாகங்கள் |
| 03. உடைந்த தளபாடங்கள் | 06. ஏனைய சிறு அலுவலக உபகரணங்கள் |

சி.சத்தியசீலன்
செயலாளர்.

(IN 9550)
(14.17)

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com




## மாரப்பனவின் கருத்துக்கள் சொல்லிநிற்கும் அர்த்தம்!

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கூறுகின்ற சகல விடயங்களையும் அப்படியே ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று கருத்துத் தெரிவித்துள்ளார் அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன. அதாவது ஐ.நாவின் கருத்துக்கள், நிலைப்பாடுகள் அனைத்தையும் கைகட்டி, வாய்மூடி செவிசாய்ப்பதில்லை, ஏற்றுக்கொள்வதில்லை என்பதே இதனது சாராம்சம். இலங்கை சார்பான விளக்கத்தை ஐ.நா. சபைக்கு வழங்குவதற்காகச் செல்லவுள்ள குழுவுக்கு தலைமை தாங்குகின்றவர் என்ற அடிப்படையில் மாரப்பனவின் கருத்து சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டியது; அவசியமானது; தவிர்க்கப்பட முடியாததும்கூட.

நாடாளுமன்றின் நேற்றைய அமர்வில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன இடையில் இடம்பெற்ற விவாதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார் மாரப்பன. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்திலிருந்து இலங்கை விலகிச் செல்ல வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச குறிப்பிட, அதற்கு பதிலளித்து உரையாற்றிய மாரப்பன, ஐ.நா. ஆணையாளர் கூறும் சகல விடயங்களையும் நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இராணுவத்தின் வசமிருந்த காணிகள் விடுவிக்கப்படவில்லையென ஐ.நா. ஆணையாளர் கூறியுள்ளார். அதனை ஏற்றுக்கொள்ள மாட்டோம். பொறுப்புக்கூறல் தொடர்பான செயற்பாடுகளுக்கு கடந்த 2017ஆம் ஆண்டு இரண்டு வருட கால அவகாசம் கோரினோம். அந்தக் காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விடயங்களை நாம் காட்டியுள்ளோம். அவ்வாறே இம்முறையும் கால அவகாசத்தைக் கோரியுள்ளோம் என்று தெரிவித்துள்ளார்.

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் நூற்றுக் கணக்கான ஏக்கர்கள் இன்னமும் படையினரின் வசம்தான் உள்ளன. அது மலையில் ஏற்றிவைத்த தீபம்போன்று அப்பட்டமானது. அவற்றை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி பலநூறு நாள்களாக தொடர் போராட்டங்கள் தமிழர் தாயகத்தில் இடம்பெற்றுவருகின்றமை யாவரும் அறிந்ததே. குறிப்பாக கேப்பாபிலவு விவகாரம் இம்முறை ஐ.நா. சபையிலும் பேசுபொருளாகியுள்ளது. இத்தகையதொரு நிலையில் விடுவிக்கப்பட்ட சிறு நிலப்பரப்பை எடுகோள்காட்டி காணிவிடுவிப்பு என்ற விவாதத்தையே முடக்குவது அல்லது முடக்க முயல்வது பெரும் அபத்தம்.

காணி விடுவிப்பு மட்டுமல்ல இன்னும் ஏகப்பட்ட விடயங்கள் இவ்வாறுதான் இம்முறை அரங்கேறவுள்ளன. மறுவாழ்வு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்ட சில அரசியல் கைதிகளின் விவரங்கள் முன்வைக்கப்பட்டு அரசியல் கைதிகளின் விடுதலை என்ற பேசுபொருள் பூசி மெழுகப்படும். அதேபோன்று காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக நிறுவப்பட்ட அலுவலகங்களையும் மிகச்சமீபத்தில் அவசர அவசரமாகத் திறக்கப்பட்ட அதனது கிளைகளையும் காரணம் காட்டி, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்திலும் தான் கனவான் தன்மையுடன் நடந்துகொள்கின்றேன் என்று கொழும்பு நியாயம் செய்யும். வழக்கம்போல் இம்முறையும் இதுவே ஐ.நா.வில் இடம்பெறவுள்ளது. அதையே திலக் மாரப்பன நாடாளுமன்றத்தில் வைத்து சொல்லாமல் சொல்லியுள்ளார். கொழும்பின் நிலைப்பாட்டையும், அதன் மெத்தனப் போக்கையும், கபடத்தனத்தையும் ஐ.நா. தெட்டத்தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். தனது பிடியை இறுக்க வேண்டும். அதுவே தமிழர்களின் விருப்பமும்கூட.

# பாகுபாடுகளால் மழுங்கடிக்கப்படும் மக்களாட்சி

எஸ். ரத்னஜீவன் எச். ஹூல்

மார்ச் மாதம் 21 ஆம் திகதி பன்னாட்டு இனப் பாகுபாட்டு எதிர்ப்புத் தினமாகும். தேர்தல் ஆணைக்குழு. இத்தகைய முக்கிய தினங்களை தேர்தல் மற்றும் வாக்குரிமையுடன் தொடர்புடைய வகையில் கொண்டாடுகின்றது. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களை நடாத்துவதுடன் இனரீதியான பாகுபாடு எவ்வாறு தொடர்புபடுகின்றது என்று இப்போதும் சிலர் சந்தேகின்றனர். 'அதிகாரம் மக்களிடம் உள்ளது. நாங்கள் அரசியல் பேசுகிறோம்' என்ற டுபாக் சகூரின் கூற்றை இங்கு மேற்கோள் காட்டுவது பொருத்தமானது. எமது ஆட்சியாளர்கள் காட்டும் பாகுபாடுகளை நாங்கள் அனைவரும் எதிர்க்க வேண்டும்.

### பண-அதிகாரப் பாரபட்சம்

குறைவாக பணம் செலவிடும் வேட்பாளர்களுக்கு பிரதிகூலங்களை ஏற்படுத்துவதன் மூலம் தேர்தல்களில் பணம் தவறான ஆதிக்கத்துக்கு அல்லது அதிகாரத்துக்கு காரணமாக அமைகின்றது என்று தேர்தல் ஆணைக்குழு கருதுகின்றது. நாங்கள் பரப்புரைக்கு பயன்படுத்தப்படும் நிதியை மட்டுப்படுத்தும் ஒரு புதிய சட்டவரைவின் ஊடாக, அரசியலில் பண அதிகாரத் தொடர்பைக் கட்டுப்படுத்த முயற்சிக்கின்றோம். நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட முன்னர் அமைச்சரவையின் அனுமதிக்காக சட்டவரைபு அனுப்பப்பட்டுள்ளது.

பண–அதிகார அரசியலானது 1931 ஆம் ஆண்டின் டொனமூர் மறுசீரமைப்புக்களை விடப் பழைமை வாய்ந்ததாகும். 1879 ஆம் ஆண்டில், மகாதேசாதிபதி எமது பிரதிநிதிகளை நியமித்தார். குமாரி ஜயவர்தன, 'எல்லாக் காலத்திலும் சிறந்த இலங்கையர்' என்று டி.ஸ்.சேனாநாயக்கவால் வர்ணிக்கப்பட்ட சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களை அப்போதைய பிரிட்டன் மகாதேசாதிபதி ஏன் விரும்பினார் என்று விளக்குகின்றார். இராமநாதனின் குடும்பத்தினர், தண்டனையாக பிரிட்டனுக்கு திருப்பி அனுப்பப்பட்ட மகாதேசாதிபதிகளுக்கும் காலனித்துவச் செயலர்களுக்கும் தவறான முறையில் கடன் வழங்கியதன் மூலம் சட்ட சபையில் அவருக்கான ஆசனத்தை விலைக்கு வாங்கினார்.

### சாதிப் பாகுபாடு

டொனமூர் மறுசீரமைப்பு இருந்த போதிலும் வன்முறை கொண்ட சாதிப் பாகுபாட்டின் ஊடாக வாக்களிப்பதற்கான உரிமை இழக்கப்படுவதும் எமது மக்களாட்சியை (ஜனநாயகத்தை) பாழடிக்கச் செய்கிறது. தனிப்பட்ட மற்றும் சமுதாய அடையாளங்களின் அடிப்படை மட்டங்களில் சாதிப் பாகுபாடானது, ஒடுக்கப்பட்ட சாதிகளின் அரசியல்வாதிகளுக்கான சமனான தேர்தல் உரிமைகள் மறுக்கப்படக் காரணமாக அமைகின்றன.

1936 ஆம் ஆண்டின் தேர்தல்களைப் பற்றிக் கூறும் நீரா விக்ரமசிங்ஹ, தன்னை எதிர்த்துப் போட்டியிடுபவரின் உறவினர்களான சாதித் தலைவர்கள், மிரட்டல்களை, அச்சுறுத்தல்களை மற்றும் தாக்குதல்களை கையாண்டதாக ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களை அதிகளவில் கொண்டிருந்த கேகாலை தொகுதியின் வேட்பாளர் குற்றம் சாட்டியதாகக் கூறுகிறார். இதே குற்றச்சாட்டுக்கள் அதற்கு அயலில் உள்ள தெடிகமை தேர்தல்தொகுதியிலும் முன்வைக்கப்பட்டன.

### அதிகாரத் திரட்சியிலிருந்து தமிழர்களை ஒழித்தல்

விக்கிரமசிங்ஹ மேலும் கூறுகையில், 1936 ஆம் ஆண்டின் தேர்தல்கள் ஒட்டுமொத்தமாக சிங்கள-பௌத்த அரசியல்வாதிகள் மீள அதிகாரத்தைக் கைப்பற்றிய நிகழ்வாக அமைந்தது என்கிறார். சுதந்திரத்துக்குப் பிந்திய இலங்கையில் வழமையாக வாக்களித்து வந்த மலைநாட்டுத் தமிழர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை கணிக்கப்பட்டதன் பின்னரும் அவர்களுடையை சனத்தொகையைப் பயன்படுத்தினர். அதன் மூலம் அவர்கள் மத்தியிலிருந்து சிறுபான்மைச் சிங்களவர்கள் தெரிவுசெய்யப்படுவதை அனுமதித்தனர்.

### அச்சுறுத்தல்

1990ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அச்சுறுத்தல் மூலம் வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் சமுதாயத்தின் வாக்குரிமையைப் பறித்தனர். அது அரசுக்குப் பொருத்தமானதாக இருந்தது. ஏனெனில் அது 10 இற்கும் குறைவான வாக்குகள் மூலம் தகுதியற்ற கைக்கூலிகள் உறுப்பினர்களாத் தெரிவு செய்யப்படுவதற்கும் அமைச்சரவையில் அமர்வதற்கும் காரணமாக அமைந்ததுடன் அதன் மூலம் அரசு, தாங்கள் தேசிய ரீதியானவர்கள் என்று கூறிக்கொள்வதற்கும் வாய்ப்பளித்தது. இந்த நகைப்புக்குரிய முடிவுகளைச் சான்றுப்படுத்துவது பாதுகாப்பானது என்று அப்போதைய தேர்தல் திணைக்களம் கருதியது. இது பற்றி வினவிய போது, எழுத்து மூலமான முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை, என்று எனக்குக் கூறப்பட்டது.

### காப்பாற்றல்

இந்தச் சுரண்டல்கள் மூலம் திருப்தியடையாத அரச சாதனங்கள், தொடர்ச்சியான முறையில் தமிழர்களை ஒழிப்பதற்கு முயற்சிக்கின்றன. நல்லிணக்கத்தை நடைமுறைப்படுத்தி குற்றங்களைப் புரிந்தவர்களைப் போராளிகள் அல்லாத தமிழர்களைக் கொலை செய்த அரச படையினரை விசாரணை செய்வது என்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவுக்கான வாக்குறுதிகள் பன்னாட்டுச் சமூகத்தால் நடாத்தப்பட முடியுமான உடனடியான போர்க் குற்ற விசாரணைகளிலிருந்து காப்பாற்றுவதற்குப் போதுமானவையாக இருந்தன. எந்தவொரு இராணுவத்தினரும் தண்டிக்கப்படமாட்டார்கள் என்று கூறி ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் 30/1 தீர்மானத்திலிருந்து மீளப் பெறப் போவதாக அரச தலைவர் மைத்திரிபால அச்சுறுத்தல் விடுப்பதானது அது ஒரு கேளிக்கூத்து என்பதைக் காட்டுகின்றது.

(தொடரும்)

*கட்டுரையாளர்*
*தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்.*



## யோகர் சுவாமி குருபூசை தினம்

யாழ்ப்பாணம்,மார்ச் 15
யோகர் சுவாமிகளின் குரு பூசை தினத்தை முன்னிட்டு கொழும்புத்துறை சமாதிக் கோவிலிலும், யாழ்ப்பாண சிவதொண்டர் நிலையத்திலும் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட் கிழமை சிறப்பு அபிசேக ஆராதனைகள் இடம்பெறவுள்ளன.
வழமைபோன்றுகுருபூசைக்கு முந்திய மூன்று நாள்களும் நற்சிந்தனை முற்றோதல் இடம்பெறும் என்று சிவதொண்டர் சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

# குடிதண்ணீர் பிரச்சினை பற்றி எவருக்குமே அக்கறையில்லை

## இப்படிக் கூறுகின்றார் வடக்கு ஆளுநர்



*யாழ்ப்பாணம், மார்ச் 15*

*வடக்கில் உள்ள தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க எந்த ஒரு அரசியல்வாதியோ, ஏனைய தரப்பினர்களோ ஒரு திட்டத்தைக் கூட எனக்கு இன்னமும் முன் வைக்கவில்லை.*

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அண்மையில் அவர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கில் ஆறுகள் இல்லை. காலம் காலமாக மழையை நம்பியே மக்கள் விவசாயம் செய்தனர். மழை நீரைக் குளங்களில் சேகரித்தனர். ஆனால் அந்தக் குளங்கள் தற்போது என்ன நிலையில் உள்ளன என்பது அனைவருக்கும் தெரியும். பல குளங்கள் காணாமல் போய் விட்டன. வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகம் என்று அரசியல் பிரமுகர்கள் கூறிக் கொள்கின்றனர்.
ஆனால் மனிதனுக்குப் பிரதான விடயம் இந்தக் குடி தண்ணீர். வடக்கில் உள்ள தண்ணீர் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வது தொடர்பாக அல்லது அதற்காக திட்டம் இருக்கின்றது, அதை நடைமுறைப்படுத்த உதவுங்கள் என்று எந்த அரசியல்வாதிகளும் என்னிடம் வந்தது இல்லை. பொதுமக்கள் சந்திப்பில் மக்களின் துன்பங்கள், தேவைகள் எமக்குத் தெரிகின்றன. அவற்றில் சில விடயங்களைத் தீர்த்துக் கொள்ள முடியும். தண்ணீர் போன்ற விடயங்கள் நாடாளுமன்றில் பேசப்பட வேண்டும்.
அப்போதுதான் வேலைகளை நகர்த்த முடியும். என்னிடம் வரும் அரசியல்வாதிகள் கட்சி சார்ந்த தேவைகள், உறவுகள் சார்ந்த வேலைகளைப் பேசவே என்னிடம் வருகின்றார்கள். இந்த தண்ணீர் விடயம் தொடர்பில் அதன் அவசியம், இருப்புத் தொடர்பில் நான் கிட்டத்தட்ட 4 அரசியல்வாதிகளுக்கு கூறினேன். இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. அதற்கான திட்டங்கள் கூட அவர்களிடம் இருக்கலாம். அவற்றை எங்களிடம் தந்து துறைசார்ந்த நிபுணர்களோடு ஆலோசித்தால்தான் அதற்கு ஒரு தீர்வு கிடைக்கும் - என்றார். (எ-7)

## செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள்

சாவகச்சேரி, மார்ச் 15
சாவகச்சேரி தென்மட்டுவில் கலைமகள் முன்பள்ளி சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள் முன்பள்ளி மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.
முன்பள்ளி முகாமைத்துவக் குழுவைச் சேர்ந்த மு.சிவகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சி.சிவதாசன், மட்டுவில் தெற்குஅ.மி.த.க.வித்தியாலயஅதிபர் திருமதி தயாநிதி ஜீவகுமார், நகரசபையின் வட்டார உறுப்பினர் ந.திருக்குமரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(ஐ-9)



## மகளிர் தின நிகழ்வுகள்

கொடிகாமம், மார்ச் 15
சங்கத்தானை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மகளிர் தின நிகழ்வுகள் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை தலைவி திருமதி சிவபாலன் சுகந்தி தலைமையில் நடைபெற்றன
நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி சமுர்த்தி முகாமையாளர் திருமதி பிரபாகரன் லில்லியன் அலெக்சி, சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலகர் ப.சதீஸ்வரன், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் பொ.நடேசலிங்கம், சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் அ.கெங்காதரன், ஓய்வு பெற்ற கிராமஅலுவலர்சி.க.வேலாயுதப்பிள்ளை,சப்பச்சி மாவடிப் பிள்ளையார் ஆலய உபதலைவர் யோ.ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன்போது அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ-159)

## 72 குடும்பங்களுக்கு தென்னம்பிள்ளைகள்

சாவகச்சேரி,மார்ச் 15
சாவகச்சேரி நகரசபையால் சாவகச்சேரி கோயிற் குடியிருப்பு பிரிவில் வதியும் 72 குடும்பங்களுக்குத் தென்னம்பிள்ளைகளும் அங்குள்ள சனசமூக நிலையச் சுற்றாடலில் நடுவதற்கு மரக்கன்றுகளும் நேற்றுமுன்தினம் வழங்கிவைக்கப்பட்டன
படையினரால் அமைக்கப்பட்ட மலகூடங்களைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதன்போது யாழ்ப்பாண மாவட்டப் பாதுகாப்புப் படையின் கட்டளைத் தளபதி தர்சன ஹெட்டியாராச்சியிடம் நகரசபை தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் மரக்கன்றுகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்தார்.
அதனையடுத்து படையினரால் தென்னம்பிள்ளைகளும், புளி, நாவல், இலுப்பை, வேம்பு ஆகிய மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. அங்கு வதியும் 72 குடும்பங்களுக்கு தலா இரு தென்னம்பிள்ளைகள் வீதம் நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் வட்டார உறுப்பினர் திருமதி த.பவுளினா சுபோதினிஆகியோரால் கையளிக்கப்பட்டன. (ஐ-9)





## ஈழத்துச் சிதம்பரத்தின் கொடியேற்றம்

காரைநகர், மார்ச் 15
யாழ்ப்பாணம் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தின் வருடாந்த பங்குனிப் பெருந்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.இந்த உற்சவத்தில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணிக்கு கைலாச வாகன உற்சவமும், 18 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 8.30 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணிக்கு சப்பறத் திருவிழாவும்,20 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு பஞ்சரத பவனியும், 21 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு நடேசர் உற்சவமும் முற்பகல் 10 மணிக்கு தீர்த்த உற்சவமும், 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-250)

## குழாய்க் கிணறு அமைத்து வழங்கப்பட்டது

கொடிகாமம், மார்ச் 15
பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு குழாய்க் கிணறு அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது. உதவும் இதயங்கள் நிறுவனத்தின் நிறுவுநர் ம.சிறிரஞ்சன் தனது 50 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு இந்த உதவியை அண்மையில் வழங்கியுள்ளார். வாழைச்சேனையில் வசிக்கும் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்த சிவகுரு யோகினி என்பவருக்கே இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது. (ஐ-159)




## படைப்புழு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச் 15
படைப்புழுவின் தாக்கம் தொடர்பில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கருத்தரங்கு காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராம அலுவலர் பிரிவு ரீதியாக இடம்பெற்றது.
கடந்த வெள்ளிக்கிழமை மற்றும் திங்கட்கிழமைகளில் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது.
இதில் விவசாயப் போதனாசிரியர், பிரதேச செயலக விவசாய அபிவிருத்தி அலுவலர்கள், கமநல சேவைகள் நிலைய அலுவலகர்கள் ஆகியோர் கலந்துகொண்டு விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கினர்.
காரைநகரில் படைப்புழுத் தாக்கம் கண்டறியப்படாத நிலையில், எதிர்காலத்தில் அதன் தாக்கம் உணரப்பட்டால் உடனடியாக விவசாயப் பிரிவுக்கு அறிவிக்குமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)



# காசநோய் மருத்துவமனையை மீளவும் இயக்குவதில் அசமந்தம்

## மருத்துவர் யமுனானந்தா குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 15

இராணுத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ள மயிலிட்டி காச நோய் மருத்துவமனையைச் சீரமைத்து அங்கு சேவையை ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைளை மாவட்டச் செயலர் எடுக்காது உள்ளார் என்று யாழ்ப்பாண மாவட்ட காச நோய் தடுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவர் யமுனானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பண்ணையில் உள்ள காசநோய் மருத்துவமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த ஆண்டு இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்து மயிலிட்டி காச நோய் மருத்துவமனை தெல்லிப்பழை பிரதேச செயலரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் அந்த மருத்துவமனையைச் சீரமைத்து இயக்குவதற்கான எந்த நடவடிக்கைகளும் இதுவரை மாவட்டச் செயலரால் மேற்கொள்ளப்படவில்லை.

அந்தக் காணியில் காசநோய் மருத்துவமனையை அமைப்பதற்கு அதிகாரிகள் விரும்புகிறார்கள் இல்லை. அந்தக் காணியை வேறொரு தேவைக்குப் பயன்படுத்தத் திட்டமிடுகின்றனர்.

அந்தப் பகுதியில் காச நோய் மருத்துவமனையை இயக்குவது நன்மை தரும்.

கடற்கரையை அண்டி உள்ளதால் காற்றோட்டமாகக் காணப்படும். மக்கள்விழிப்புணர்வடைந்து, காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கான சிறந்த இடம் என்பதை உணர்ந்து அதிகாரிகளுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாள் ஒன்றுக்கு ஒருவர் காச நோயால் பாதிக்கப்படுகின்றார். காச நோயை இல்லாது செய்ய வேண்டும் என்று உலக சுகாதாரத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. அதற்கு எமக்குச் சிறந்த மருத்துவமனை தேவை. போதியளவு இட வசதியுடன் மருத்துவமனை இருக்க வேண்டும். மயிலிட்டியில் காச நோய் மருத்துவமனையை இயங்க வைப்பது ஊடாக வடக்கில் காச நோயைக் கட்டுப்படுத்த முடியும்.

கடந்த ஆண்டு சுமார் 303 பேர் காச நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதைப் போன்று இந்த ஆண்டு சுமார் 66 பேர் காச நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு காச நோயால் பாதிக்கப்பட்ட 303 பேரில் 12 பேர் இறப்பைச் சந்தித்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் துல்லியமான எக்ஸ் கதிர் பரிசோதனை மேற்கொள்வதற்கான வசதிகள் உள்ளன.

அதன் மூலம் இலகுவாக காசநோயைக் கண்டறிய முடியும். காச நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதால் அதைக் கட்டுப்படுத்த பல்வேறு தரப்பினரின் உதவிகள் அவசியம் -என்றார். (எ-106)

# தனியார் பேருந்துகளின் கட்டணங்கள் அதிகரிப்பு

## பொதுமக்கள் விசனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 15

கொடிகாமம், சாவகச்சேரி, மறவன்புலவு ஊடான சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகள் பயணிகளிடமிருந்து அதிக கட்டணங்களை அறவிடுகின்றன என்று மறவன்புலவு - கோவிலாக்கண்டி பிரிவு மக்கள் தெரிவித்தனர்.

மறவன்புலவு கோவிலாக்கண்டிப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு அரச பேருந்து ஒரு வழிக்கட்டணமாக 28 ரூபாவை அறவிடுகின்றது. ஆனால் தனியார் பேருந்துகள் அந்தப் பகுதியூடாக பயணம் செய்ய ஒரு வழிக்கட்டணமாக 35 ரூபாவை அறவிடுகின்றன எனவும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தனியார் பேருந்து நடத்துநர்களிடம் கேட்டபோது குறைந்த அளவு பய்ணிகள் பேருந்தில் பயணிப்பதால் எரிபொருளுக்குரிய கட்டணம் கூட கிடைப்பதில்லை எனத் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட தனியார் பேருந்து சங்கங்களின் இணையத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது:

ஒரு இடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்கு செல்வதற்கான கட்டணம் வரையறுக்கப்பட்டுள்ளது. அதனைவிட அதிமகாக பயணிகளிடம் கட்டணம் அறவிடுவது பிழை. இந்த விடயம் தொடர்பில் முறைப்பாடு கிடைக்கும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பில் கவ னம் செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7,9)

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்15

எல்லைதாண்டிய குற்றச்சாட்டில்கைது செய்யப்பட்ட மாணவர்கள் இருவர் உள்ளிட்ட இந்திய மீனவர்கள் எட்டுப் பேரையும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

எல்லை தாண்டிய குற்றச்சாட்டில் கடந்த ஜனவரி 13ஆம் திகதி இந்திய மீனவர்கள் எட்டுப் பேர் இலங்கைக்கடற்பரப்பில்வைத்து கடற்படையால் கைது செய்யப்பட்டனர். மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது படகு விபத்துக்குள்ளானதில் எல்லை தாண்டியதாக கைதான மீனவர்கள் தெரிவித்திருந்தனர்.

தமிழகம் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்களே இவ்வாறுகைதுசெய்யப்பட்டனர். அவர்கள்கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் மூலம் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டபோது விளக்கமறியலில்வைக்கப்பட்டனர். விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள எட்டு மீனவர்களிலும் 11ஆம் வகுப்புபடிக்கும்ஷாம்டேனியல் மற்றும் பொறியியல் கல்லூரி மாணவன் துரை பாண்டி என்பர்களுடைய கல்வி நடவடிக்கைகள் பாதிப்படுவதால் அவர்களை விடுவிக்குமாறு கோரிஇராமேஸ்வரம்மீனவர்கள் வேலைநிறுத்தப்போராட்டத்தில்ஈடுபட்டனர்.

கைதான இந்திய மாணவர்கள் இருவர் உள்ளிட்ட எட்டுஇந்தியமீனவர்களும் நேற்றுஐந்தாதுமுறையாக நீதிமன்றில் முற்ப டுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரணை செய்த நீதிவான்ஏ.ஜூட்சன் அவர்களை எதிர்வரும் 27ஆம்திகதிவரைவிளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

மாணவர்கள்இருவரதுகல்வியை கருத்தில் கொண்டு விடுவிக்கவலியுறுத்திஇராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தப்போராட்டத்தில்ஈடுபட்டுவரும்நிலையில் இந்த தீர்ப்பு மீனவர்கள் மட்டும் மல்லாது சிறையில் உள்ளவர்களின் குடும்பத்தினரையும் அதிர்ச்சி அடைய செய்துள்ளதுஎன்றுஇந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ-21,26)

# விழிப்புணர்வு கருத்தரங்கு

சாவகச்சேரி, மார்ச் 15

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை பணியாளர்கள் 100 பேருக்கு இடர் முகாமைத்துவ பாதுகாப்பு மற்றும் வீதி விபத்துக்களைத் தடுப்பது தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று மருத்துவமனை கேட்போர்கூடத்தில் இன்று இடம் பெறவுள்ளது. இடர் முகாமைத்துவ திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகம், தென்மராட்சி பிரதேச செயலகமும் இணைந்து இந்தக் கருத்தரங்கை நடத்தவுள்ளன. (ஐ-9)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் வெங்காய அறுவடை ஆரம்பம்



யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்ப்பாண மாவட்டத்தில் பெரும்போக வெங்காய அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் பரவலாகச் சின்ன வெங்காயச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டனர்.

ஆயிரத்து 500 வரையிலான ஹெக்ரேயர் நிலப்பரப்பில் செய்கையாளர்கள் இந்தச் சின்ன வெங்காயச் செய்கையில் ஈடுபட்டனர்.

காலநிலைக்கு ஏற்றவாறு அதிக விளைச்சலை இம்முறை காலபோகத்தின்போது பெற்றுள்ளனர் என்று மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்தது.

கூடுதலான செய்கையாளர்கள் வெங்காய நாற்றுக்களை பயன்படுத்தி செய்கையில் ஈடுபட்டனர். தற்போது இந்த வெங்காய அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அவை கூடுதலாக சந்தைகளுக்கு வர தொடங்கியுள்ளன.

முன்னர் கிலோ 160 ரூபா வரையாக விற்கப்பட்ட சின்ன வெங்காயம் தற்போது கிலோ 90 ரூபாவாகச் சரிந்துள்ளது. இந்தச் சின்ன வெங்காயம் தென் பகுதிகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது.

வெங்காயத்தின் திடீர் விலை வீழ்ச்சியால் செய்கையாளர்கள் பாதிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதேசமயம் நீர்வேலி, கோப்பாய், சிறுப்பிட்டி, புத்தூர், இடைக்காடு, நவக்கிரி, உரும்பிராய், ஊரெழு, அச்சுவேலி, பத்தைமேனி போன்ற பிரதேசங்களில் கூடுதலான செய்கையாளர்கள் இந்தச் சின்ன வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். (ஐ-7,17)

# பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம்,மார்ச் 15

இலங்கை தமிழரசுக் கட்சியின் வலி.கிழக்கு கோப்பாய் தொகுதிக்கான பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் நீர்வேலி தெற்கு மாதர் சங்க மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன.

கட்சியின் யாழ்ப்பாண மாவட்டத்தின் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலர் செ.பிரதாப், தமிழரசுக் கட்சியின் நிர்வாக செயலர் எஸ்.எக்ஸ் குலநாயகம், தமிழரசுக்கட்சியின் இளைஞர் பேரவை செயலர் மாவை.சோ.சே.கலை அமுதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கோப்பாய் தொகுதிக்கான நிர்வாக குழுத் தெரிவு இடம்பெற்றது. தலைவர் அரியகுட்டி பரஞ்சோதி, செயலாளர் தி.திருநாவுக்கரசு, பொருளாளர் கந்தையா தர்மலிங்கம், உபதலைவர் மகேந்திரலிங்கம் கயிலன், உபசெயலாளர்தி.கமலநாதன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ஐ-17)

# மதிப்பளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 15

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களை சிறப்புற நடத்திவரும் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தலைவிகள் மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

கொழும்பு இந்து மகளிர் அமைப்பால் நாளை நடத்தப்படவுள்ள பன்னாட்டு மகளிர் தின நிகழ்வில் வைத்து மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் இவர்களால் நடத்தப்படும் சங்கங்களின் மேம்பாட்டுக்கு உதவிகளும் வழங்கப்படவுள்ளன என அமைப்பின் செயலர் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி சசிரேகா வரதராஜா, கிளிநொச்சி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி நாகலட்சுமி இராமலிங்கம், சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி மகேஸ்வரி கீர்த்திநாதன் ஆகியோர் அமைப்பினரால் மதிக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)



# மாணவர் நாடாளுமன்றத் தேர்தல்

கொடிகாமம், மார்ச் 15

யாழ்ப்பாணம் கச்சாய் மகா வித்தியாலயத்தின் மூன்றாவது மாணவர் நாடாளுமன்றத் தேர்தல் கடந்த புதன்கிழமை செயலாளர் நாயகம் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்த தேர்தலில் 64 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். மேலும் மாணவர் நாடாளுமன்ற-பொறுப்பதிகாரிகளான திருமதி நா.இராசலிங்கம், க.தனுராஜ் ,திருமதி சோ.நடேசலிங்கம் ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் மாணவத் தலைவர்கள் தேர்தல் கடமையில் ஈடுபட்டனர். (ஐ-159)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 15


வட இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத்தின் பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

சங்கத் தலைவர் கலாநிதி பீ.ஜெயவிந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக மனித உரிமைகள் திரியாய பவுண்டேசன் நிறுவன யாழ்ப்பாண மாவட்ட பொறுப்பாளர் அருட்பணி நடராஜா சுபாஸ் ஆகி யோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட 25 குடும்பங்க ளுக்கு உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ஐ-9)

# காச நோயை சோதிக்கும் நவீன உபகரணம் யாழில்

யாழ்ப்பாணம், மார்ச் 15

காச நோயாளர்களின் மார்பை கதிர் படம் பிடிப்பதற்கான நவீன உபகரணத் தொகுதி யாழ்ப்பாணம் பண்ணை காசநோய் பிரிவில் நேற்றுமுன் தினம் முதல் பயன் பாட்டுக்கு வந்துள்ளது என்று மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.



இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது: காச நோயாளர்களுக்கு நெஞ்சறைப் பரிசோதனை செய்வது அவசியமாகும்.

அப்போது தான் சுவாசம், சளி, இருமல் போன்ற தொடர்புடைய விடயங்களை அறிந்து கொள்ள முடியும். இதற்காக இதுவரை காலமும் சாதாரண கதிர் படம் பிடிக்கும் இயந்திரம் பயன்பட்டு வந்தது.

இந்த இயந்திரம் மூலம் கதிர் படம் பிடிக்கப்பட்டு பின்னர் இருண்ட அறையில் அதனை பிரதி செய்து எக்ஸ் ரே அதாவது கதிர் இயக்க படத்தை பிரதியாக எடுத்து பார்வை இட முடியும். இதற்கு நேரம் அதிகமாகத் தேவைபடும்.

குளோபல் நிதி உதவியின் கீழ் சுமார் 160 லட்சம் ரூபாவில் வழங்கப்பட்டுள்ள இந்த இயந்திரம் நவீன வசதிகளை கொண்டது.

நோயாளியின் நெஞ்சை கதிர் படம் பிடிக்கும்போது மருத்துவர்கள் அதனை கணினி திரையில் அவதானிக்க முடியும். பெரிதாக்கி பார்க்கவும் முடியும். உடனடியாக பிரதியை அச்சுச் செய்து அவதானிக்க முடியும்.

நோயாளியின் பிரச்சினை கண்டறியப்பட்டு சிசிக்சைகளை வேகமாக ஆரம்பிக்க முடியும். கடந்த ஜனவரி மாதம் இந்த நவீன இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டது. அதன் பின்னர் அதன் அனைத்து பகுதிகளும் பரிசோதனைக்கு தயார் செய்யப்பட்டு நேற்று முன்தினம் முதல் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வெளி இடங்களில் பரிசோதனை செய்வதற்கு அதிகம் செலவாகும்.

இந்த நவீன கதிர் பட இயந்திரம் மூலம் நாளொன்றுக்கு சுமார் 20க்கு மேற்பட்ட காச நோயாளர்களை பரிசோதனை செய்ய முடியும்.

இந்த இயந்திரம் கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு காசநோய் பிரிவுகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)



## வீதி சீரமைப்பு

கொடிகாமம், மார்ச் 15

நீண்ட காலமாக சீரமைக்கப்படாமல் இருந்த மறவன்புலவு மேற்கு கலையாபரணம் கோட்டை வீதி சாவகச்சேரி பிரதேச சபையால் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. கடந்த 96 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை இப்பகுதி படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருந்தது. இதன் போது கனரக வாகனங்களின் பாவனையால் குறித்த வீதி மோசமாகச் சேதமடைந்து காணப்பட்டது.

105 மீற்றர் நீளமுள்ள இந்த வீதியை 4 லட்சம் ரூபா சபை நிதியிலிருந்து சீரமைப்புச் செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-159)

## ஆவணங்களை பதிவுசெய்ய ஒருநாள் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 15

ஆவணங்களை விரைவாக பதிவு செய்தல் மற்றும் பன்னாட்டு தரத்தில் தயாரிக்கப்படும் பிறப்புச் சான்றிதழ் வழங்கும் ஒரு நாள் சேவை இடம்பெறவுள்ளது.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-7)

## மாரடைப்பால் மயங்கி வீழ்ந்த குடும்பத் தலைவர் உயிரிழப்பு

சாவகச்சேரி, மார்ச் 15

மாரடைப்பு ஏற்பட்டு மயங்கி வீழ்ந்த 40 வயது குடும்பத் தலைவர் மருத்துவமனைக்குக் கொண்டு வரும் வழியில் சாவடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு மிருசுவில் பழைய வாய்க்கால் பகுதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சிவஞானம் ரசிகுமார் (வயது-40 ) என்பவரே சாவடைந்தவராவார்.

வீட்டு விறாந்தையில் அமர்ந்திருந்தவர் நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளதாகக் கூறி மயங்கி வீழ்ந்தார் எனவும் அவரை உடனடியாக சாவகச்சேரி மருத்துமனையில் சேர்த்தபோது அவர் ஏற்கனவே சாவடைந்துள்ளார் என் மருத்துவர்கள் கூறினார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

சடலம் சாவகச்சேரி மருத்துவமனை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவரது சாவு தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதி மன்றில் நேற்று அறிக்கை தாக்கல் செய்தனர். அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் பிரதேச திடீர் சாவு விசாரணை அதிகாரி சீ. சீ.இளங்கீரன் மூலம் விசாரணைகளை நடத்தி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ஐ-9)

## நீரிழிவு சிகிச்சை இனி வாரத்தில் இருநாள்கள்

### பரு.அரசினர் மருத்துவமனை அத்தியட்சகர் தெரிவிப்பு

வடமராட்சி, மார்ச் 15

பருத்தித்துறை அரசினர் ஆதார மருத்துவமனையில் நீரிழிவு நோயாளர்களுக்கான சிகிச்சைப்பிரிவின் சேவை இனிமேல் வாரத்தில் இரண்டு நாள்கள் நடத்தப்படும் அதில் சனிக்கிழமை அரச ஊழியர்களுக்கு மாத்திரம் சிகிச்சை வழங்கப்படும் என்று மருத்துவ அத்தியட்சகர் த. குகதாசன் தெரிவித்தார்.

பருத்தித்துறை மருத்துவமனையில் பணியாற்றி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு இடமாற்றமாகி செல்லும்பொது மருத்துவரின் சேவைப்பாராட்டையும், சாவகச்சேரி அரசினர் ஆதார மருத்துவமனையில் இருந்து இடமாற்றமாகி பருத்தித்துறை மருத்துவமனைக்கு வந்துள்ள மருத்துவரை வரவேற்கும் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது.

மருத்துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கத்தால் நடத்தப்பட்ட நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இவ் மருத்துவமனையில் வெளிநோயாளர்கள் பிரிவில் நாளாந்தம் 600 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நீரிழிவு சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் இந்தச் சிகிச்சைப் பிரிவை வாரத்தில் இரு நாள்கள் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது புதன்கிழமைகளில் இடம்பெறும் சிகிச்சைப் பிரிவுடன் சனிக்கிழமைகளிலும் சிசிக்சைப் பிரிவு நடத்தப்படும் அரச ஊழியர்களுக்காக அந்தச் சேவை நடத்தப்படும்.

நோயாளர்கள் நலன் புரிச்சங்கத்தின் செயலர் எம் சுந்தரலிங்கம் கருத்துத்தெரிவிக்கையில், மருத்துவர்கள் கடவுளுக்கு சமமானவர்கள் மருத்துவ சேவையை நாடிவரும் நோயாளர்கள் மனம் கோணாது அவர்களுக்கு சேவை வழங்கவேண்டும் அதற்குத் தேவையான ஒத்துழைப்பை நோயாளர் நலன்புரிச்சங்கம் செய்துகொடுக்கும் -என்றார். (ஐ-173)

## பயன்படுத்தாதுள்ள டிராக்டர்களை திணைக்களங்களுக்கு பகிருங்கள்!

### வடக்கு ஆளுநரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 15

வடக்கு மாகாணத்தில் உள்ள கமநல சேவைத் திணைக்களங்களில் பயன்படுத்தப்படாதுள்ள உழவு இயந்திரங்களைப் பாதுகாப்பதற்கு வடக்கு மாகாண ஆளுநர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கின் 5 மாவட்ட கமநல சேவைத் திணைக்களங்களுக்கு 400 உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

இந்த உழவு இயந்திரங்கள் இந்திய அரசின் நிதியுதவியுடன் வழங்கப்பட்டிருந்தன. அவற்றில் நூற்றுக் கணக்கானவை தற்போது உபயோகிக்கப்படாதுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டதுக்கு வழங்கப்பட்ட 127 உழவு இயந்திரங்களில் 41 உழவு இயந்திரங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு வழங்கப்பட்ட 100 உழவு இயந்திரங்களில் 60 உழவியந்திரங்கள் போதுமானவை என்று தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தில் 130 உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளபோதும் 70 உழவு இயந்திரங்கள் போதுமானவை என்று கூறப்படுகின்றது.

வவுனியா மாவட்டத்தில் 105 உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளபோதும் அங்கும் அதிகமானவை பயன்படுத்தப்படாதுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. இவற்றை விவசாயிகளுக்கு வழங்க முடியாது விடினும், வடக்கில் உள்ள அரச திணைக்களுக்கு அவற்றைப் பகிர்ந்தளித்துப் பயன்படுத்துவதற்குரிய ஏற்பாடுகளை வடக்கு மாகாண ஆளுநர் மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த உழவு இயந்திரங்களின் பதிவுகள் பொருளாதார அமைச்சின் கீழேயே பேணப்படுகின்றது என்றும், அதனால் பழுதடைந்துள்ள உழவு இயந்திரங்களைக் கூட விற்பனை செய்ய முடியாத நிலமை காணப்படுகின்றது என்றும் கூறப்படு கின்றது. (எ-105)

## சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகத் திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

சுமார் 3 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோக திட்டம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் நேற்று காலை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

பீனா அமைப்பு மற்றும் அரச தலைவரின் கீழ் உள்ள சிறுநீரக நோய் தடுப்பு அமைப்பு ஆகியன இணைந்து இந்தக் குடிதண்ணீர் விநியோக திட்டத்தினை நாடளாவிய ரீதியில் ஆரம்பித்துள்ளன.



இதன் ஊடாக பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் தமது அன்றாட குடிதண்ணீர் தேவைக்கான தண்ணீரை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்தத் திட்டத்தினை பராமரிப்பதற்கும் குடிதண்ணீர் விநியோகத்தை கண்காணிப்பதற்குமான பொறுப்பு இலங்கை கடற்படையினரிடம் வழங்கப்பட்டிருக்கின்றது.

நிகழ்வில் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இ.ஆனல்ட் ,கடற்படை அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் ,ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-7)

## தேசிய சுகாதாரநல கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 15

தேசிய சுகாதாரநல கண்காட்சி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக சுகாதார போச, சுதேச மருத்துவத் துறை இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ)

# மேய்ச்சல் தரவை இன்மையால் கால்நடை வளர்ப்போர் சிரமம்

கிளிநொச்சி, மார்ச் 15

இரணைமடுவுக்கும், புளுதியாற்றுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் இருந்து மேய்ச்சல் தரவைக்காக ஆயிரம் ஏக்கர் நிலத்தை ஒதுக்கித் தர வேண்டும் என்று கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் மாவட்டச் செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்துக்குத் தற்போது 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாடுகள் காணப்படும் நிலையில் தற்போதுவரை மேய்ச்சல் தரவைகள் இல்லை. கிளிநொச்சி மாவட்டத்தில் குறைந்தது 3 மேய்ச்சல் தரவைகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று 10 ஆண்டுகளாகக் கோரி வருகின்றோம். 10 ஆண்டுகளுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் அமைப்பின் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் பல மேய்ச்சல் தரவைகளை ஏற்படுத்தித் தந்திருந்தனர். அவர்களால் இயலுமாக இருந்த காரியத்தை அரச அதிகாரிகளால் கடந்த 10 ஆண்டுகளாக வழங்க முடியாதுள்ளமை கவலைக்குரியது.

எமது மாவட்டத்தில் மேய்ச்சல் தரவை ஏற்படுத்தித் தாருங்கள் என்று கடந் திங்கட்கிழமை மாவட்டச் செயலரிடம் கோரிக்கை விடுத்தோம். அதற்கு அவர், நானும் இது தொடர்பில் தொடர்ந்து வலியுறுத்துகின்றேன். ஆனால் வளவளத் திணைக்களம் நிலத்தைத் தர மறுக்கின்றது என்று கூறினார்.

இந்த நாட்டில் என்ன ஆட்சி நடைபெறுகின்றது என்று சந்தேகமாக உள்ளது. கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரவைகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-105)



## வவுனியாவில் சூரிய சக்தி மின்கலத்தொகுதி திறப்பு

வவுனியா,மார்ச்.15

வவுனியாவில் சூரிய சக்தியில் இருந்து மின்சாரத்தினை பெறக் கூடிய மின்கலத்தொகுதிக் கட்டமைப்பு மின்சக்தி எரிசக்தி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் நேற்று திறந்துவைக்கப்பட்டது. வவுனியா அட்டமஸ்கட பகுதியில் தனியார் நிறுவனமொன்றினால் 380 மில்லியன் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்ட குறித்த சூரிய சக்தியில் இருந்து மின்சாரத்தை பெறும் கட்டமைப்புத்தொகுதியானது நாளாந்தம் 7 ஆயிரம் யூனிட் மின்சாரத்தினை உற்பத்தி செய்து வழங்கக் கூடியது.

மின்சாரத்தினை குறைந்தவிலையில் பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டில் சூரியசக்தியில் இருந்து மின்சாரத்தினை பெறும் பொறிமுறைகள் அரசின் முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் வவுனியாவில் குறித்த கட்டமைப்பு திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க, வர்த்தக கைத்தொழில் மீளக்குடியேற்ற அமைச்சர் ரிசாட் பதியுதீன், குறித்த நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், வவுனியா நகரசபை உறுப்பினர் அப்துல் பாரி, ரிசாட் பதியுர்தீனின் பிரத்தியேகச் செயலர் முத்து முகமது உட்பட பலர் கலந்துகொண்டிருந்தனர். இந்தப் பகுதியில் ஏற்கனவே இரண்டு சூரியசக்தியில் மின் உற்பத்தி செய்யப்படும் கட்டமைப்புத் தொகுதிக்ள் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை அமைச்சர் ரவி கருணாநாயக்க கிளிநொச்சிக்கும் பயணம் மேற்கொண்டிருந்தார். கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்ட அவர், பூநகரிப் பகுதியில் காற்றாலை அமைத்து அநேக பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படும் என்ற வாக்குறுதியை வழங்கினார். (ஜ-110,6)




## மாணவனுக்கு ஈருருளி கையளிப்பு

கொடிகாமம், மார்ச் 15

கல்விக்கு கரம் கொடுப்போம் திட்டத்துக்கமைவாக போக்குவரத்து தேவையுடைய மாணவன் ஒருவருக்கு ஈருருளி வழங்கி வைக்கப்பட்டது.

உதவும் இதயங்கள் நிறுவனத்தின் ஊடாக மோகன் வசந்திராதேவி தம்பதியினரின் புதல்வி பிறித்திகாவின் 25 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அவர்களால் இந்த உதவி வழங்கப்பட்டது.

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் 3 ஆம் குறுக்கில் வசிக்கும் மாணவன் கெனிட் திருக்குமரனுக்கே இந்த உதவி வழங்கப்பட்டது.

உதவும் இதயங்கள் நிறுவனத்தின் உறுப்பினர் செல்வன் கிசோபன் மற்றும் தனுசன் ஆகியோர் நேரடியாகச் சென்று அண்மையில் வழங்கி வைத்தனர். (ஜ-159)

## றோல் போல் விளையாட்டுக்கான வசதிகளை ஏற்படுத்தக் கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 15

கிளிநொச்சி மாவட்டத்தில் றோல் போல் விளையாட்டுக்கான வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டம் கடந்த சில வருடங்களாக றோல் போல் விளையாட்டில் சாதித்து வருகிறது. கடந்த 2017 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து உலகக் கிண்ண றோல் போல் போட்டிக்கும், ஆசிய கிண்ண றோல் போட்டிக்கும் யுவதிகள் சென்று சாதித்தும் வந்துள்ளனர்.

ஆனால் கிளிநொச்சி மாவட்டத்தில் றோல் போல் விளையாடுவதற்கும், பயிற்சி பெறுவதற்குமாக எவ்வித அடிப்படை வசதிகளும் இல்லை. கடந்த 2017 ஆம் ஆண்டு உலகை கிண்ண றோல் போல் போட்டி பங்களாதேஸில் இடம்பெற்ற போது இலங்கை தேசிய றோல் போல் அணியில் இடம்பிடித்த கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவிகள் மற்றும் கடந்த பெப்ரவரி மாதம் இந்தியாவின் கர்நாடக மாநிலம் பெல்கமில் இடம்பெற்ற ஆசிய றோல் போட்டியில் இலங்கை தேசிய அணியில் விளையாடிய கிளிநொச்சி யுவதிகள் தங்களுக்கான பயிற்சியை நெல் உலரவிடும் தளத்திலும், பொது நோக்கு மண்டபத்துக்கும் பெற்றே போட்டியில் பங்குபற்றிச் சாதித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டம் தற்போது றோல் போல் போட்டியில் பிரகாசித்து வரும் நிலையில் மாவட்டத்தில் றோல் போல் போட்டிக்கான எவ்வித வசதிகளும் இதுவரை இல்லை. றோல் போட்டிக்கான மைதானம் இல்லை, பயிற்றுவிப்பாளர் இல்லை, வீர வீராங்கனைகளுக்கான உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமம் எனப் பல நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

றோல் போல் போட்டியில் தேசிய அணியில் இடம்பிடித்து சர்வதேச போட்டியில் பங்குபற்றும் அளவில் திறமைகளைக் கொண்டுள்ள இளைஞர் யுவதிகள் உள்ள மாவட்டத்தில் விளையாட்டுக்குரிய அடிப்படை வசதிகளையும், பயிற்றுவிப்பாளரையும் அரசு நியமிக்க வேண்டும் என மாவட்டத்தின் விளையாட்டுச் சமூகம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-214)



## குழாய்க்கிணறு வழங்கப்பட்டது

வறுமை நிலையில் உள்ள குடும்பம் ஒன்றின் தண்ணீர்த் தேவையை நிறைவு செய்யும் வகையில் குழாய்க்கிணறு அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதி உதவியை பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் எஸ். ரிஸாம்தீன் வழங்கிவைத்திருந்தார். வவுனியா - மன்னார் வீதியில் வசிக்கும் குடும்பம் ஒன்றுக்கே இந்த உதவி வழங்கப்பட்டது. அத்துடன் தண்ணீர் இறைக்கும் இயந்திரமும் வழங்கிவைக்கப்பட்டது. வவுனியா நகரசபை உறுப்பினர் எம். லரீப்பினால் அந்தக் குடும்பத்திடம் அண்மையில் கையளிக்கப்பட்டது. (ஜ-110)



## மைதான சீரமைப்புக்கு நிதி அன்பளிப்பு

வவுனியா.மார்ச்.15

வவுனியா கள்ளிக்குளம் விளையாட்டு மைதானத்தின் சீரமைப்பு பணிகளுக்கு வவுனியா நகரசபையின் உறுப்பினர் க.சந்திரகுலசிங்கம் நிதி அன்பளிப்புச் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த மைதானத்தின் சீரமைப்புக்கு முதற்கட்டமாக பாத்தாயிரம் ரூபாய் வழங்கி வைக்கப்பட்டது. (ஜ-110)

# அனுமதி பெற்றவர்கள் மட்டுமே காவடிக்கு முட்கள் குத்தமுடியும்

### சாவகச்சேரி சுகாதாரப் பிரிவு அறிவுறுத்து

சாவகச்சேரி, மார்ச் 15

சுகாதாரத் திணைக்களத்தில் அனுமதி பெற்றவர்களிடம் மாத்திரமே, கோவில் நேர்த்திக்கு அடியார்கள் முட்கள் குத்தி காவடி எடுக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சுகாதார முறைகள் பேணாத முட்களால் நோய்கள் பரவும் அபாயம் உள்ளதால் அனுமதி பெறவேண்டுமென்று சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

காவடி எடுப்போரின் நலன் கருதி காவடி முள் வைத்திருப்போரும் முட்காவடி எடுக்கவுள்ளோரும் பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னரே காவடி எடுக்க முடியுமென்றும் அனுமதி பெறாமல் நேர்த்திக்காகக் காவடி எடுக்க முயன்றால் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர் எனவும் சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

சாவகச்சேரி மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தையொட்டி வெளிட்டுள்ள செய்திக்குறிப்பில் இவ்வாறு அறிவித்துள்ளனர்.

பொங்கல் உற்சவத்தையொட்டி தண்ணீர்ப் பந்தல் நடத்துவோர் பயன்படுத்தவுள்ள கிணறு தொடர்பான விவரங்களைச் சமர்ப்பித்து பொதுச் சுகாதார பரிசோதகரின் அறிக்கை பெற்ற பின்னரே கிணற்றுநீர் பாவனைக்கு எடுக்க வேண்டும். கிணற்றிலிருந்து வாகனங்களில் கொண்டு வருபவர் தனிநபர் சுகாதாரம் தொடர்பான பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை பெற்றிருக்கவேண்டும்.

பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவ காலத்தில் வெப்பம் அதிகமாகக் காணப்படுவதால் குழந்தைகள் சிறுவர்களுடன் வருவோர் சுத்தமான குடிதண்ணீரைக் கொண்டு வருமாறும் அறிவித்துள்ளனர். ஆலய வளாகத்தில் காணப்படும் தீர்த்தக் கேணிநீர் பொங்கல், அன்னதானம் போன்றவற்றுக்குப் பயன்படுத்துவதால் இராசயனப் பொருள்களான சவர்க்காரம் சம்போ பாவிப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறும் அறிவித்து மக்களின் சுகாதார நலன் கருதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அடியார்களை ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுள்ளனர். (த-9)

## குடும்ப தலைவருக்கு கோடரி வெட்டு

கொடிகாமம், மார்ச் 15

கோடாரி வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் மந்துவில் கிழக்கில் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்றது.

மந்துவில் கிழக்கைச் சேர்ந்த ந.கோபாலன் (வயது 60) என்பவரே படுகாயமடைந்தார். குடும்பப் பிரச்சினை காரணமாக ஏற்பட்ட கைகலப்பில் சம்பவம் இடம்பெற்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று கூறப்படுபவர் தலைமறைவாகியுள்ளார். (து)

# கடந்த ஆண்டை விட இம்முறை மன்னாரில் விளைச்சல் அதிகம்

மன்னார், மார்ச் 15

மன்னாரில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அதிக விளைச்சல் கிடைத்துள்ளது என்று விவசாயிகள் தெரிவித்தனர். ஒரு ஏக்கருக்கு 35 மூடை முதல் 55 மூடை வரை நெல் விளைந்துள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்டத்தில் மாந்தை, முசலி, நானாட்டான், மடு ஆகிய பிரதேசங்களில் இருந்த வருடம் 24 ஆயிரம் ஏக்கரில் பெரும்பாகச் செய்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் அதற்கு அதிகமான நிலப்பரப்புக்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது என்று நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்திருந்தது.

அதனால் நீர் பிரச்சினைகள் சில காணப்பட்டபோதும் அவை தீர்த்து வைக்கப்பட்டன என்று முசலி விவசாயிகள் தெரிவித்தனர்.

மாந்தையில் சில இடங்களில் கபில நிறத் தத்திகளால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருந்தனர். ஏனைய இடங்களில் விவசாய நடவடிக்கைகளில் பாதிப்புகள் ஏற்படவில்லை என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

நானாட்டானில் ஏனைய இடங்களை விடவும் ஓரிரு வாரங்கள் தாமதமாக பயிர்ச் செய்கை செய்யப்படுவதால் காலநிலையால் பாதிக்கப்படும் நிலைமை முன்னைய காலங்களில் காணப்பட்டது. இந்த ஆண்டு அவ்வாறான பாதிப்புக்கள் இல்லை. ஆனால் கட்டுப்படுத்த முடியாத அளவு களைப்புற்களின் வளர்ச்சி காணப்பட்டது. எனினும் அதையும் தாண்டி நல்ல விளைச்சல் கிடைத்துள்ளது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

நெல் சந்தைப்படுத்தும் சபை நெல்லுக்கான விலையை அதிகரிக்க வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளை சில இடங்களில் விளைச்சல் திருப்திகரமாக அமையவில்லை என்றும் விவசாயிகளில் ஒரு சாரார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மன்னார் மாவட்ட விவசாயப் பிரதிப் பணிப்பாளர் கே.எம்.ஏ. சுகுருவிடம் கேட்டபோது:

பயிர்ச் செய்கை ஒழுங்கு முறைகளை கடைப்பிடிக்காமையே விளைச்சல் குறையக் காரணம். ஒழுங்கான பண்பாட்டு முறையில் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச் செய்கையில் ஏக்கருக்கு 110 முதல் 150 புசல் வரையில் விளைந்துள்ளது. சில இடங்களில் 80 புசல் விளைச்சல் கூடக் கிடைத்துள்ளது. -என்றார். (எ-213)

## தவக்கால தியானங்கள்

### சினம் மனிதனை சிறுமைப்படுத்தும்

சினப்படும்போது மனம் சமநிலை வழுங்கும். உறவுச்சிக்கலை உருவாக்கும். ஆயுள், அமைதி குறையும். கோபம் என்றும் ஏணியில் நடந்து ஆன்மிகக் கோபுரத்தை அடைய முடியாது. கோபம் உருவாக்கும் எரிச்சல் உடலில் பதற்றத்தை உருவாக்கும். சினம் மிதமிஞ்சினால் உடலில் நச்சுப்பொருள்களை ஹார்மோன்கள் உற்பத்தியாக்கும். விளைவு - நோய்கள் உடலை விட்டு அகலாதிருக்கும்.

தம் சகோதரர் சகோதரிகளிடம் சினம் கொள்கிறவன் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவர். அறிவிலியே என்பவர் எரி நகரத்துக்கு ஆளாவர். முட்டாளே என்பவர் தலைமைச் சங்கத் தீர்ப்புக்கு ஆளாவர். (மத்.5:22)

உறவுகள் உன்னதமானவை. உறவுகள் தான் மனித வாழ்க்கை என்னும் வாகனத்தை மகிழ்ச்சியோடு ஓட்டிச் செல்ல உதவும் சக்கரங்கள். உறவுகளின் கீறல்கள் விழும்போது வாழ்வில் விரிசல்கள் வலுக்கின்றன. எதிரியோடும் உடன்படிக்கை செய்து கொள்ளச் சொல்லும் இயேசு இதைத்தான் வலியுறுத்துகிறார். நிறைவான, மகிழ்வான வாழ்வுக்கு அடுத்துள்ள மனிதர்களோடு ஒப்புரவாகி உறவுகொள்ளவேண்டும். மனித மனங்களில் நல்லுறவே மிகச் சிறந்த வழிபாடு. இவற்றைக் கடைப்பிடிக்காத எந்த உறவு முயற்சியும் செயலும் இறை தர்மம் ஆகாது. மனிதர்களின் சாவையோ, அழிவையோ விரும்பாது வாழ்வை மட்டும் வழங்கும் இறை விருப்ப நோக்கம் மனிதர்களின் நல்லுறவு ஒன்றே. கடவுளோடும் மனிதரோடும் ஒப்புரவாவோம். நிலைவாழ்வு பெறுவோம்.

- எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை.

## முதல்முறையாக வவுனியா செல்லும் கல்வி இராஜாங்க அமைச்சர்

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வில் கலந்துகொள்வதற்காக கல்வி இராஜாங்க அமைச்சராகப் பதவி ஏற்றுக் கொண்ட பின்னர் முதற் தடவையாக வவுனியாவுக்கு திருமதி விஜயகலா மகேஸ்வரன் செல்லவுள்ளார்.

நாளை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி எஸ். ஜெபநாயகி தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில், வடமாகாண கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தித்தலைவரும் கிறிஸ்தவ மத விவகாரங்களுக்கானசெயலருமான அருட்கலாநிதி எஸ் சந்திரகுமாரின் அழைப்பின் பெயரில் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வில் அமைச்சர் கலந்துகொள்ளவுள்ளார். (க)



திருக்கேதீச்சர கோவில் வீதியிலுள்ள

## அலங்கார வளைவு உடைத்தோரை பொலிஸார் கைது செய்யாதது ஏன்?

அகில இலங்கை இந்துமாமன்றம் கேள்வி

யாழ்ப்பாணம், மார்ச் 15

மன்னார் திருக்கேதீச்சர வீதியில் அலங்கார வளைவு உடைப்பில் ஈடுபட்டவர்களின்காணொலி, புகைப்படங்களை ஆதாரமாகக் கொண்டு, அவர்களைக் கைது செய்ய நீதிமன்று உத்தர விட்டும் பொலிஸார் இதுவரை எவரையும் கைது செய்யாதது ஏன்? இவ்வாறு அகில இலங்கை இந்துமாமன்றம் கேள்வியெழுப்பியுள்ளது.

சந்தேக நபர்களைக் கைது செய்யுமாறு மன்னார் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. உத்தரவைப் பொலிஸார் ஏன் நடைமுறைப்படுத்தவில்லை?

எந்தஒ்ருதனிநபரினதும் அல்லது மத அமைப்பினதும் வழிகாட்டலில், சட்டவிரோதமாக, அட்டூழியம் புரிந்தவர்களை இதுவரை கைதுசெய்யாமை இந்த நாட்டின் சட்டத்தையும் நீதிப் பரிபாலனத்தையும் நிந்தித்து, பாதிக்கப்பட்டவர்களுக்குச் செய்யும் அநீதியுமாகும் என்பதைச் சுட்டிக் காட்ட விளைகின்றோம்.

இந்தத் துன்பியல் சம்பவம் தொடர்பில் இரண்டு மாவட்டங்களைச் சேர்ந்த மதகுருமார்கள் வெவ்வேறு விதமான அறிக்கைகளை விடுத்துள்ளனர். மன்னார் மாவட்ட கத்தோலிக்க மதகுரு விடுத்துள்ள அறிக்கை இந்தச் சம்பவத்தை நியாயப் படுத்துவது போலவும், முற்றுமுழுதாக சம்பவத்தைத் திரிப்பதாகவும் அமைந்துள்ளது.

மக்களைத் திசை திருப்பும் செயல்களைக் கைவிட்டு, நாட்டில் அனைத்து மதங்களும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதைப் பற்றிப் பேசிக் கொண்டே பின்புலத்தில் தமது செயற்பாடுகள் மூலம் இந்த நாட்டில் குழப்பங்களையும் பிணக்குகளையும் ஏற்படுத்தும் பாம்பின் நாக்குப்போன்ற இரட்டைநிலைப்பாட்டையும் விட்டுவிட வேண்டும்எனவும்மீண்டும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

சிவராத்திரிக்கு முதல்நாள் ஆயத்தப் பணிகளின்போது, நீண்டகாலமாக மாந்தை வீதியின் முகப்பில் அமைக்கப்பட்டிருந்த திருக்கேதீச்சர ஆலய வீதி அலங்கார வளைவைச் சீர்செய்யும் நோக்கில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு இடையூறு செய்து, அந்த வளைவைப் பிடுங்கியெறிந்துஅட்டூழியம் செய்த கத்தோலிக்க மதத்தவர்களின் செயல் தொடர்பில் அகில இலங்கை இந்து மாமன்றம் மீண்டும் தனது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## பரந்தன் ரசாயன தொழிற்சாலை வாக்குறுதியை மறந்த மைத்திரி

யாழ்ப்பாணம், மார்ச் 15

பரந்தன்இரசாயனத்தொழிற்சாலை என்னும் பெயரில் கொழும்பில் இயங்கும் தொழிற்சாலையை பரந்தன் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச தலைவர் கூறி 3மாதங்கள் கடந்தபோதும் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதி அரச தலைவரின் வடக்கு கிழக்குக்கான அபிவிருத்திச் செயலணிக் கூட்டம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் அரச தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது. வடக்கில் இயங்கிய பெரும் தொழிற்சாலைகளில் ஒன்றான பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை நாட்டில் தற்போது இயங்குகின்றதா? இல்லையா? என்பதனை உரிய அமைச்சின் அதிகாரிகள் தெரியப்படுத்த வேண்டும் என்று அந்தக் கூட்டத்தில் அரச தலைவரிடம் கோரப்பட்டது. உரிய அமைச்சின் அதிகாரிகள் அது தொடர்பில் விளக்க வேண்டும் என்று அரச தலைவர் தெரிவித்திருந்தார்.

பரந்தனில்இரசாயனதொழிற்சாலைக்கு 120 ஏக்கர் நிலம் உள்ளது. போரால் அழிவடைதுள்ள அந்தத் தொழிற்சாலை சீரமைக்கப்பட்டு இயங்க வைக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

அந்தத் தொழில்சாலையின் பெயரில் கொழும்பில் தொழிற்சாலை ஒன்று இயங்குகின்றது. அந்தத் தொழிற்சாலையின் பெயரில் பல வாகனங்கள் திரிகின்றன. பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் பணியாற்றிய பலர் தற்போதும் தொழில் இல்லாதிருக்கின்றனர். ஆனால் அந்தத் தொழிற்சாலையின் பெயரில் இப்போது கொழும்பில் பலர் பணியாற்றுகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் சுட்டிக்காட்டியிருந்தார்.

அரச தலைவர் மைத்திரிபால இந்த விடயங்கள் தொடர்பாக அதிகாரிகளிடம் கேட்டபோது, அதிகாரிகள் ஆம் எனப் பதிலளித்திருந்தனர். அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா அந்தத் தொழிற்சாலை எங்கேனும் இயங்குவது தொடர்பில் வரவேற்க வேண்டும் என்று கூறியிருந்தார். அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் பரந்தன் இராசாயனத் தொழிற்சாலை எனில் அது பரந்தனில் இயங்க வேண்டும், கொழும்பில் இயங்குவதானால் அதைக் கொழும்பு இரசாயனத் தொழிற்சாலை எனப் பெயர் மாற்ற வேண்டும் என்று கூறியிருந்தார்.

அதையடுத்துப் பரந்தன் இரசாயனத்தொழிற்சாலை என்ற பெயரில் இயங்கும் தொற்சாலையை உடனடியாகப்பரந்தனுக்கேகொண்டு செல்ல வேண்டும் என்று அரச தலைவர் உத்தரவிட்டார். அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு 3 மாதங்கள் கடந்துள்ளபோதும் அந்த விடயத்தில் எந்த முன்னேற்றமும் இல்லை. அரச தலைவரின் இந்த வாக்குறுதியும் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் குறிப்பிட்டுள்ளார். (எ-105)



## 12 கிலோ கஞ்சா மீட்பு: வவுனியா நபர்கள் கைது

கொழும்பு, மார்ச் 15

11 கிலோ 585 கிராம் கேரளக் கஞ்சா வைத்திருந்தனர் என்று வவுனியாவைச் சேர்ந்த இளைஞர் இருவர் குருந்துவத்தை, ஹெட்டேவத்தையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. குருந்துவத்தை பொலிஸ் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய சுற்றிவளைப்பு நடத்தி அது மீட்கப்பட்டது. சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். 28 மற்றும் 29 வயதுடைய சந்தேகநபர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் கோட்டை நீதிவான் மன்றில் இன்று முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (து)

# ஆலய வீதியில் பறித்த கல்,மண்ணை அகற்றவும்

## சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஆலயத்தினர் கோரிக்கை

உயரப்புலம் உந்துங்க விநாயகர் ஆலய வீதியில் பறிக்கப்பட்டிருக்கும் கல்,மண் ஆகியவற்றை விரைவாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலயத்தினர் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரியுள்ளனர்.

சுமார் 2 கிலோ மீற்றர் நீளமான உயரப்புலம் - குளப்பிட்டி வீதியை காப்பெற் வீதியாக மாற்றியமைக்க வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்வந்துள்ளது.

இதற்குத் தேவையான கல்,மண் ஆகியவை உயரப்புலம் உந்துங்க விநாயகர் ஆலய வீதியில் பறிக்கப்பட்டுள்ளன.

வீதியின் சீரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 6 மாதங்கள் கடந்த நிலையிலும் இதுவரை அபிவிருத்தி வேலைகள் முடிவடையாமையால் வீதியில் குவிக்கப்பட்ட கல்,மண் அகற்றப்படாமல் உள்ளன. மேற்படி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா ஆரம்பமாகவுள்ளதால் ஆலயத்துக்கு வரும் அடியார்களின் நலன் கருதி வீதியில் குவிக்கப்பட்டிருக்கும் கல்,மண் ஆகியவற்றை அகற்றுமாறு பரிபாலன சபையினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியல் பிரிவுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது;

மிகவும் நெருக்கமான வீதி ஓரம் என்பதால் சீரமைப்புக்கு தேவையான பொருள்களை அங்கு பறிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆலயத்தின் பெருந்திருவிழா ஆரம்பமாகவுள்ளதால் பக்தர்களின் நன்மைகருதி வீதிசீரமைப்பக்காக பறிக்கப்பட்ட பொருள்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ-7.115)

# வீழ்ச்சியடைகின்றது புகையிலைச் செய்கை

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் புகையிலை செய்கையாளர்களின் எண்ணிக்கை கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் இந்த குறைவடைந்துள்ளதாக மாவட்டச் செயலக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாயிகளின் பணப் பயிர்களில் புகையிலையும் முதன்மையானதாகும். நான்கு மாதங்களில் பயனைப் பெற்று கொள்ள கூடியதும், உற்பத்தி மூலம் அதிக பணமும் கிடைக்கிறது. போதை பொருள் பாவனையற்ற நாடாக 2020 ஆம் ஆண்டு இலங்கை இருக்க வேண்டும் என்பதற்காக அரச தலைவர் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

இதனால் புகையிலைச் செய்கையை கைவிட வேண்டும் அதற்கான மாற்றுப் பயிர்களைத் தெரிவு செய்து பயிரிட வேண்டும் என்று விவசாயத் திணைக்களத் தால் அறிவுறுத்தப்படுகின்றனர். அதனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது புகையிலைச் செய்கை குறைவடைந்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 11 பிரதேச செயலர் பிரிவில் புகையிலை செய்கை நடைபெறுகிறது. 2017 ஆம் ஆண்டு ஆயிரத்து 956 விவசாயிகள் 741.615 ஹெக்ரேயரிலும், 2018 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 474 விவசாயிகள் 607.31 ஹெக்ரேயரிலும் புகையிலைச் செய்கையில் ஈடுபட்டனர். ஆனால் 2019 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 352 விவசாயிகள் 571.55 ஹெக்ரேயரில் மாத்திரம் புகையிலை செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 36 ஹெக்புரேயரில் கையிலை செய்கை குறைவடைந்துள்ளது. நெடுந்தீவு, காரைநகர், யாழ்ப்பாணம்நகர், மருதங்கேணி ஆகிய பிரதேச செயலர் பிரிவில் புகையிலைச் செய்கை நடைபெறுவதில்லை.

புகையிலைக்கு மாற்று பயிராக உருளைக் கிழங்கு, கற்றாளை போன்றவை பயிரிடுதல் தொடர்பில் ஆராயப்படுகிறது - என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7,173)

# நினைவு கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 15

அண்மையில் காலமான இடதுசாரி இயக்கத் தோழர்கள் கே.பி.சில்வா, ஜெயதிலக டி.சில்வா ஆகியோரை நினைவு கூறும் கூட்டம் யாழ்ப்பாணம் டி.எம்.ஐ தொழில் நுட்பப் பிரிவில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும்.

பன்னாட்டு மார்க்சிய குழுவின் ஏற்பாட்டில் தலைவர் சொ.சிவபாலன் தலைமையில் இடம் பெறும் நிகழ்வில் சுத சிறிதரன்,க.தனேந்திர ராஜா ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (ஐ)

# சமூகச் சீர்கேட்டைக் கட்டுப்படுத்த பொது மக்கள் முன்வர வேண்டும்

## வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிப்பு

சமூக விரோதச் செயல்கள் இல்லாத கிராமியத் தூய்மையுடன் கூடியதாக வலிகாமம் கிழக்கு பிரதேசம் பாதுகாக்கப்படும். சமூக விரோதச் செயல்கள் நடைபெறும் இடங்கள் தொடர்பான தகவல்களை உரிய முறையில் வழங்கி ஒத்துழைப்பதற்கு பொது மக்கள் முன்வரவேண்டும் இவ்வாறு வலிகிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராசா நிரோஷ் தெரிவித்தார். வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் ஆள்புல பிரதேசத்தில் சுமகால நிலை தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வலி.கிழக்கு பிரதேசத்தில் நடைபெறும் சமூக விரோதச் செயல்களை முற்றாக இல்லாமல் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதுதொடர்பாக காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர்களுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

வலி.கிழக்கில் சமூக விரோதச் செயற்பாடுகள் நடைபெறும் இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதற்கு பொதுமக்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் உரிய முறையில் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். சிறுப்பிட்டி மற்றும் அச்சுவேலி மேற்கு கைத்தொழிற்பேட்டை ஆகிய இடங்களில் விடுதி என்ற பெயர் மறைப்புடன் பாலியல் தொழில்மையங்கள் செயற்படுவது இனங்காணப்பட்டுள்ளது. இவ்வாறான சமூக விரோதச் செயற்பாடுகளை முற்றாக இல்லாமல் செய்வதற்கு பொதுமக்கள் உரிய முறையில் ஒத்துழைப்பு வழங்கி உதவ முன்வர வேண்டும். -என்றார். (ஐ-11)

# ஆதாரம் காட்டி நகையைப் பெறலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக வளாகத்தில் தங்க ஆபரணம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு அரச அதிபர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனது உரிமையாளர் தகுந்த ஆதாரத்தைக் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# தீயில் எரிந்த நோயாளி சிகிச்சை பயனின்றி சாவு

வடமராட்சி, மார்ச் 15

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவர் அங்கிருந்து தப்பித்து வெளியில் வந்து தனக்குத் தானே மண்ணெண்ணை ஊற்றிக் கொழுத்தி எரியுண்டு படுகாயமடைந்த நிலையில் நேற்று அவர் உயிரிழந்தார். கொற்றாவத்தையைச் சேர்ந்த 34 வயதுடைய விஜயகாந் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவர் வைத்தியசாலையை விட்டு வெளியில் வந்து எரியுண்டதோடு. இறந்துபோனமை அனைவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பருத்தித்துறை மந்திகை மருத்துவனையை அண்மித்த வீதியில் ஒருவர் தனக்குத் தானே மண்ணெண்ணை ஊற்றித் தீ வைத்தார். சம்பவம் நேற்றுமுன்தினம் காலை 7.30 மணியளவில் இடம்பெற்றிருந்தது. அவர் முதல்நாள் புல்லுக்கு விசிறும் மருந்தை உட்கொண்ட நிலையில் பருத்தித்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

எனினும் அங்கிருந்து வெளியில் வந்தே மண்ணெண்ணை ஊற்றிக் கொழுத்திக் கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. உடலில் காயங்களுடன் காணப்பட்ட அவர் அவசர நோயாளர் காவு வண்டிமூலம் பருத்தித்துறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

உதவியாளர் ஒருவருடனேயே விஜயகாந் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். நேற்று காலை உதவியாளர் வெளியில் செல்லும் பொது அவருடன் விஜயகாந்தும் சென்றுள்ளார். இந்த விடயம் எமக்கு தெரியாது.

காலையில் கடமை மாறும் போது சம்பவம் இடம்பெற்றுள்ளது. 7மணிக்குப் பின்னர் கடமையைப் பொறுப்பேற்றவர்கள் விஜயகாந்தைத் தேடியபோதே அவர் தப்பித்து தெரியவந்தது என்று வைத்தியசாலை பொறுப்பதிகாரி தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்றுக் காலை விஜயகாந் உயிரிழந்தார். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையினால் சம்பவம் உறுதிப்படுத்தப்பட்டது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்தனர். (21.26.173)

# சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி பவிலியனுக்கு விரைவில் அடிக்கல்

## சரவணபவன் எம்.பியின் வேண்டுகோளுக்கு அமைவாக கல்வி அமைச்சு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், மார்ச் 15

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் பவிலியன் 10 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு விரைவில் இடம்பெறவுள்ளதாகத் தெரியவருகின்றது.



நேரில் பார்வையிட்டபோது...

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு விழா இந்த ஆண்டு நடைபெறவுள்ளது. அந்தக் கல்லூரிக்கு இதுவரை பவிலியன் இல்லை. பாடசாலை பழைய மாணவர் சங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் கோரிக்கை முன்வைத்திருந்தது.

அப்போதைய கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணனின் கவனத்துக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இதனைக் கொண்டு சென்றிருந்தார். யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் வேண்டுகோளுக்கு அமைவாக, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு நேரில் சென்று நிலமைகளைப் பார்வையிட்டிருந்தார். பவிலியன் அமைப்பதற்கு உறுதியளித்திருந்தார். இதற்காக 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

தொழில்நுட்ப ஆய்வு உள்ளிட் அனைத்துப் பணிகளும் நிறைவடைந்துள்ளன. ஒப்பந்தகாரிடம் திட்டத்தை கையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நிலையில் விரைவில், பவிலியனுக்காக அடிக்கல் நடப்பட வுள்ளதாகத் தெரியவருகின்றது. (ஓ.5)

# 6 நாடுகளின் யோசனை நாட்டுக்கு எதிரானதல்ல

## சபை முதல்வர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 15

இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர்பில் ஆறு நாடுகள் முன்வைத்துள்ள யோசனை நாட்டுக்கு எதிரானது அல்ல என்று சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் அரசதலைவர், தலைமைஅமைச்சர் அலுவலகங்கள், உயர்நீதிமன்ற நீதிபதிகள், அமைச்சு அலுவலகங்கள், அரச சேவை ஆணைக்குழு உள்ளிட்ட 25 நிறுவனங்களுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன்மொழியப்பட்டுள்ள விடயங்களை நாட்டுக்கு எதிரானவையாகக் காண்பிப்பதற்கு குறுகிய அரசியல் நோக்கம் கொண்ட சிலர் முயன்று வருகிறார்கள். அந்த யோசனைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய அவசியம் கிடையாது. மாற்றங்கள் ஏற்படுத்தப்படுமாயின் நாடு பின்நோக்கித் தள்ளப்படும்நிலைமைக்கே முகங்கொடுக்க வேண்டிய ஆபத்துள்ளது.

மகிந்த ராஜபக்ச காலத்தில் நாம் பொருளாதாரத் தடைக்கு உள்ளாகி இருந்தோம் போர் நிறைவடைந்து பத்து வருடங்களாகின்ற நிலையிலும் இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அங்கு இவ்வாறான நிலை ஏன் ஏற்பட்டது என்று புரிந்து கொள்ளவேண்டும். அளவுக்கு மேலாகச் செயற்பட்டால் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும். எமது பொறுப்பு என்ன என்பதை நாம் புரிந்துக்கொள்ளவேண்டும். பொது மக்கள் வாக்கெடுப்புக்கு உள்ளாகின்ற விடயங்கள் எவற்றையும் நாம் மாற்றம் செய்யவில்லை. எங்கும் எல்லையை கடந்து செயற்பட்டால் தலையீடுகள் இடம்பெறும் - என்றார். (த-31)

# மைத்திரி, ரணில், மகிந்த இன்றுவரை இனவாதிகளே!

## பிரபா கணேசன் தெரிவிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 15

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன உட்பட நாட்டின் முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச, தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க என அனைவருமே இனவாதிகள். எவருமே எமது மக்களின் தேவைகளைத் தேடி வந்து பூர்த்திசெய்யப்போவதில்லை என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, வள்ளிபுனத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற முன்பள்ளி ஆசிரியர்களுடனான சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டினுடைய அரசமைப்புச் சட்டம் எமக்கு எதிராக இருப்பதால், தற்போதுள்ள தமிழ்த் தலைவர்கள் இந்த நாட்டின் அரசதலைவராகவோ, தலைமை அமைச்சராகவோ ஆகமுடியாது. இந்தத் தலைமை அமைச்சர்களிடமிருந்தும் அரசதலைவர்களிடமிருந்தும் எங்களுடையவர்களுக்குரியதை சண்டையிட்டு பெறக்கூடிய திராணியுள்ள மக்கள் பிரதி நிதிகள் தெரிவுசெய்யப்படவேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க, மகிந்த ராஜபக்ச மூவரும் இனவாதிகள்தான். இதைச் சொல்வதற்கு நான் பயப்படுவதுமில்லை.

இந்த நாட்டு அரசமைப்புச் சட்டம் எமக்கு எதிராக இருக்கின்றது.

அருகில் சென்று சண்டையிட்டு எமது மக்களுக்குத் தேவையானவற்றைப் பிடுங்கி எடுத்துக்கொண்டு வந்து கொடுக்கக்கூடிய திராணியுள்ள மக்கள் பிரதி நிதிகள் இருந்தால்தான் நாளை எமது வாழ்க்கைக்கு விடிவு கிடைக்கும். அதைத்தான் செய்துகொண்டிருக்கின்றேன். அதைத்தான் மற்ற மக்கள்பிரதிநிதிகளும்செய்ய வேண்டும். இல்லாவிட்டால் எதுவும் நடைபெறாது. எங்கே சென்று பேசவேண்டும், எதைச் தட்டி எடுக்க வேண்டும் என்பதைச் சண்டையிட்டு எடுக்கக் கூடிய திராணியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் உருவானால்தான் நிச்சயமாக இவற்றுக்கு ஒரு முடிவு கட்டக்கூடியவாறு இருக்கும். அதனைத்தான் நான் முன்னெடுத்துச் சென்று கொண்டிருக்கின்றேன்- என்றார். (த-246)

# 19ஆம் திகதிப் போராட்டத்துக்கு அனைவரும் ஆதரவளியுங்கள்

செங்கலடி, மார்ச் 15

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை நிறை வேற்றுவதற்கு இலங்கை அரசுக்கு மேலதிக கால அவகாசம் வழங்கக்கூடாது என்று வலியுறுத்தி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் ஏற்பாட்டில் எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள கடையடைப்பு மற்றும் கவனவீர்ப்புப் பேரணிக்கு மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை முழுமையான ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் முன்னெடுக்கும் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குங்கள்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட இந்துஇளைஞர்பேரவைத் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் எதிர்வரும் 19ஆம் திகதி மேற்கொள்ளவிருக்கும் கடையடைப்பு மற்றும் கவனவீர்ப்புப் பேரணிக்கு எமது மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை முழுமையான ஆதரவு வழங்குகின்றது.

அன்றைய தினம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கடையடைப்புப் போராட்டத்துக்கு மாவட்டத்திலுள்ள வர்த்தகர்களை ஆதரவு வழங்குமாறும் அரச மற்றும் தனியார் பேருந்து போக்குவரத்தை இடைநிறுத்தி பொதுமக்கள் பயணங்களைத் தவிர்த்து ஒத்துழைப்புவழங்குமாறும் அழைப்பு விடுத்துள்ளார்.

கல்லடி பாலத்துக்கு அருகில் ஆரம்பமாகும் கவனவீர்ப்புப் பேரணியில் இன, மத மொழி வேறுபாடுகளின்றி அனைவரும் கலந்து கொண்டு போராட்டத்துக்கு வலுச்சேர்க்க வேண்டும் என்று அவர் அறிக்கை மூலமாக வலியுறுத்தியுள்ளார். (த)

# சி.ஐ.டி. விசாரணையில் அட்மிரல் நழுவல் பதில்

கொழும்பு, மார்ச் 15

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்றுமுன்தினம் 6 மணித்தியாலங்கள் விசாரணை நடத்தினர். எனினும் அவர் நழுவல் போக்கான பதிலையே கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை கடத்திச் சென்று கப்பம் பெற்று காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பாகவே இவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டது. (த)

# பாதீட்டை தோற்கடிக்க முன்னணி கடும் முயற்சி

கொழும்பு, மார்ச் 15

வரவு- செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பதற்கான தீவிர முயற்சியில் இறங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ள சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி, அந்தத் திட்டம் தோற்கடிக்கப்படுமானால் உடனடியாக பொதுத் தேர்தலுக்குச் செல்ல வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்தக் கட்சியின் தலைவர் ஜீ.எல். பீரிஸ் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தின் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது:

வரவு -செலவுத் திட்டம் மீதான இறுதி நாள் வாக்கெடுப்பு ஏப்ரல் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இது வெற்றியடையுமா என்ற சந்தேகம் தற்போது ஏற்பட்டுள்ளது. எதிர்க்கட்சி என்றவகையில், இதனைத் தோல்விக்குட்படுத்த நாம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம். வரவு -செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படுமானால், அமைச்சரவை கலைந்துவிடும். அரசு ஒன்றை அமைக்க எமக்கு அழைப்பு விடுக்கப் பட்டால் நாம் அதனை நிச்சயமாக ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற வேண்டும் என்றே வலியுறுத்துவோம் - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

# அதிகாரத்துக்கும் மன்றங்களுக்கும் இடையில் மோதல் நீடிக்கின்றது

## அளுத்கமகே எம்.பி. தெரிவிக்கிறார்

கொழும்பு, மார்ச் 15

நிறைவேற்று அதிகாரத்துக்கும் நாடாளுமன்றுக்கும், நீதித்துறைக்கும் இடையில் மோதல் நீடிக்கின்றது என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

அரசதலைவர், தலைமைஅமைச்சர் அலுவலகங்கள், உயர்நீதிமன்ற நீதிபதிகள், அமைச்சு அலுவலகங்கள், அரச சேவை ஆணைக்குழு உள்ளிட்ட 25 விடயங்கள் தொடர்பிலான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதம் நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே உரையாற்றுகையில்; தற்போது அரசதலைவரின் ஒதுக்கீட்டைத் தோற்கடிக்கப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் 38பேர் போர்க்கொடி தூக்கியுள்ளனர். இவர்களால் தலைமைஅமைச்சரின் கட்டளைகளைத் தாண்டிச் செயற்பட முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வாக்குகளை பிரயோகிக்காது விடுத்திருந்தால் அரசின் நிலை என்னவாகியிருக்கும். பெரும்பான்மை இல்லாத அரசு ஒன்று நாட்டை ஆட்சி செய்கின்றது. இது தான் வெளிப்படை உண்மை - என்றார்.

குறுக்கீடு செய்த, நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட்மார்ஷல் சரத்பொன்சேகா, சுயாதீன நிறுவனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சியையும், தலைமையையும் விமர்ச்சிக்கும் அரசதலைவருக்கு ஏன் நாம் வாக்களிக்க வேண்டும்? என்று கேள்வி எழுப்பினார்.

அரசதலைவரின் ஒதுக்கீட்டுக்கு ஒருபோதும் வாக்களிக்க மாட்டேன். அது உறுதியான விடயம். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை - என்றார். (த -31)



நாடு முழுவதுமுள்ள பார்வைக் குறைபாடுகள் உள்ள பத்து லட்சம் பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் வேலைத் திட்டத்தை நேற்றுச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். சுகாதார அமைச்சில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (த)

# ஐ.நா. செல்லும் குழு தொடர்பில் கிரியெல்ல – சமரசிங்க சபையில் வாக்குவாதம்

கொழும்பு, மார்ச் 15

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கை சார்பில் செல்லும் பிரதிநிதிகள் குழு தொடர்பில் சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்லவுக்கும் மகிந்த சமரசிங்கவுக்குமிடையில் சபையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

இதன்போது திருகோணமலை மாணவர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டபோது அவர்களின் பெற்றோருக்குத் தொலைபேசியில் தொடர்புகொண்டு சாட்சியமளிக்க வேண்டாமென்று கூறிய அமைச்சர்களின் பெயர்ப் பட்டியல் தன்னிடம் உள்ளது. இந்த பூச்சுற்றல் வேலையை என்னிடம் வைத்துகொள்ள வேண்டாம் என சபை முதல்வர் சபையில் சினத்துடன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இந்த வருடத்துக்கான வரவு -செலவுத் திட்டத்தில் அரசதலைவர் மற்றும் தலைமைஅமைச்சர் அலுவலகங்களின் நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் மகிந்த சமரசிங்க உரையாற்றிய போதே வாக்குவாதம் ஏற்பட்டது. (த)

# பல்கலை மாணவர் பேரணியில் தமிழரசுக் கட்சியும் பங்கேற்பு

## கட்சித் தலைவர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 15

இலங்கையின் இணைஅனுசரணையுடன் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை, குறுகிய கால அட்டவணைக்குள் இலங்கை நிறைவேற்றாவிட்டால், ஐ.நா. மாற்று நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இதற்கான பொருத்தமான தீர்மானங்களை ஐ.நா. மனித உரிமைகள் சபை, ஐ.நா. பாதுகாப்புச் சபை, வல்லாண்மை நாடுகள் இராஜதந்திர ரீதியில் எடுக்க நாம் ஒன்றுபடவேண்டும்.

இதற்கான திட்டங்களையிட்டு தீர்மானிப்பதற்கு அரசியல் கட்சிகளை கடந்து நாம் செயற்பட வேண்டும். இந்த இலக்கைக் கொண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் அமைப்பு நாளைய பேரணிக்கு அழைப்பு விடுத்துள்ளது. இந்த அழைப்பை ஏற்று பேரணியை, ஜனநாயகப் போராட்டங்களை வரவேற்போம் என்று அழைப்பு விடுக்கி ன்றோம். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவரதும், தமிழ் மக்கள் பேரணியின் இலக்கும் செய்தியும் ஐ.நா. மனித உரிமைகள் சபை, பன்னாட்டுச் சமூகத்தை எட்டவேண்டும்.

2009ஆம் ஆண்டு போர் நிறைவடைந்த பின்னர் ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் இலங்கைக்கு வந்திருந்தார். அப்போதைய அரச தலைவர் மகிந்தவுடன் சந்தித்தார். போர்க்குற்றங்களை விசாரிக்கவும், இலங்கை இனப்பிரச்சினை உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் இருவரும் உடன்பட்டனர்.

2011ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள், அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டனர். அவர்களுடன் பேச்சு நடத்தப்பட்டது. இதன் விளைவாக, 2012ஆம் ஆண்டு அமெரிக்கா ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானத்தை நிறைவேற்றியது. அதனையும் சிலர் ஜெனிவாவில் தீயிட்டுக் கொழுத்தினர். அது துரதிஷ்டவசமானது.

2013ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அப்போதைய ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை வந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளையும் சந்தித்தார். இலங்கை மீது கடும் தொனியில் அறிக்கை வெளியிட்டதுடன், போர்க்குற்ற விசாரணைக்கான நகர்வுகளையும் முன்னெடுத்தார். 2014ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் விசாரணை நடத்தப்பட்டது. 2015ஆம் ஆண்டு ஹுசைன் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளராகப் பொறுப்பேற்றார். அதே ஆண்டு ஒக்ரோபர் மாதம் இலங்கை தொடர்பான ஐ.நா. தீர்மானம் இலங்கையின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்டது. இது பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதலளித்தது. 2016ஆம் ஆண்டு ஆணையாளர் ஹுசைன் இலங்கைக்கு வந்தார். இலங்கை தொடர்பில் தனது ஏமாற்றத்தை வெளியிட்டார்.

இதன் பின்னர் 2017ஆம் ஆண்டு, 34/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது இராஜதந்திர வெற்றியாகப் பார்க்கப்பட்டது.

ஆனால் இலங்கை அரசு தீர்மானங்களை முழுமையாக நடைமுறைப்படுத்த தவறிவிட்டது. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தற்போதைய ஆணையாளர், இலங்கை தொடர்பில் அறிக்கை முன்வைத்துள்ளார். அது பாராட்டக் கூடிய விதத்தில் உள்ளது.

பொருளாதார உதவித் திட்டங்களைத் திரும்பப் பெற்றன. இத்தகைய நடவடிக்கைகளை இலங்கை அரசுக்கு எதிராக ஏன் உலக நாடுகள் எடுக்க முடியாது என்று கேள்வி எழுப்புகின்றோம் - என்றுள்ளது. (ஒ.5)

# அமெரிக்கத் தூதருடன் மகிந்த சந்தித்துப் பேச்சு

## பசில், பீரிஸூம் சென்றிருந்தனர்

கொழும்பு, மார்ச் 15

அமெரிக்க தூதுவர் அலெய்னா ரெப்லிட்சுடன், இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் நிறுவுநரான பசில் ராஜபக்ச இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

கொழும்பில் அமெரிக்கத் தூதுவரைச் சந்திக்க மகிந்த ராஜபக்ச மற்றும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோருடன் இணைந்து சென்றேன் என்றும் தூதுவருடன் பேச்சு நடத்தினோம் என்றும் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அனைத்துலக சமூகத்துடன் நெருக்கமாகப் பணியாற்ற வேண்டிய தேவை உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பல்வேறு நாடுகளின் தூதுவர்களைத் தொடர்ச்சியாகச் சந்தித்துப் பேசவுள்ளதாகவும், பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அமெரிக்க தூதுவருடனான சந்திப்பு எப்போது இடம்பெற்றது என்ற விவரத்தை பசில் ராஜபக்ச வெளியிடவில்லை. பன்னாட்டுத் தூதுவர்கள் அரசதரப்பினரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் சந்தித்துப் பேசுகின்ற போதும், எதிர்க் கட்சித் தலைவருடன் பேச்சு நடத்துவதில்லை என்று மகிந்த அணியினர் அண்மையில் குற்றஞ்சாட்டியிருந்தனர். (த)

# தீர்வுக்கான சந்தர்ப்பங்களை கூட்டமைப்பு தவறவிட்டது

## டக்ளஸ் எம்.பி. தெரிவிக்கிறார்

கொழும்பு, மார்ச் 15

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்ள கிடைத்த அத்தனை சந்தர்ப்பங்களையும் தமது சுயலாப நலன்களுக்காகத் தவறவிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் இன்று மோதலா? தீர்வா? என்று வெற்றுக்கோசம் போடுகின்றார்கள்.

மோதலுக்காகப் போராடவோ, தீர்வுக்காக உழைக்கவோ அவர்கள் தயாரில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளது. கொழும்பில் தமக்கு சொகுசு மாளிகை மற்றும் சொகுசு வாகனங்கள் அதற்கான பராமரிப்பு செலவுகள் என்ப்வற்றுக்காக அரசை வற்புறுத்தி அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கச் செய்த தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினர், தாமே ஆட்சிபீடமேற்றியதாகக் கூறும் இந்த ஆட்சியாளர்கள் ஊடாக இதுவரை தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணவில்லை என்று மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது. (த)

# நாளைய பேரணியில் அனைவரும் இணைக

## ஈரோஸ் அழைப்பு

வவுனியா, மார்ச் 15

நாளை சனிக்கிழமை நடத்தப்படவுள்ள கவனவீர்ப்புப் பேரணினுக்கு தமிழ் சமூகம் ஒன்றிணைந்த ஆதரவு வழங்க வேண்டும் என்று ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈரோஸ்) வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்த அமைப்பு அனுப்பியுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவதுப:

போர் முடிந்து பத்து வருடங்கள் கடக்கும் ஆண்டிலும் இதுவரை தமிழ் மக்களுக்கான தீர்வுக்கான முயற்சி இழுபறி நிலையில் தான் காணப்படுகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தொடர்ந்தும் அலைக்கழிக்கப்படுகின்றனர். தமது உறவுகளைத் தேடும் போராட்டத்தில் ஈடுபட்ட தாய்மார்களில் இதுவரை 19 பேர் இறந்துள்ளனர். நீண்ட காலம் சிறையில் இருக்கும் அரசியல் கைதிகள் இற்றைவரை விடுதலை செய்யப்படவில்லை.

இராணுவ ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட தமிழ் மக்களின் வாழ்விடங்கள் இதுவரை விடுவிக்கப்படவில்லை..

மீள்குடியேற்றங்கள் முழுமையாக செயற்படுத்தவில்லை. போரால் உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்டோருக்கு இதுவரை முறையான மருத்துவ வசதி செய்து கொடுக்கவில்லை. முன்னாள் போராளிகளின் தொழில் மற்றும் வாழ்வாதார திட்டங்கள் ஒழுங்குபடுத்தலில் அக்கறை செலுத்தவில்லை. தமிழ் மக்களின் தொன்மைமிகு வழிபாட்டு நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வழிபாடு செய்யத் தடை விதிக்கப்படுகின்றது. புதிது புதிதாகப் புத்தர் சிலைகள் முளைக்கின்றன. திட்டமிட்ட வகையில் தமிழர் பகுதிகளில் போதைப் பாவனை ஊக்குவிக்கப்படுகின்றது.

அரசின் இந்தப் போக்கைக் கண்டித்தும் இனப் பிரச்சினைக்கு விரைவாக தீர்வு காணுமாறு கோரியும் இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்குவதை கண்டித்தும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முன்றலில் இருந்து முற்றவெளியை நோக்கிய கண்டன ஆர்ப்பாட்ட கவனவீர்ப்பு பேரணியில் எமது உரிமையை உலக அரங்கில் ஓங்கி ஒலிக்க வைக்க அனைவரையும் அழைக்கின்றோம்- என்றுள்ளது. (எ-110)

see more news in newuthayan.com

# சிறிபாத கல்வியியற் கல்லூரிக்கு இந்திய வம்சாவளி மாணவர்கள்

## அரசிதழில் விடயம் உள்ளடக்கம்



கொழும்பு, மார்ச் 15

சிறிபாத கல்வியியற் கல்லூரியில், எதிர்வரும் காலங்களில் பெருந்தோட்டதுறை அல்லாத இந்திய வம்சாவளி மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் புதிய அரசிதழில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும், சிறப்புப் பகுதிகளுக்கான அபிவிருத்தி அமைச்சருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அந்தக் கல்வியியற் கல்லூரியில் கடந்த காலங்களில் ஏற்பட்ட முறுகல் நிலை தொடர்பான கூட்டம் அமைச்சர் இராதாகிருஷ்ணனின் தலைமையில் அவரது அமைச்சில் நேற்று நடைபெற்றது.

கல்வியியற் கல்லூரியின் ஆணையாளர் கே.எம்.எச். பண்டார, பீடாதிபதி ரமணி அபேநாயக்க, விரிவுரையாளர்களும் அதில் கலந்து கொண்டனர்.

கல்வியியற் கல்லூரியின் அபிவிருத்தி, கடந்த காலங்களில் ஏற்பட்ட சுமுகமற்ற சூழ்நிலை தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

இது பற்றிக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் இராதாகிருஸ்ணன், கல்லூரியில் ஏற்பட்டிருந்த சிக்கல் சுமுக நிலைக்கு வந்துள்ளது. மாணவர்களுக்கு உணவு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. நிர்வாக ரீதியாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக சுமுகமான தீர்வு எட்டப்பட்டது.

ஒழுக்காற்றுக் குழுவினரின் அறிக்கை கிடைத்ததும், குறிப்பிடப்பட்டுள்ள நபர்களை இடமாற்றம் செய்வதா அல்லது வேறு எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்வது என்று தீர்மா னிக்கப் பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த)

# போயிங் 737-8 மக்ஸ் வானூர்திகள் இங்கு பறப்பதில்லை

கொழும்பு, மார்ச் 15

இலங்கை வான்பரப்பில் போயிங் 7378 மக்ஸ் வானூர்திகள் தற்போது பறப்பதில்லை என்று சிவில் வானூர்திப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் நிமலசிறி தெரிவித்துள்ளார்.

எதியோப்பியாவில் போயிங் 7378 மக்ஸ் வானூர்தி ஒன்று 157 பேருடன் வீழ்ந்து நொருங்கியதை அடுத்து இந்த வகை வானூர்திகளின் தொழில்நுட்ப ரீதியான பாதுகாப்புக் குறித்துக் கேள்வி எழுந்துள்ளது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம், இதே ரக வானூர்தி இந்தோனேசியாவில் விபத்துக்குள்ளாகியிருந்தது.

இதனால் போயிங் 7378 மக்ஸ் வானூர்திகளின் தொழில்நுட்பத் தகைமை குறித்துச் சந்தேகங்கள் எழுந்துள்ளன. இதுதவிர, அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் இந்த வானூர்திகளைத் தடை செய்துள்ளார்.

எதியோப்பியாவில் விபத்துக்குள்ளானதை அடுத்து. போயிங் 7378 மக்ஸ் வானூர்திகளின் பாதுகாப்புத் தொடர்பான விவகாரம் குறித்து இலங்கை அவதானித்து வருகிறது என்றும் அதன் பணிப்பாளர் நாயகம் நிமலசிறி தெரிவித்துள்ளார்.

இப்போது இந்தவகை வானூர்திகள் பறப்பதில்லை. இலங்கையில் தரையிறங்குவதும் இல்லை. கட்டுநாயக்க வானூர்தி நிலையத்துக்கு சேவைகளை நடத்தும் இந்த வானூர்திகளைப்பயன்படுத்துகின்ற ஆறுநிறுவனங்கள், இந்த வகை வானூர்திகளைச் சேவையிலிருந்து நிறுத்தி வைத்திருக்கின்றன - என்று தெரிவித்தார். (த)

# தெற்கு மக்களின் நிலங்களை வடக்கு மக்கள் கேட்கவில்லை

## சபையில் சாந்தி எம்.பி. தெவிவிப்பு

கொழும்பு, மார்ச் 15

வடக்கு - கிழக்கில் உள்ள மக்கள் தென்பகுதி மக்களின் இடங்களை கேட்கவில்லை, மாறாக தமது சொந்த நிலங்களையே கோருகின்றனர். அவற்றைப் பெற்றுக்கொடுக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வில் வாய்மொழி மூல கேள்விக்கான பதில் நேரத்தில் நேற்று அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கில் தொழிற்சாலைகள் இல்லாததால் தென்பகுதி மக்களே அதிக இலாபங்களை பெற்றுக்கொள்கின்றனர். வடக்கு - கிழக்கில் உள்ள மக்களும் பயனடையும் விதமாக அங்கு தொழிற்சாலைகளை நிறுவவேண்டும். இதன் மூலம் வேலையில்லாத பலரின் பிரச்சினைக்கு தீர்வு கிட்டும்.

போரால் பாதிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இன்றுவரைசீரமைக்கப்படாமல் இருக்கின்றன. அவை அனைத்தையும் மீளக் கட்டியெழுப்புதல் அவசியம். இதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். வரவு - செலவுத் திட்டத்தில் வடக்குக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியை சரியான முறையில் கையாண்டு, அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்" என்று கோரிக்கை விடுத்தார். (கு)

# சு.க., முன்னணி இணைவு: முதற்கட்டப் பேச்சு வெற்றி

## தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 15

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் இணைந்து புதிய அரசியல் கூட்டணி அமைப்பது தொடர்பான முதல் சுற்று பேச்சு வெற்றிகரமாக முடிவடைந்தது என்று சு.கவின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர நேற்றுத் தெரிவித்தார்.

இருதரப்புக்குமிடையிலான அடுத்த சுற்றுப் பேச்சு எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற அரசதலைவர் தேர்தலுக்கு பின்னர் சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இரண்டாக உடைந்துள்ளது.

**கூட்டணி சிந்தனை உதயம்**

குறித்த கூட்டணியிலிருந்து வெளியேறிப் புதிய கட்சியை சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி ஆரம்பித்ததுடன், கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துக் களமிறங்கி வரலாற்று வெற்றியையும் பதிவுசெய்தது.

தற்போது மகிந்தவும், மைத்திரியும் இணைந்துள்ளதால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை ( வெற்றிலைச் சின்னம்) மீண்டும் பலப்படுத்துவதற்குரிய முயற்சியில் சு.க. இறங்கியது. இதற்கு மைத்திரி தரப்பு பச்சைக்கொடிகாட்ட மகிந்த தரப்பு மறுத்துள்ளது.

தாமரை மொட்டிடம் சரணடைவதற்குச் சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் சிலர் போர்க்கொடி தூக்கினர். இதையடுத்தே புதிய கூட்டணி அமைத்து பொதுச் சின்னத்தின்கீழ் தேர்தலில் போட்டியிடுவதற்குரிய முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரு தரப்புகளிலிருந்தும் பேச்சுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

**நேற்றைய சந்திப்பு**

இரண்டுகுழுக்களுக்குமிடையிலான முதற்கட்ட உத்தியோகப்பூர்வ சந்திப்பு , கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முற்பகல் சுமார் ஒரு மணித்தியாலம் நடைபெற்றது. புதிய கூட்டணி அமைப்பதற்குத் தடையாக உள்ள காரணங்கள் சம்பந்தமாக விரிவாக ஆராயப்பட்டுள்ளன என்று அறியமுடிகின்றது.

புதிய கூட்டணி வெற்றிகரமாக மலரவேண்டுமெனில் இரு தரப்பும், புரிந்து ணர்வுடனும், விட்டுக் கொடுப்புடனும் செயற்பட வேண்டும் என்று இணக்கம் காணப்பட்டுள்ளது.

சுதந்திரக்கட்சியின் சார்பில் அதன் பொதுச்செயலர் தயாசிறி ஜயசேகர, உப தலைவர் திலங்க சுமதிபால, முன்னாள் பொதுச்செயலர் ரோஹன லக்ஷ்மன் பியதாச ஆகியோரும்,பொதுமக்கள் முன்னணி சார்பில் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிட்ட தயாசிறி ஜயசேகர, பேச்சு சிறந்த ஆரம்பமாக அமைந்தது. வெற்றியை நோக்கிப் பயணிக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அடுத்த சுற்று சந்திப்பு 21 ஆம் திகதி நடைபெறும் என்றார். இதன்போது கருத்துத் தெரிவித்த டலஸ், கூட்டணிக் கான பெயர், சின்னம், தலைவர் யார், நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் யார் போன்ற விடயங்கள் எல்லாம் இறுதிக்கட்டத்தில் முன்னெடுக்கப்படவேண்டியவை. முதலில் கூட்டணி உருவாவதற்குரிய சூழலை உருவாக்க வேண்டும். அது குறித்தே கலந்துரையாடப் பட்டது - என்றார். (கு)

# கழிவுநீர் என்றுகூறிவிட்டு மலக்கழிவை கல்லுண்டாயில்

## கொட்டியவர் மடக்கப்பட்டார்

வலி.தென்மேற்கு, மார்ச் 15

கழிவு நீர் என்ற போர்வையில் மலக்கழிவை கல்லுண்டாய் வெளியில், திண்மக் கழிவுகள் கொட்டப்படும் வளாகத்தில் கொட்டிய சாரதி வாகனத்துடன் பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் மாட்டிக்கொண்டார்.

அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ள பொலிஸார் வாகனத்தைக் கைப்பற்றி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

கல்லுண்டாய் வெளியில் திண்மக்கழிவுகள் கொட்டுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள வளாகத்தில் மலக்கழிவுகள் கொட்டப்பட்டு வந்தன. இதனால் வீதியால் செல்லும் மக்கள் மட்டுமல்ல அயல் கிராமங்களில் வசிக்கும் மக்களும் பாதிக்கப்பட்டு வந்தனர். சம்பந்தப்பட்டவர்களின் கவனத்துக்கு இது தெரியப்படுத்தப்பட்டது.

மலக் கழிவுகள் கொட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டு கழிவு நீர் ஊற்றுவதற்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டது. அத்துடன் வளாகத்தைச் சுற்றிப் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டு இரவு பகலாக காவலாளிகளும் கடமையில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

சில தினங்களுக்கு முன் கழிவு நீர் என்ற போர்வையில் மலக்கழிவை அதற்குரிய வாகனத்தில் ஏற்றி வந்த சாரதி கழிவு நீர் ஊற்றுமிடத்தில் கொட்டி விட்டுத் தப்பிக்க முயன்றார். இது பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டமையை அடுத்து உடனடி நடவடிக்கையில் ஈடுபட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மானிப்பாய் பொலிஸில் முறையிட்டார். வாகனம் கைப்பற்றப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (கு-115)

# வருடாந்தம் 85 நாள்களே ஆசிரியர் பணிபுரிகின்றனர்

## தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 15

வருடாந்தம் தவணை விடுமுறைகள், பரீட்சைக் காலங்களுக்கான விடுமுறைகள், மற்றுமுள்ள பொது விடுமுறைகள், ஆசிரியர் பணிக்கான நேரம் என்பனவற்றைக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் வருடத்தில் சுமார் 85 நாள்களே ஆசிரியர்கள் பணிபுரிய நேரிடுகிறது. எனவே, போராட்டங்கள் ஆக்கபூர்வமானதாகவும் நியாயப்படுத்தக் கூடியதாகவும் அமைய வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்கால சந்ததியினரின் வழிகாட்டிகளான ஆசிரியர் சமூகத்தின் அத்தனை நடவடிக்கைகளும் போராட்டங்களும் ஆக்கபூர்வமானதாகவும், அடுத்தவர்களால் நியாயப்படுத்தக் கூடியதாகவும் அமைய வேண்டும் என்று கிழக்கு மாகாண தமிழ் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பொதுச் செயலர் சி. ஜெயராசா நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டின் எதிர்கால சந்ததியினரான பல இலட்சம் மாணவர்களுக்கு முன்பாகவுள்ள ஆசிரியர் சமூகத்தின் அத்தனை நடவடிக்கைகளும், முன்னுதாரணமாகவும், வழிகாட்டலாகவும் அமைய வேண்டும்.

ஆசிரியர் சமூகம் தனக்கான உரிமைகளைக் கோரிப் போராடும் பொழுதும் அந்தப் போராட்டங்கள் ஆக்கபூர்வமானதாகவும், கண்ணியமானதாகவும் அடுத்தவரால் மறுக்க முடியாமல் நியாயப்படுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

சமீபத்திய மூன்று அம்சக் கோரிக்கைப் போராட்டமும் அந்தக் கண்ணோட்டத் தில் நோக்கப்படவேண்டியதொன்றே.

ஏற்கெனவே தொழிற்சங்கங்கள் முன்னெடுத்த போராட்டங்கள், கோரிக்கைகளின் பயனாக ஆசிரியர்களுக்கான புறம்பான சம்பள உயர்வு பற்றிய அறிக்கை அரசதலைவரினதும் தலைமை அமைச்சரினதும் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அவை பரிசீலனையில் உள்ளது.

இதைவிட வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான பொதுவான சம்பள உயர்விலும் ஆசிரியர்கள் உரித்துடையவர்களாக உள்ளார்கள். இந்த விடயத்தில் அவசரப்பட்டு கறுப்புப் பட்டியணிய வேண்டிய நியாயப்படுத்தல் தேவையற்றதொன்று.

ஏனைய அரச ஊழியர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது ஆசிரியர்கள் வேலைப்பளுவால் திண்டாடு கின்றார்கள் என்பதை எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாது. இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு கருமமாற்ற வேண்டும். அதிபர் ஆசியர்களுக்குப் பாதுகாப்பில்லை என்று கூறுவது புரியாத புதிராகவே உள்ளது.

எதிர்கால சந்ததியினரின் முன்னுதாரணமான ஆசிரியர் சமூகம் அரசியல் மற்றும் இன்ன பிற நலன்களுக்காகப் பிழையாக வழிநடத்தவும் தவறாக வழிநடத்தப்படவும் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது என்றுள்ளது. (கு)

# பொரியலுக்குள் போதைப் பொருள்: கடத்தியவர் கைது

கொழும்பு, மார்ச் 15

மீன் பொரியலுக்குள் மறைத்து வைத்துக்கடத்தப்பட்ட போதைப் பொருள் மீட்கப்பட்டது. அதைக் கடத்தினாரென்று குடும்பப் பெண் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு சிறைச்சாலையில் நேற்று இடம் பெற்றது.

210 மில்லிக்கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளை வைத்துக் கொடுக்க முயன்ற மனைவியை சிறைச்சாலை அலுவலர் நேற்றுக் கைதுசெய்து மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அக்கரைப்பற்று ஆலம்குளம் பகுதியைச் சேர்ந்தவர் குற்றச்சாட்டு ஒன்றில் கைதாகி விளக்கமறியலில் உள்ளவருக்கே அவரது போதைப் பொருள் கடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (கு)

# கொட்டில்களுடனான பாடசாலைக்கு காரணம் மாகாண அரசியல்வாதிகள்

## கல்வி அமைச்சர் சபையில் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 15

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தில், குறைந்த வசதிகள் கொண்ட பாடசாலைகள் தேர்ந்தெடுக்க முடியாமைக்கு மாகாண அரசியல்வாதிகளே பொறுப்புக் கூற வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஒரு சில பாடசாலைகளில் மாணவர்கள் தென்னை ஓலைகளால் ஆன குறைந்த வசதிகளைக் கொண்ட இடங்களில் கல்வி பயிலும் கவலையான செய்தி தனக்கு கிடைக்கப்பெற்றது. இவ்வாறான நிலைமைக்கு மாகாண சபை அரசியல்வாதிகளே பொறுப்புக் கூற வேண்டும்.

அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத் திட்டத்தின் ஊடாகக் குறைந்த வசதிகளைக் கொண்ட பாடசாலைகளை வசதிகள் கொண்டதாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த வேலைத் திட்டத்துக்குப் பாடசாலைகளைத் தேர்தெடுக்கும் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்வளவு விதிகளின் அடிப்படையில் பாடசாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

எனினும் ஒரு சில பிரதேச அரசியல்வாதிகளின் தலையீட்டால் தேர்வளவு விதிமுறை மீறப்பட்டமையால் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இது கவலைக்குரிய நிலை. இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக மாகாணக் கல்விப் பணிப்பாளர்களிடம் அறிக்கை கோரியுள்ளேன். இந்த நிலைமை தொடர்பில் எதிர்வரும் காலங்களில் அதிரடி நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (கு)

# நியூஸி. சென்று கைதானோரில் இராணுவத்தினரும் அடக்கம்

கொழும்பு, மார்ச் 15

தென் இலங்கையிலிருந்து சில தினங்களுக்கு முன்பு நியூசிலாந்து நோக்கிச் சென்ற படகில் கைது செய்யப்பட்ட 30 பேரில், இராணுவத்தினர், வானூர்திப் படையினர், பிரதேச சபை உறுப்பினர் ஒருவரும் உள்ளடங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தைச் சேர்ந்த 3 பேரும் வானூர்திப் படையைச் சேர்ந்த 2 பேரும் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரும் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் புத்தளம், கண்டி, இரத்தினபுரி, கம்பஹா உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

# தலைமை அமைச்சர் ரணிலால்தான் வடக்கின் அபிவிருத்தியில் பாதிப்பு

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 15

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் கடந்தகால செயற்பாடுகள் காரணமாகவே, வடக்கின் அபிவிருத்தியில் தடைப்பாடுகள் ஏற்பட்டன என்று குற்றஞ்சாட்டியது ஜே.வி.பி.

நிதி ஒதுக்கீடு தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தற்போது, வடக்கு அபிவிருத்தி அமைச்சைப் பொறுப்பேற்றுள்ளார். இவர் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்ற கடந்த மூன்றரை வருடங்களில், வடக்கின் அபிவிருத்தி குறித்து அக்கறை கொள்ளவில்லை. போரின் பின்னர் வடக்கில் பெரிய பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன. அதனைத் தீர்க்கக்கூடிய சிறந்த நபரை அவர் அமைச்சராக நியமிக்கவில்லை.



அன்று பாதிக்கப்பட்ட மக்களுக்காக இந்திய அரசால் 65 ஆயிரம் வீட்டுத்திட்டம் கொண்டுவரப்பட்டது.

ஆனால் ஊழல், மோசடி என்பவற்றால் அது கைகூடாமல் போனது. அங்கு தத்தமது நிலத்துக்காக மக்கள் சுமார் 700 நாள்களைக் கடந்து இன்றும் போராடுகின்றனர்.

கேப்பாப்பிலவு மக்களின் பிரச்சினை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவை வரை சென்றுள்ளது. இன்று நாடளாவிய ரீதியில் அரசால் பல போலியான வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றன. இதனால் இந்த நாடும், நாட்டு மக்களும் ஏமாற்றப்படுகின்றனர்.

இந்த நிலையில், கேப்பாப்பிலவு மக்களின் பிரச்சினைகளை தலைமை அமைச்சர் கண்டும் காணாமலும் இருக்கிறாரா என்று கேட்கிறேன்.

அல்லது அவர் அந்த மக்களைப் புறக்கணிக்கிறாரா? பலமுறை வடக்கிற்குச் சென்ற தலைமை அமைச்சர் அந்த மக்களைச் சந்திக்காதது ஏன்? அப்படி முடியவில்லை என்றால் எதிர்வரும் பயணத்தின்போது அவர்களைச் சந்தித்து கலந்துரையாடுங்கள். இவ்வாறு போராடும் மக்கள் அரசின் நிலத்தைக் கேட்கவில்லை.

போரின் பின்னர் படையினர் கைப்பற்றிய அவர்களின் நிலங்களையே கேட்கின்றனர். தேவையற்ற இடங்களில் காணப்படும் இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும் - என்றார். (ம)

# ஒட்டுசுட்டான் பிரதேச செயலராக அகிலன் கடமையைப் பொறுப்பேற்பு

முல்லைத்தீவு, மார்ச் 15

ஒட்டுசுட்டான் பிரதேச செயலராக யாழ்ப்பாண மாவட்டத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளராகப் பணியாற்றிய ரி.அகிலன் நேற்று முதல் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் செயலர் பதவி நீண்டகாலமாக வெற்றிடமாகக் காணப்பட்ட நிலையில் உதவிப் பிரதேச செயலருடனேயே செயற்பட்டுவந்ததோடு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பதில் கடமையாற்றிவந்தார்.

இந்த நிலையில் நீண்டகாலமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உதவித்தேர்தல் ஆணையாளராகப் பணியாற்றிய ரி.அகிலன் ஒட்டுசுட்டான் பிரதேச செயலராகச் சென்றுள்ளர். யாழ்ப்பாண மாவட்டத்தின் உதவித்தேர்தகள் ஆணையாளராக இதுவரை காலமும் கிளிநொச்சி மாவட்டத்தில் உதவித் தேர்தல்கள் ஆணையாளராகப் பணியாற்றிய அமல்ராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேநேரம் கிளிநொச்சி மாவட்டத்துக்கான உதவித் தேர்தல்கள் ஆணையாளராக வவுனியா மாவட்டத்தின் உதவித் தேர்தகள் ஆணையாளராகப் பணியாற்றிய அரவிந்தன் நியமிக்கப்பட்டார். (ம-105)



# மீள்குடியமர்த்தப்பட்ட காணியில் மீட்கப்பட்டன வெடிபொருள்கள்!

## மக்கள் அச்சம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

மயிலிட்டியில் மீள்குடியமர்த்தப்பட்ட பகுதியில் உடைந்த நிலையில் இருந்த வீடொன்றின் அத்திபாரத்துக்குள் வெடிபொருள்கள் மற்றும் துப்பாக்கி ரவைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. வெடிபொருள்கள் அற்ற பிரதேசம் என்று அறிவிக்கப்பட்டு மக்கள் மீள் குடியமர்ந்த பகுதியில் இவ்வாறு வெடிபொருள்கள் காணப்படுவது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த புதன்கிழமை சுவர் கட்டுவதற்காக ஏற்கனவே இருந்த அத்திபாரப் பகுதியைத் தோண்டும்போதே இவ்வாறு வெடிபொருள்கள் இருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. இது குறித்து காணி உரிமையாளரால் அந்தப்பகுதி கிராம அலுவலருக்குத் தகவல் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. கிராம அலுவலரினூடாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் சம்பவ இடத்துக்குச் சென்ற சிறப்பு அதிரடிப் படையினரால் அந்த வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. (ம-21,26)

# வாக்குகளைப் பெறுவதற்காக இனவாதம் பரப்ப வேண்டாம்

## மகிந்த தரப்பினரைச் சாடுகின்றார் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி

கொழும்பு, மார்ச் 15

தமிழ் மக்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வை எதிர்பார்த்து காத்திருக்கின்ற நிலையில், வாக்குகளுக்காக இனவாதத்தைக் தூண்டி மக்களை ஏமாற்ற வேண்டாம் என்று தெரிவித்தார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை பெற்றுத்தர அரசு அக்கறை காட்டினாலும், அதனை நடைமுறைப்படுத்தும் விடயங்களில் அரசு இறங்கவேண்டும். குறிப்பாக அரசியல் தீர்வை எதிர்க்கும் செயற்பாடுகளை எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட தரப்பினர் முன்னெடுத்து வருகின்றனர். குறித்த எதிர்ப்புகளைத் தாண்டி இனப்பிரச்சினையை தீர்க்க வழி ஏற்படுத்தப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் போராட்டங்களை மேற்கொள்ளும் நிலையை எதிர்கொண்டுள்ளனர்.



இனப்பிரச்சினையைத் தீர்க்க பெரிய போராட்டங்களை நடத்த தயங்கமாட்டோம். ஆதலால் இந்த விடயத்தில் தலைமை அமைச்சர் கவனம்செலுத்த வேண்டும்.

புலம்பெயர்ந்து இந்தியாவில் வாழும் இலங்கையர்களை, தாய் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான செயற்பாடுகளை, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ள வேண்டும். அத்தோடு, அவர்கள் தாம் விரும்புகின்ற பொருள்களைக் கொண்டுவர வாய்ப்பு வழங்க வேண்டும் - என்றார். (ம)

# மாணவர்களை தாக்கினாரென ஆசிரியருக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு, மார்ச் 15

மாணவர்களைத் தாக்கிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஆசிரியரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மட்டக்களப்பு காத்தான்குடி பூநொச்சிமுனை பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் ஐந்தாம் தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களை குறித்த ஆசிரியர் தாக்கினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தநிலையில், கைதுசெய்யப்பட்ட ஆசிரியரை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம)

# கடதாசிப் பெட்டிக்குள் வெடிபொருள் மீட்பு


யாழ்ப்பாணம், மார்ச் 15

வடமராட்சி கிழக்கு பனிக்கையடி பகுதியில் கடதாசிப் பெட்டிக்குள் இருந்து வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. ஆழியவளை அபாய வெளியேற்றப் பாதை பனிக்கையடியில் நேற்று நண்பகல் குறித்த வெடிபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த வீதி வழியாக சென்றவர்கள் அநாமதேயமாக காணப்பட்ட கடதாசிப் பெட்டி ஒன்றை அருகே சென்று பார்வையிட்டபோது அதற்குள் துருப்பிடித்த பழமையான இரண்டு மிதிவெடிகள் மற்றும் கைக்குண்டு என்பன காணப்பட்டன. இதையடுத்து பளைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. (ம-37)







எத்தியோப்பியாவில் கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற வானூர்தி விபத்தில் 157 பேர் உயிரிழந்தனர். அவர்களுக்கு வானூர்தி விபத்துக்குள்ளான இடத்திலும் எத்தியோப்பிய எயார்லைன்ஸ் நிறுவனத்திலும் நேற்றுமுன்தினம் அஞ்சலி செலுத்தப்பட்டது. (ம)





## மன்னார்....

40ஆவது கூட்டத்தொடரில் 'புதிய உலக ஒழுங்கின் கீழ் இனவழிப்புகள்' என்ற தொனிப்பொருளில் நேற்றுமுன்தினம் கருத்தரங்கு இடம்பெற்றது. இந்தக் கருத்தரங்கில் மன்னார் மனிதப் புதைகுழியை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்த இந்திய தடயவியல் நிபுணர் முனைவர் சேவியர் செல்வா சுரேஷ் உரையாற்றினார். இதன்போது, மன்னார் மனிதப் புதைகுழி குறித்த கார்பன் ஆய்வறிக்கை பன்னாட்டு விதிகளுக்கு முரணானது - என்று அவர் தெரிவித்தார்.

மன்னார் மனிதப் புதைகுழி தொடர்பான கார்பன் ஆய்வறிக்கை அண்மையில் வெளிவந்து. அந்த ஆய்வறிக்கையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட என்புகள் 15ஆம் நூற்றாண்டில் இருந்து 18ஆம் நூற்றாண்டுக்கு உட்பட்டவை என்று தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## காணாமல்...

ரம் குறித்து நீண்ட அறிக்கையை முன்வைத்துள்ள அமெரிக்கா இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

போரில் கொல்லப்பட்ட படையினரின் மனைவிமார் அரசால் வழங்கப்படும் நிதி உதவியை பெறமுயலும்வேளை பாலியல் துர்நடத்தைகளை எதிர்கொள்கின்றனர். அரசோ அல்லது அதன் முகவர்களோ சட்டவிரோத படுகொலைகளில் ஈடுபட்டனர் என தகவல்கள் கிடைத்துள்ளன. போரின் போதும் அதன் பின்னரும் காணாமல்போதல் என்பது இன்னமும் தீர்க்கப்படாத பிரச்சினையாக காணப்படுகின்றது. ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட காணாமல்போகச் செய்யப்பட்டமை தொடர்பில் வருட இறுதிவரை அதிகாரிகள் எவருக்கு எதிராகவும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படவில்லை. சித்திரவதை உட்பட ஈவிரக்கமற்ற மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் மற்றும் தண்டனைகளை இலங்கையின் அரசமைப்பும் சட்டமும் தடை செய்துள்ள போதிலும் அதிகாரிகள் அதனை தொடர்ந்து பின்பற்றுக்கின்றனர்.

குற்றங்கள் தொடர்பான வாக்குமூலங்களை பெறுவதற்காக பொலிஸார் பொதுமக்களை சித்திரவதை செய்வதுடன் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்குகின்றனர். 2017ஆம் ஆண்டு பெப்ரவரியில் அரசு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்வதை இடைநிறுத்தியுள்ளதாக அறிவித்த போதிலும் கடந்த வருடம் இலங்கை அரசு ஆகக்குறைந்தது நான்கு பேரையாவது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளது. பொலிஸார் சித்திரவதைகளை வழமையான நடைமுறையாக நாடுமுழுவதும் பின்பற்றுகின்றனர் என தெரிவித்துள்ள இலங்கையின் மனித உரிமை ஆணையகம் கடந்த ஜூன் மாதம் வரை உடல்உள சித்திரவதைகள் குறித்து 193 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ளது. மனித உரிமை அமைப்புகள் மேற்கொண்ட ஆய்வின் போது இலங்கை முழுவதும் சித்திரவதைகள் பரவலாக பின்பற்றப்படுவது தெரியவந்துள்ளது. கடந்த காலங்களை போன்று போர் முடிவடைந்த பின்னரும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படும் நபர்கள் தாங்கள் சித்திரவதை செய்யப்பட்டோம் என்று பலவந்தமாக வாக்குமூலம் தங்களிடமிருந்து பெறப்பட்டதாகவும், சட்டத்தரணிகளையும் குடும்பத்தவர்களையும் பார்வையிடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர். விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் பாலியல் துன்புறுத்தல்கள் உட்பட சித்திரவதைகள், மோசமாக நடத்தப்படுதல் போன்றவற்றை மறுவாழ்வு முகாம்களிலும் விடுதலையின் பின்னரும் தாங்கள் அனுபவித்தோம் என்று குறிப்பிட்டுள்ளனர். பொதுமக்களுக்கு எதிராக படையினரும் பொலிஸாரும் அளவுக்கதிகமான வன்முறைகளை பயன்படுத்துகின்றமை தெரியவந்துள்ளது.

காணாமல்போன தங்கள் கணவன்மார்கள் குறித்து தகவல்களை கோரிய மனைவிமார் அரச அதிகாரிகளாலும் மற்றும் பாதுகாப்பு துறை சார்ந்த அதிகாரிகளாலும் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தப்பட்டனர் எனத் தகவல் கிடைத்துள்ளது. போரில் கொல்லப்பட்ட படையினரின் மனைவிமார் அரசால் வழங்கப்படும் நிதிஉதவியை பெறமுயலும்வேளை பாலியல் துர்நடத்தைகளை எதிர்கொள்கின்றனர் - என்றுள்ளது. (ம)

## 30/1...

40ஆவது அமர்வில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட வுள்ள தீர்மானமானது, இலங்கையில் கலப்பு நீதிமன்றத்தை அமைக்கவும் ஐ.நா. கிளை அலுவலகத்தை நிறுவவும் வழிவகுப்பதாய் அமையும். தாருஸ்மன் அறிக்கை மற்றும் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தின் உள்ளடக்கங்கள் பொய்யான விடயங்கள். இவற்றிலிருந்து இலங்கை விலகிச் செல்ல வேண்டும்.

அவ்வாறு இல்லாவிட்டால் மனித உரிமைகளின் மறைவில் இலங்கை நீதிமன்றம் கொச்சைப்படுத்தப்படும். கலப்பு நீதிமன்றம் அமைக்க வழிவகுக்கப்படும் -என்றார்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பாக சுயாதீன விசாரணை நடத்த பன்னாட்டுத் தலையீட்டுடனான கலப்பு நீதிமன்றத்தை இலங்கையில் அமைக்க வேண்டுமென ஐ.நா. பிரேரணையில் பிரேரிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட தரப்பினர் இதனை நடைமுறைப்படுத்த வேண்டுமென தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர். இவ்வாறான நிலையில் குறித்த பிரேரணையை வலுவிழக்கச் செய்யுமாறு மகிந்த வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஒக்.26...

பண்டாரநாயக்க குமாரணதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'மைத்திரி மகிந்த கூட்டணியின் அரசியல் சூழ்ச்சியால் இலங்கை பெரும் விளைவுகளை எதிர்காலத்தில் சந்திக்க வேண்டிவரும் என நான் ஏற்கனவே எச்சரித்தேன். அதன் ஒரு பிரதிபலிப்பே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் காட்டமான அறிக்கையாகும். இலங்கையில் அரசியல் சூழ்ச்சியை முடிவுக்கொண்டுவர அயராது பாடுபட்ட வெளிநாடுகள் இன்று ஜெனிவாவில் இலங்கையைத் தங்கள் பிடிக்குள் வைத்துள்ளன. நாட்டின் அரச தலைவரும் அரசும் ஐ.நாவுக்கும் பன்னாட்டுச் சமூகத்துக்கும் வழங்கிய பல வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. அந்த வாக்குறுதிகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. அதுதான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிய இலங்கைக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐ.நா. தீர்மானத்தை வெறும் போர்க்குற்ற தீர்மானம் என்று அரச தலைவர் மைத்திரிபால நினைக்கின்றார் போல் இருக்கின்றது. முதலில் அதில் உள்ள நாட்டின் எதிர்காலம் நலன் சார்ந்த பரிந்துரைகளை அரச தலைவர் பொறுமையுடன் இருந்து வாசிக்க வேண்டும். அதனை உடன் செயற்படுத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதேவேளை, இலங்கை தொடர்பில் ஐ.நாவில் நிறைவேற்றப்படவுள்ள புதிய தீர்மானத்தின் பரிந்துரைகளை உடன் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் ஆட்சியிலுள்ள அனைவரும் எடுக்கவேண்டும்' என்றார். -(ம-22)

## யாழ்....

னையை எதிர்கொள்ளும் 60 ஆயிரம் பேர் வரையிலான மக்கள் நிலக்கீழ் நீரின் மூலமாக தமது நாளாந்தத் தேவைகளை நிறைவேற்றி வருகிறார்கள். இந்த நிலக்கீழ் நீர் எதிர்வரும் 10 முதல் 20 வருட காலத்துக்கு மாத்திரமே போதுமானதாக இருக்குமென ஆய்வில் தெரிய வந்துள்ளதாக அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி தெரிவித்தார்.

எனவே, எந்தவித பயன்பாடும் இன்றி கடலில் கலக்கும் தண்ணீரை, கீழ் பாளியாறு நீர்த்தேக்கத்தில் சேமித்து வைக்கமுடியும் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இதன் மூலம் வவுனிக்குளம், கொள்ளவிளான்குளம், அடம்பன்குளம், மல்லாவிகுளம் போன்றவை சார்ந்த பிரதேசங்களும் அனுகூலம் பெறும். இந்தத் திட்டத்திற்கான செலவீனம் 350 கோடி ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (ம-105)

## ஐ.நா...

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

'எமது நாட்டின் இறைமை, தன்னாதிக்கம் என்பவற்றை பாதுகாத்துக்கொள்ள நாம் தொடர்ச்சியாகச் செயற்பட்டோம். எமது பிரச்சினையை நாமே தீர்த்துக்கொள்ளவும், எமது இறைமைக்கு ஏற்ப மக்களின் மனித உரிமையைப் பாதுகாக்கவும் பொறுப்புடன் செயற்பட்டோம். கடந்த காலத்தில் இலங்கைக்கு அவப்பெயர் ஏற்பட்டது. அந்த நிலையை மாற்றியமைத்தோம். மிலேனியம் கோப்பரேசன் போன்ற நிறுவனங்களுடன் இணைந்து பொருளாதாரத்தை முன்னேற்றப்பாதைக்கு கொண்டுசெல்கின்றோம்.

எமது நாட்டுச் சிப்பாய்கள், பன்னாட்டுப் படைகளுடன் இணைந்து பணியாற்றுகின்றனர். கூட்டுப்பயிற்சிகளை மேற்கொள்ளுகின்றனர். எதிர்வரும் 20ஆம் திகதி இலங்கை விடயம் தொடர்பாக ஐ.நா.வில் விவாதம் இடம்பெறவுள்ளது. ஐ.நா. ஆணையாளர் கூறும் சகல விடயங்களையும் நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இராணுவத்தின் வசமிருந்த காணிகள் விடுவிக்கப்படவில்லையென ஐ.நா. ஆணையாளர் கூறியுள்ளார். அதனை ஏற்றுக்கொள்ள மாட்டோம். பொறுப்புக்கூறல் தொடர்பான செயற்பாடுகளுக்கு கடந்த 2017ஆம் ஆண்டு இரண்டு வருட கால அவகாசம் கோரினோம். அந்தக் காலப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விடயங்களை நாம் காட்டியுள்ளோம். அவ்வாறே இம்முறையும் கால அவகாசத்தைக் கோரியுள்ளோம்' என்றார்.

இலங்கை சார்பான விளக்கத்தை ஐ.நா. சபைக்கு வழங்குவதற்காகச் செல்லவுள்ள குழுவுக்கு அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன தலைமை தாங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பல்கலையின்....

கிய ஆரோக்கியம்' என்ற தொனிப் பொருளில் இந்தக் கண்காட்சி இடம்பெறவுள்ளது. மருத்துவத் துறையின் நவீன வளர்ச்சிகள், முறையான உணவுப் பழக்க வழக்கங்கள், தொற்றா நோய்களும் விழிப்புர்ணவும், முக்கிய நோய்கள் பற்றிய விளக்கம், வடக்கு மாகாண மக்களுக்கு இலங்கையில் கிடைக்கக் கூடிய இலவச சுகாதார சேவைகள், பாடசாலை மாணவர்களின் சுகாதார விஞ்ஞானம் சார்ந்த அறிவுகள், இளையோர்களுக்கு சுகாதாரத் துறை சார்ந்த தொழில் வாய்ப்புகளுக்கான வழிகாட்டல்கள், இலவச மருத்துவ பரிசோதனைகள் போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக இந்த கண்காட்சி அமையவுள்ளது.

(ம-7)



## ஏமனில் வான் தாக்குதல் குழந்தைகள் உட்பட 20 சாவு

சனா,மார்ச்.15
ஏமனில் கடந்த இரண்டு நாள்களில் நடந்த வான்வழித் தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் என 20க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருப்பதாக ஐ.நா. தெரிவித்தது. ஏமனில் நடைபெறும் மோதலில் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுகிறார்கள். இது தவிர்க்கப்பட வேண்டும். ஏமனின் ஹஜ்ஜா நகரம் மிகவும் பாதிக்கப்பட்ட நகராக உள்ளது. அங்கு ஆயிரக்கணக்கான மக்கள் பசியால் தவிக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான அடிப்படை உதவிகள் கிடைக்காமல் உள்ளன என்று ஐ.நா. தெரிவித்துள்ளது.

**பின்னணி**
தென்மேற்கு ஆசிய நாடான ஏமனில் சன்னி பிரிவைச் சேர்ந்த அதிபர் மன்சூர் ஹைதிக்கும் ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்திப் போராளிகளுக்கும் இடையே 2015 ஆம் ஆண்டிலிருந்து உள்நாட்டுப் போர் நடக்கிறது. இதில் அதிபர் மன்சூர் ஹைதிக்கு ஆதரவாகச் சவூதி செயற்படுகிறது. ஹவுத்திப் போராளிகளுக்கு ஈரான் ஆதரவு அளிக்கிறது. ஏமன் அரசுடன் இணைந்து சவூதி நடத்தும் மனிதாபிமானமற்ற தாக்குதலை ஐக்கிய நாடுகள் சபை முன்னரே கண்டித்தது. இந்தப் போரில் இதுவரை 11ஆயிரத்துக்கு அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 5ஆயிரம் பேர் குழந்தைகள்.

## சோனியாவின் உதவியாளர் பா.ஜ.காவுக்கு பல்டியடிப்பு

புதுடெல்லி,மார்ச் 15
காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தியின் முக்கிய உதவியாளராக இருப்பவரும், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவருமான டாம் வடக்கன் பா.ஜ.காவுடன் நேற்று இணைந்தார். இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் ஒரு மாதத்துக்கும் குறைவாக இருக்கும் நிலையில், காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர் ஒருவர் பா.ஜ.காவுடன் இணைந்தது அந்தக் கட்சிக்குப் பெரும் பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது. காங்கிரஸ் கட்சியில் 20 ஆண்டுகளாக பணியாற்றி வந்த டாம் வடக்கன். சோனியா காந்தி தலைமையில் காங்கிரஸ் இருக்கும் போது, தனியாக ஊடகப் பிரிவை உருவாக்கியதில் முக்கிய பங்காற்றியவர்.
காங்கிரஸ் கட்சியில் இருந்து வடக்கன் விலகியிருப்பது, காங்கிரஸ் கட்சியைப் பலவீனமடையச் செய்யும் என்று கூறப்படுகிறது. 20 ஆண்டுகளாகக் காங்கிரஸ் கட்சியில் இருந்த டாம் வடக்கன் தேர்தல் அரசியலில் இதுவரை ஈடுபடாமல் இருந்து வந்தார். காங்கிரஸ் கட்சிக்கு ஊடகப் பிரிவை உருவாக்கிக் கொடுத்தபின், பா.ஜ. காவைக் காட்டிலும் காங்கிரஸ் கட்சியின் ஊடகப் பிரிவு வளர்ச்சிபெற்றபின் வடக்கன் ஓரங்கட்டப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

### 'போஜிங்' வானூர்தி விவகாரம்


# இந்தோனேசியா - எதியோப்பியா விபத்துகளில் ஒற்றுமைத் தன்மை

## 'போஜிங்' மீது தொடரப்பட்டது வழக்கு


வோஷிங்டன்,மார்ச்.15
சில நாள்களுக்கு முன்பு எதியோப்பியாவிலும், ஐந்து மாதங்களுக்கு முன்பு இந்தோனேசியாவிலும் விபத்துக்குள்ளாகிய 'போயிங் 737 மேக்ஸ்' ரக வானூர்தி விபத்துக்களில் ஒற்றுமைத் தன்மை இருப்பதால், உலகம் முழுவதிலும் இந்த வானூர்திகளை நிறுத்திவைப்பதாக அறிவித்துள்ளது அமெரிக்க நிறுவனமான போயிங். உலகம் முழுவதும் பறந்துகொண்டிருக்கும் இந்த ரகத்தைச் சேர்ந்த 371 வானூர்திகள் இதன் மூலம் நிறுத்திவைக்கப்படும்.



எதியோப்பிய விபத்தைத் தொடர்ந்து இந்தியா, பிரிட்டன், சீனா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகள் இந்த வானூர்திக்குத் தடை விதித்திருந்தன. ஆனால், இந்த வானூர்தியில் குறைபாடு இருப்பதாக ஆதாரம் இல்லை என்று கூறி அமெரிக்கா தடைவிதிக்க மறுத்தது. இந்த நிலையில், எதியோப்பியாவில் விபத்துத் தொடர்பாகப் புதிய ஆதாரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இதனால், இந்த வானூர்திகளை நிறுத்துவதற்கு அமெரிக்காவும் முடிவெடுத்தது.
எதியோப்பிய வானூர்தி விபத்துக்குள்ளான பகுதியில் மேற்கொண்ட விசாரணை யின் போது, சில மாதங்களுக்கு முன்பு விபத்துக்குள்ளான இந்தோனேசிய வானூர்தி விபத்துக்கும் தற்போதைய விபத்துக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருப்பது தெளிவாகத் தெரிகிறது.



அதாவது இரண்டு விபத்துகளிலும் வானூர்தி பறக்கத் தொடங்கிய பிறகு வான் வெளியில் அதன் வழித்தடத்தில் சென்ற பாங்கு கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருந்திருக்கிறது என்றார் அமெரிக்காவின் பெடரல் வானூர்திப் போக்குவரத்து நிர்வாகச் செயல் அதிகாரி டானியல் எல்வேல்.
இதையடுத்து இந்தோனேசியா ஏர்லைன்ஸ் நிறுவனம் சார்பில் போயிங் நிறுவனம் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.



வடகொரியத் தலைவர் கிம் ஜோங் உன்னின் முகத்தை வடிவமைத்து அவருடைய வாய்ப் பகுதியில் விரலியை (pen drive) செலுத்தக்கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்திலுள்ள அஸ்டின் மாநாட்டு மையத்தில் இது காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.




## முடங்கியது முகநூல்!

நியூயோர்க்.மார்ச்.15
உலகின் பல்வேறு நாடுகளில் முகநூல் நேற்று முன்தினம் இரவு சிறிது நேரம் முடங்கியது. உலகில் ஆதிக்கம் செலுத்திவரும் முகநூல் உலகின் பல்வேறு இடங்களில் நேற்றுமுன்தினம் இரவு திடீரெனச் சிறிது நேரம் செயல்பாட்டை இழந்தது பலரையும் பாதித்தது. பயன்பாட்டாளர்கள் தங்கள் கணக்குகளுக்குள் நுழைய முடியாமல் தவித்தனர். பின்னர் சிறிது நேரம் கழித்து, 'தொழில் நுட்பக் கோளாறு காரணமாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. முகநூல் விரைவில் செயல்பாட்டுக்கு வரும். உங்களது காத்திருப்புக்கு நன்றி' எனும் குறுஞ்செய்தி அனைவருக்கும் கிடைத்துள்ளது.
தொழில்நுட்ப உலகில் 24 மணி நேரத்தில் நடந்த இரண்டாவது வலைத்தள முடக்கம் இதுவாகும். முன்னதாக நேற்று அதிகாலை கூகுள் நிறுவனத்தின் 'கூகுள் டிரைவ்', 'ஹங் அவுட்' போன்ற தளங்கள் சிறிது நேரம் செயற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### இந்தியத் தேர்தல் களம்

# கட்சிக் கூட்டங்களுக்கு மக்களை வாகனங்களில் அழைக்கத் தடை

மதுரை,மார்ச்.15
தேர்தல் பரப்புரைக் கூட்டங்களுக்கு மக்களை வாகனங்களில் அழைத்துச் செல்ல இந்திய உயர் நீதிமன்ற மதுரைக் கிளை தடை விதித்து உத்தரவிட்டது. உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் இது குறித்த பொதுநல வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதில் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், வாக்குக்குப் பணம் கொடுப்பதும், பெறுவதும் குற்றம் என்பதை மக்களும், வேட்பாளர்களும் உணர வேண்டும். அது தவிர்க்கப்பட்டால் மட்டுமே நியாயமாகத் தேர்தல் நடைபெறும். ஆகவே, வாக்குக்குப் பணம் கொடுப்பதும், பெறுவதும் குற்றம் என்பதைச் செய்தித்தாள், ஊடகங்கள் வழியாக விளம்பரப்படுத்த உத்தரவிட வேண்டும். பணம் கொடுப்பதைத் தடுக்கும் கண்காணிப்புக் குழுக்களை அதிகப்படுத்த உத்தரவிட வேண்டும். வாக்குக்குப் பணம் கொடுப்பது குறித்து முறைப்பாடு அளிப்பதற்குத் தொலைபேசி இலக்கத்தை விளம்பரப்படுத்த வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், அரசியல் கட்சியினரின் பொதுக் கூட்டங்கள், பரப்புரைக் கூட்டங்களுக்கு மக்களை வாகனங்களில் அழைத்துச் செல்லவும் தடை விதிக்கப்படுகிறது என உத்தரவிட்டனர்.

# சிரியாவில் உச்சக் கட்டப் போர் ஐ.எஸ். ஆயுததாரிகள் சரண்

டமஸ்கஸ்,மார்ச்.15

சிரியாவில்ஐஎஸ். ஆயுததாரிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையே கடும் போர் நடக்கிறது. இந்த நிலையில், ஐ.எஸ். ஆயுததாரிகள் 3 ஆயிரம் பேர் அரச படைகளிடம் சரணடைந்தனர்.



சிரியாவின் டெயிர் எஸ் ஜோர் மாகாணத்தில் உள்ள பாகுஸ் பகுதி ஐ.எஸ். அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள இறுதிப் பகுதியாக இருக்கிறது. அதை அவர்களிடம் இருந்து மீட்பதற்கு அமெரிக்கக் கூட்டுப்படை களுடன் இணைந்து. சிரிய இராணுவம் அங்கு கடும் தாக்குதல்களை நடத்தி வருகிறது. தோல்வியடையும் நிலையிலுள்ள ஐ.எஸ். ஆயுததாரிகள் பலர் இராணுவத்திடம் சரணடைந்து வருகிறார்கள். அந்த வகையில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 3 ஆயிரம் ஐ.எஸ். ஆயுதாரிகள் சிரிய இராணுவத்திடம் சரணடைந்தனர்.





அமெரிக்கத் தலையீட்டாலும், தடைகளாலும் வெனிசுலாவின் அரசியல், பொருளாதாரம் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன. வெனிசுலா மக்கள் வறுமையில் வாடுகின்றனர். அன்றாடத் தேவைகளுக்கான நீரைப் பெற்றுக்கொள்ள இயலாத நிலை உருவாகியுள்ளது. வாய்க்கால்களில் வழிந்தோடும நீரை எடுத்துத் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்கள்.

# மாலாவியில் சாவுகள் அதிகரிப்பு

லிலொங்வ்வி,மார்ச்.15

மலாவியில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கிச் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 56 ஆக அதிகரித்துள்ளது என பேரிடர் மீட்புக்குழு அதிகாரிகள் தெரிவித்தனர். தென்கிழக்கு ஆபிரிக்க நாடான மலாவியில் பலத்த காற்றுடன் கடும்மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. தாழ்வான தரைப் பகுதிகள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. சுமார் ஒரு லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு முக்கிய பாலங்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளதால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது. மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து மழை வெள்ளத்தில் சிக்கி 23 பேர் உயிரிழந்தனர் என்றும், பலரைக் காணவில்லை என்றும் முதல் கட்ட தகவல் வெளியானது. ஆனால், இந்த வெள்ளத்தில் சிக்கிச் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 56 ஆக அதிகரித்துள்ளது என்று தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.



பிறேசிலில் பயங்கரம்

# பாடசாலைக்குள் நுழைந்து பாலகர்கள் மீது துப்பாக்கிச் சூடு

றியோடி ஜெனிரோ,மார்ச்.15

பிறேசிலின் ஆரம்பப் பள்ளி ஒன்றுக்குள் புகுந்த ஆயுதம் தாங்கிய இரண்டுநபர்கள் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 5 குழந்தைகள் உட்பட 9 பேர் சாவடைந்தனர். 17 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

காயமடைந்தவர்களில் பெரும்பாலானோர் குழந்தை கள். 'ரால் பிறேசில்' என்கிற ஆரம்பப் பள்ளியில் நடந்த இந்தக் கொடூரச் சம்பவம் அங்கு அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பள்ளி ஆரம்பித்த சிறிது நேரத்தில் முகமூடி அணிந்து கையில் துப்பாக்கியுடன் வந்த இரண்டு இளம் நபர்களே இந்தத் தாக்குதலை நடத்தினர்.

தாக்குதல் நடத்தியவர்களைத் தேடும் பணியில் அந்த நாட்டுப்பொலிஸார் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.




2011ஆம் ஆண்டில் இதே போன்று வேறொரு சிறுவர் பாடசாலையிலும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு அதில் 12 குழந்தைகள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# இன்றைய நாள்

**மேடம்:** சமயோசிதமாக செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு நிறைவேறும். பணவரவில் கொஞ்சம் சேமிப்பீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**இடபம்:** மனதில் நம்பிக்கை குறைவு ஏற்படலாம். தொழிலில் உற்பத்தி விற்பனை சீரான லாபம் இருக்கும். சேமிப்பு திடீர் செலவால் கரையும். பெண்கள் நகை, பணத்தை கவனமுடன் கையாளவும்.

**மிதுனம்:** பேச்சு, செயலில் இனிமை நிறைந்திருக்கும். தொழில் வியாபாரம் செழிக்க நவீன மாற்றம் செய்வீர்கள். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும்.

**கடகம்:** யாருக்கும் வாக்குறுதி அளிக்க வேண்டாம். கூடுதல் உழைப்பால் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி உண்டாகும். மிதமான பணவரவு இருக்கும். பணியாளர்கள்நிர்வாகத்தின் சட்ட திட்டத்தை மதிப்பது நல்லது.

**சிம்மம்:** விடாமுயற்சியால் பிரச்சினைக்கு தீர்வு காண்பீர்கள். நண்பர் இயன்ற அளவில் உதவுவார். தொழில் வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை அபிவிருத்தியாகும்.

**கன்னி:** மனதில் பக்தி எண்ணம் மேலோங்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சீரான அளவில் இருக்கும். திடீர் செலவால் சேமிப்பு கரையும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**துலாம்:** நகைச்சுவை உணர்வுடன் பேசுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க அதிக அளவில் பாடுபடுவீர்கள். ஆதாயம் உயரும். கடனில் ஒரு பகுதி அடைபடும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**விருச்சிகம்:** முன்யோசனையுடன் நடப்பது அவசியம். தொழில், வியாபாரத்தில் விழிப்புடன் செயல்படவும். லாபம் சுமாராக இருக்கும். பிள்ளைகளின் வழியில் செலவு ஏற்படலாம்.

**தனுசு:** எதிரி கூட நட்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் உருவான இடையூறு விலகும். விற்பனை அதிகரிப்பால் வருமானம் உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**மகரம்:** வாய்ப்புக்களை சரியாக பயன்படுத்தி முன்னேறுவீர்கள். தொழில் வியாபார தொடர்பு பலம் பெறும். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**கும்பம்:** திட்டமிட்ட பணிநிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். தொழில்வியாபாரம் மந்த நிலையில் இயங்கும். லாபம் சுமாராக இருக்கும்.

**மீனம்:** சிலரது பரிகாச பேச்சால் சங்கடத்திற்கு ஆளாகலாம். திட்டம் நிறைவேறும் முன் முடிவு பற்றி சிந்திக்க வேண்டாம். தொழில் வியாபாரத்தில் லாபம் மிதமாக இருக்கும்.



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி



சென்.ஜோன்ஸ் கல்லூரி

# சென்.ஜோன்ஸ் – மத்திய கல்லூரி ஒரு நாள் ஆட்டத்தில் மோதத் தயாராகிறன

யாழ்ப்பாணம், மார்ச் 15
யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான 17ஆவது 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட ஒரு நாள் ஆட்டம் நாளை சனிக்கிழமை, யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையில் இதுவரை நடைபெற்ற 16 ஆட்டங்களில், யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 9 ஆட்டங்களிலும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 7 ஆட்டங்களிலும் வெற்றி பெற்றுள்ளன.
கடந்த வியாழன், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் வடக்கின் போர் என்று வர்ணிக்கப்பட்ட, மேற்படி இரு அணிகளுக்கும் இடையிலான 113ஆவது மாபெரும் துடுப்பாட்டம் சமநிலையில் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.23)

## இன்றைய ஆட்டங்கள்

நாவாந்துறை கலைவாணி விளை யாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளை யாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

★★★

நாவாந்துறை கலைவாணி விளை யாட்டுக்கழகம் நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து அரியாலை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ஒ.23)

## சென்.ஜேம்ஸ் வி.க. வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 15
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில், ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஊர்காவற்றுறை சென்.ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அராலி திருமகள் விளையாட்டுக்கழக அணி மோதியது. ஆட்டநேர நிறைவில் 3:2 என்ற கோல் கணக்கில் ஊர்காவற்றுறை சென்.ஜேம்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. (ஒ.23)

## கலைவாணி மகளிர் எல்லேயில் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 15
தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுத் தொடரில், மகளிருக்கான எல்லேப் போட்டியில் அளவெட்டி கலைவாணி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுள்ளது.
சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணியும், கலைவாணி விளையாட்டுக்கழக அணியும் இறுதிப் போட்டியில் மோதின. அளவெட்டி கலைவாணி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. (ஒ.63)



## கபடிப் போட்டி முடிவுகள்

சாவகச்சேரி, மார்ச் 15
தென்மராட்சி பிரதேச விளை யாட்டுப் போட்டிகளில் கபடிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் கச்சாய் கலைமகள் அணியும் பெண்கள் பிரிவில் தச்சன்தோப்பு காந்தி அணியும் வெற்றி பெற்றுள்ளன.
பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான குழுநிலைப் போட்டிகள் நடைபெற்ற வருகின்றன. கபடிப் போட்டியின் இறுதிப் போட்டிகள் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.
ஆண்கள் பிரிவில் கச்சாய் கலைமகள் அணியும் சாவகச்சேரி டிறிபேக் ஸ்ரார் அணியும் களமிறங்கின. போட்டியில் கலைமகள் அணி 36 புள்ளிகளையும் டிறிபேக் ஸ்ரார் 27 புள்ளிகளையும் பெற்றன.
பெண்கள் பிரிவில் தச்சன்தோப்பு காந்தி அணியும் மட்டுவில் வளர்மதி அணியும் களமிறங்கின. போட்டியில் தச்சன்தோப்பு காந்தி அணி 23 புள்ளிகளையும் வளர்மதி அணி 10 புள்ளிகளையும் பெற்றன. இதனையடுத்து ஆண்கள் பிரிவில் கச்சாய் கலைமகள் அணியும், பெண்கள் பிரிவில் தச்சன்தோப்பு காந்தி அணியும் வெற்றிபெற்றன. (ஒ.9)



இலங்கைத் துடுப்பாட்டச் சபையினால் வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளின் அபிவிருத்திக் குழு உறுப்பினராக, வவுனியா மாவட்ட துடுப்பாட்டச் சங்கத் தலைவரும் வடக்கு மாகாண மாவட்ட துடுப்பாட்ட சங்க உப தலைவருமாகிய றதீபன் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதம், இலங்கை துடுப்பாட்டச் சபை அலுவலகத்தில் வைத்து துடுப்பாட்டச் சபையின் செயலர் மோகன் டி சில்வாவால் வழங்கி வைக்கப்பட்டது. (ஒ.23)

## சிவானந்தா வி.க. வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 15
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில், சூறாவத்தை நியூவோரியஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழக அணி மோதியது. ஆட்டநேர நிறைவில் 3:2 என்ற கோல் கணக்கில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. (ஒ.23)



# டெஸ்ட் கிரிக்கெட்டிலும் 'பிரீஹிட்' அறிமுகம்

கிரிக்கெட் போட்டிகளில் விதிமுறைகளை மாற்றுவதிலும், புதிய நுணுக்கங்களை புகுத்துவதிலும் லண்டனை மையமாக கொண்டு செயற்படும் எம்.சி.சி. உலக கிரிக்கெட் சபையில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த கட்டுப்பாட்டு சபையில் இந்நாள், முன்னாள் வீரர்கள், நடுவர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

இந்த நிலையில் மைக் கேட்டிங் தலைமையிலான எம்.சி.சி. உலக கிரிக்கெட் குழுவின் ஆலோசனை கூட்டம் பெங்களூருவில் இடம்பெற்றது. இதன்போது எம்.சி.சி. பன்னாட்டு டெஸ்ட் கிரிக்கெட் தொடர்பாக பன்னாட்டு கிரிக்கெட் சபையிடம் சில பரிந்துரைகளை முன்வைத்தது.

**நேரத்தை கணக்கிட ஸ்கோர் போர்டில் இலத்திரணியல் கடிகாரம்**

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் தாமதமாக பந்து வீசும் முறைப்பாடு அதிகமாக எழுகிறது. இதைக் கவனத்தில் கொண்டு நேரத்தை கணக்கிட ஸ்கோர் போர்டில் இலத்திரணியல் கடிகாரம் பொருத்தப்படும்.

இதன் மூலம் பந்துப்பரிமாற்றங்கள் முடிவடைந்ததும் 45 செக்கன்களில் இருந்து கவுண்ட்டவுன் ஆரம்பிக்கும். இந்த நேரம், பந்தை எதிர்கொள்ளும் புதிய துடுப்பாட்ட வீரருக்கு 60 செக்கன்களும், மாற்று பந்து வீச்சாளராக வருபவருக்கு 80 செக்கன்களும் கொடுக்கப்படும்.

கவுண்ட்டவுன் முடியும்போது துடுப்பாட்டம் அல்லது பந்து வீச்சுக்கு இரண்டு அணியின் தரப்பினரும் தயாராக இருக்க வேண்டும். கவுண்ட்டவுன் முடிந்ததும் ஆட்டத்தை தொடங்காவிட்டால் எச்சரிக்கை விடுக்கப்படும்.

அத்துடன் விதிமீறல் தொடர்ந்து நீடித்தால், சம்பந்தப்பட்ட அணியை தண்டிக்கும் வகையில் எதிரணிக்கு 5 ஓட்டங்கள் வழங்கப்படும்.

மேலும் இலக்குகள் வீழ்த்தப்படும் போதும் இதே நேரம் முறை பின்பற்றப்படும். ஆனால் ஆடுகளத்தில் இருந்து வீரர்களின் ஓய்வறை இருக்கும் தூரத்தை வைத்து இந்தக் கால அளவில் மாற்றம் இருக்கும்.

**முறையற்ற பந்து வீச்சுக்கு 'பிரீஹிட்'**

ஒருநாள் போட்டி மற்றும் ரி- 20 போட்டிகள் போன்று டெஸ்ட் கிரிக்கெட்டிலும் முறையற்ற பந்து வீசினால் 'பிரீஹிட்' வழங்கப்படும்.

**ஒரே மாதிரியாக தரமான பந்துகளை பயன்படுத்தல்**

தற்போது டெஸ்ட் கிரிக்கெட்டில் எஸ்.ஜி. கூக்கபுரா, டியூக்ஸ் போன்ற பந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. அடுத்ததாக உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் ஆரம்பமாகவுள்ளதால் அனைத்து டெஸ்ட் போட்டிகளுக்கும் ஒரே மாதிரியாக தரமான பந்துகளை பயன்படுத்த வேண்டும். இதற்காக டியூக்ஸ் வகை பந்தை பரிந்துரை செய்துள்ளது.



டெல்லி கேப்பிட்டல்ஸ் அணியின்

# ஆலோசகராக கங்குலி நியமனம்

ஐ.பி.எல். ரி-20 லீக்கின் 12ஆவது தொடர் இடம்பெறவுள்ளது. இதில் முதல் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ்- ரோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதுகின்றன.

டேர்டெவில்ஸ் என்ற பெயரில் விளையாடி வந்த அணி, தற்போது டெல்லி கேப்பிட்டல்ஸ் அணியாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அணித் தலைவராக இளம் வீரர் ஷ்ரேயாஸ் அய்யர் உள்ளார். பயிற்சியாளராக ரிக்கி பொண்டிங் உள்ளார். இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் கங்குலி ஆலோசகராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். "டெல்லி கேப்பிட்டல்ஸ் அணியுடன் இணைய இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது" என கங்குலி தெரிவித்துள்ளார்.




# இலங்கை அணிக்கு அடுத்த தோல்வி

இலங்கை - தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையில் இடம்பெற்ற நான்காவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்கா அணி 6 இலக்குகளால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா அணி முதலில் இலங்கை அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக பெர்னாண்டோ, தரங்க களமிறங்கினர். அணி 13 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது தரங்க 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். இணைந்தார் ஒசாட் பெர்னாண்டோ. அணி 100 ஓட்டங்களை எட்டுவதற்குள் 7 இலக்குகளை இழந்து தடுமாறியது. அதிகபட்சமாக இசுறு உதான 78 ஓட்டங்களையும், அவிஸ்க பெர்னாண்டோ 29 ஓட்டங்களையும் பெற்றனர். அணி 39.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 189 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

பந்து வீச்சில் நோட்ரி 3 இலக்குகளையும், பெலுக்குவையோ 2 இலக்குகளையும், ஸ்ரெயின், நிகிடி, டுமினி, சம்ஸி தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக டி குக், ஹன்றிக்ஸ் களமிறங்கினர். அணி 21 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஹன்றிக்ஸ் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். வந்தார் மக்ரம். அதிகபட்சமாக டி குக் 51 ஓட்டங்களையும், டு பிளசிஸ் 43 ஓட்டங்களையும் பெற்றனர். மில்லர் 25 ஓட்டங்களுடனும், டுமினி 31 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்திலிருக்க அணி 4 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. ஆட்ட நாயகனாக இலங்கை அணி வீரர் இசுறு உதான தெரிவு செய்யப்பட்டார்.

உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்னர்

# இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளரில் மாற்றம்

இலங்கை அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இந்த நிலையில் 5 ஒருநாள் போட்டிகளில் நான்கு போட்டிகள் முடிவடைந்த நிலையில் இலங்கை அணி தொடர் தோல்விகளை சந்தித்து வருகின்றது. இந்தத் தொடரின் பின்னர் உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்னதாக இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளரையும், முகாமையாளரையும் மாற்றுவது குறித்து இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஆராய்ந்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அதிகாரிகள் இது குறித்து விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின்பெர்னாண்டோவைச் சந்தித்து பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டனர். விளையாட்டுத்துறை அமைச்சருடனான சந்திப்பின்போது தலைமைப் பயிற்றுவிப்பாளர் மற்றும் முகாமையாளர் குறித்து நீண்டநேரம் ஆராயப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன

இது குறித்து ஹரின் தெரிவிக்கையில்;

தலைமைப்பயிற்றுவிப்பாளர் முகாமையாளர் குறித்து பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன என குறிப்பிட்டுள்ள அவர் எனினும் இது குறித்து கருத்து தெரிவிக்க மறுத்துள்ளார்.

நான் இது பற்றி கருத்துகூறமுடியாது என தெரிவித்துள்ள அமைச்சர் உலக கிண்ணப்போட்டிகளுக்கான திட்டமிடல்களில் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை ஈடுபட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

# ஹதுருசிங்க இலங்கைக்கு அழைப்பு

இலங்கை - தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையில் இடம்பெற்று வரும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் தென்னாபிரிக்காவில் இடம்பெற்று வருகின்றது. இதில் நான்கு போட்டிகள் முடிவடைந்த நிலையில் தென்னாபிரிக்கா அணி 4:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றி முன்னிலையில் உள்ளது. இந்த நிலையில் இலங்கை அணியின் தலைமை பயிற்றுவிப்பாளர் சண்டிக ஹதுருசிங்க இலங்கைக்கு அழைக்கப்பட்டுள்ளார். ஒருநாள் போட்டியின் பின்னரே இவர் இலங்கைக்கு அழைக்கப்படுவதாக இருந்தது எனினும் இன்னுமொரு போட்டி நிலுவையில் இருக்க அவர் திரும்ப இலங்கைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

புதிதாக தெரிவு செய்யப்பட்ட இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை ஹதுருசிங்க குறித்து பொறுமையிழந்து விட்டது என அதன் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்




தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் ஐந்து போட்டிகளில் இதுவரை நான்கில் இலங்கை அணி தோல்வியடைந்துள்ளது என தெரிவித்துள்ள அவர் உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு இன்னமும் மூன்று மாதங்கள் உள்ள நிலையில் ஹதுருசிங்க அணியின் நிலையை மாற்றுவதற்கு என்ன திட்டம் வைத்துள்ளார் என கட்டுப்பாட்டுச்சபை அறியவிரும்புகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

இரு அணிகளுக்குமிடையில் இடம்பெறவுள்ள ரி-20 போட்டிகளுக்கு பயிற்றுவிப்பாளராக ஸ்டீவ் ரிக்சன் பணியாற்றவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஜோகோவிக் அதிர்ச்சித் தோல்வி

இன்டியன் வேல்ஸ் பன்னாட்டு ரென்னிஸ் போட்டி அமெரிக்காவில் இடம்பெற்று வருகின்றது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டம் ஒன்றில் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள ஜோகோவிக், 39ஆம் நிலை வீரரான ஜேர்மன் நாட்டு வீரர் பிலிப் கோல்ஸ்கிரீபரை சந்தித்தார்.

இவர்கள் இருவருக்குமான ஆட்டம் முதல் நாள் மழையால் பாதிக்கப்பட்டு மறுநாளில் தொடர்ந்த ஆட்டத்தில் 5 முறை சம்பியனான ஜோகோவிக் 4:6, 4:6 என்ற நேர் செற் கணக்கில் பிலிப் கோல்ஸ்கிரீபரிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறினார். ஜோகோவிக்கிடம் தொடர்ச்சியாக 11 முறை தோல்வி கண்ட கோல்ஸ்கிரீபர் அவருக்கு எதிராக முதன் முறையாக வெற்றி பெற்றுள்ளார்.

மற்றொரு ஆட்டத்தில் தரவரிசையில் 2ஆவது இடத்தில் உள்ள ரபேல் நடால் 6:3, 6:1 என்ற நேர் செற் கணக்கில் 26ஆம் நிலை வீரரான ஆர்ஜென்டினாவின் செபாஸ்டியன் ஸ்வார்ட்ஸ்மானை தோற்கடித்து 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.






## இன்டியன்ஸ் வேல்ஸ்

# நவோமி ஒசாகா அதிர்ச்சித் தோல்வி

இன்டியன் வேல்ஸ் பன்னாட்டு ரென்னிஸ் போட்டி அமெரிக்காவில் இடம்பெற்று வருகின்றது.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முதல் நிலை வீராங்கனையான நவோமி ஒசாகா சுவிற்சர்லாந்து அணி வீராங்கனை பெலின்டா பென்சிச்சை எதிர் கொண்டார்.

இதில் ஒசாகா 3:6, 1:6 என்ற நேர் செற் கணக்கில் தோல்வியடைந்தார். தொடர்ச்சியாக 11ஆவது வெற்றியைப்பெற்ற பெலின்டா பென்சிச் காலிறுதிக்கு முன்னேறினார். ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் பட்டத்தை கைப்பற்றிய பின்னர் நவோமி ஒசாகா சந்தித்த 2ஆவது தோல்வி இதுவாகும்.

MAJESTIC CINEPLEX


மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள்
011 5 999 999
CEYLON THEATRES
www.ceylontheatres.lk
MajesticCineplexSL

போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்
P.உமாசங்கர்
வளவாளர்களின் விசேட கருத்தரங்கு
பொது அறிவு
(தேசிய, சர்வதேச போக்குகள் மிக நவீன விடயங்களுடன் புதிய பரீட்சை மாற்றத்திற்கமைவாக)
S.அன்ரன் பெரேரா
(SLAS, SLEAS, பதிவாளர், வரிமதிப்பீட்டாளர், புள்ளி விபரவியலாளர், சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சைகளுக்கு ஏற்ப)
17.03.2019 ஞாயிறு
9.00 a.m - 4.00 p.m
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
077 469 6695, 077 365 3940
077 741 7143, 071 813 0390

விற்பனைக்குண்டு
டோமென் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு.
45 நாள் ஊசி போட்டது.
077 959 2945

வாடகைக்கு
நல்ல நிலையில் உள்ள Hiace வாகனம் மாதாந்த / நாளாந்தம் வாடகைக்கு குறைந்த விலையில் விடப்படும்.
077 026 1966

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1552 சீட்டிழுப்பு திகதி 14.03.2019
வெற்றி இலக்கங்கள் 03 18 54 67 Y
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட் ரூ 27,924,012/=

ராசி அதிர்ஷ்டம்
திகதி 14.03.2019 வெற்றி வாரம் 2477 வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 04 28 44 59
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,151,182/=
15.03.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும் வெற்றி இலக்கம் : 35096

போட்டிப் பரீட்சை விஷேட வகுப்புக்கள்
அனைத்து பரீட்சைகளுக்கும் உரிய அனைத்து வினாத்தாள்களுக்கும் உரிய விடயங்கள் வழமையான விரிவுரையாளர்களுடன் துறைசார் வளவாளர்களினால்
பிரதி சனிக்கிழமை வகுப்பு
8.30-1.30 வரிமதிப்பீட்டாளர்
10.00-04.00 பதிவாளர் (Open)
1.30-1.30 பதிவாளர் (Limited)
10.00-2.30 சட்டமாணி
10.00-2.30 நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர் (Open)
11.00-200 பல்கலைக்கழக உளச்சார்பு
பிரதி ஞாயிற்றுகளில்
09.00-3.30 SLAS Open/Limited SLEAS Open/Limited
9.00-2.00 ஆசிரியர் தெரிவு
10.00-2.30 நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர்
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 554 இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,965,020/-
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.03.14
வெற்றி இலக்கங்கள் 22 24 28 73 A

SLAS/ SLEAS (Ope/Ltd) கருத்தரங்கு தொடர்
பிரதி சனிக்கிழமைகளில் மட்டும்
P.கமல்தாசன் மற்றும் துறைசார் வளவாளர்
R.C.அமல்ராஜ்.
K.குமணன்
K.தெய்வேந்திரம்,
A.சுபாகரன்,
A.K.கீர்த்திராஜன்.
வரிமதிப்பீட்டாளர், பதிவாளர், நீதிமன்ற எழுதுநர், ஆசிரியர், புள்ளி விபரவியலாளர் போட்டிப் பரீட்சைகளுக்குத் தனித்தனியாக இடம்பெறும்.
இவ்வளவாளர் சனிக்கிழமை மட்டுமே
நாவலர் கல்வி நிறுவனம்
பருத்தித்துறை – ஆனைப்பந்தி
077 111 6739,
076 166 1986

காணி/கட்டடம் தேவை
கல்வி நிறுவனம் ஒன்றுக்கு யாழ்ப்பாணத்தில்
காணி/ கட்டடம்
குத்தகைக்கு/ வாங்குவதற்கு தேவை.
076 860 2666

தென்னிந்திய யாத்திரை
தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரியூடான யாத்திரை
ஆரம்பம் 22.04.2019 யாத்திரீகர் 10 நாள்கள் 16
தரிசிக்கும் இடங்கள் :- மலைக்கோட்டை விநாயகர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காளகஸ்திரி, திருவெண்ணா மலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவானைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷானம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழ பகவான், செவ்வாய், ராகு, கேது, சனி பகவான், திருநள்ளாறு, நளன்குளத்தில் நீராடல், தோணியப்பர், குருவாயூர், மதுரை மீனாட்சி, மைசூர் சாமுண்டீஸ்வரி, நந்திகோவில், கன்னியாகுமரி, சுசீந்திரம், மனக்குழவிநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி பிள்ளையார், பட்டி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 60 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR, ஜெயலலிதா, அண்ணா சமாதிகளையும் மைசூர் பலஸ், பிருந்தாவனம் காடின், அப்துல் கலாமின் மணிமண்டபமும் நாமக்கல் ஆஞ்சநேயர், கொல்லிமலையும் காணலாம்.
தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை :- இருவழி விமான ரிக்கட், மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி. இவை அனைத்தும் எமது சேவை.
மேலும் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும். சகல ஆலயங்களும் பூசை நேரத்தில் தரிசிக்கலாம்.(இத்துடன் யாழ் - கொழும்பு, யாழ் போக வர வாகன வசதி செய்து தரப்படும்)
தொடர்புகளுக்கு: கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
# 59, 3/6, செட்டியார்தெரு, கொழும்பு -11,
T.P -077 768 0102, 077 736 2154
E-mail: sriranganathan2601@gmail.com/ www.sridevipilgrims.com/ f:sridevi ranganathanthuraiappa

Shifa Hospitals Since 1971
மருத்துவ சேவையில் 48 ஆண்டுகள்
யாழ்பாணத்தில் (Jaffna) நடைபெறும் மாபெரும் மருத்துவ கண்காட்சியில்...
தென் தமிழகத்தில் 48 ஆண்டுகள் அனுபவம் வாய்ந்த
திருநெல்வேலி
ஷிபா மருத்துவமனை
பங்கேற்பு
கீழ்கண்ட சிறப்பு சிகிச்சைகள் சலுகை கட்டணத்தில் செய்யப்படுகின்றன
ANGIOPLASTY (ஆஞ்சியோபிளாஸ்டி)
OPEN HEART SURGERY (பைபாஸ் அறுவை சிகிச்சை)
CANCER SURGERIES (புற்றுநோய் அறுவை சிகிச்சைகள்)
(BREAST, BLADDER, UTERUS, CERVIX, SKIN, STOMACH, MOUTH, PROSTATE)
(மார்பகம், நீர்ப்பை, கர்ப்பப்பை, கர்ப்பப்பை வாய், தோல், வயிறு, வாய், ப்ராஸ்டேட்)
HIP & KNEE REPLACEMENT (இடுப்பு & மூட்டு மாற்று அறுவை சிகிச்சை)
BRAIN AND SPINE SURGERIES (மூளை மற்றும் தண்டுவட அறுவை சிகிச்சைகள்)
GENERAL & LAPAROSCOPIC SURGERY (பொது மற்றும் நுண்துளை அறுவை சிகிச்சை)
KIDNEY TRANSPLANT (சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை)
KIDNEY STONE (ESWL) (சிறுநீரக கல் உடைப்பு சிகிச்சை)
PROSTATE ENLARGEMENT (ப்ராஸ்டேட் அறுவை சிகிச்சை) (TURP)
DIALYSIS (டயாலிசிஸ்)
VARICOSE VEIN - RFA (கால் நரம்பு சுருட்டு லேசர் சிகிச்சை)
முன்பதிவுக்கு
07655 67178 | +91 98849 58707 | +91 94431 52816
நாள் 15 வெள்ளி 16 சனி 17 ஞாயிறு மார்ச் 2019 10 AM to 7 PM STALL No A17
இடம் : வீரசிங்கம் ஹால், யாழ்பாணம்.
info@shifahospitals.com www.shifahospitals.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.